# சிவ ஐக்கியம்




அமரர் புலவர் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் D. Ac.

அவர்களின்

## நினைவு ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# சமர்ப்பணம்

**எங்களை இவ்வுலகில் நல்லோராக்கி**
**சீர் பெற வாழவைத்த - எங்கள்**
**அருமைத் தந்தையாரின் - பாத**
**கமலங்களுக்கு சமர்ப்பணம்**



## திதி வெண்பா

ஆண்டது வியமாம் பேர்ஆடி
பூர்வசுக்லபக்ஷ நவமிபுகழ் விசாகத்தில்
பேராளன் வைத்தீஸ்வரக் குரு பெற்ற மகன்
வேதமுணர் புலவன்சோமாஸ்கந்தக்குரு உற்றான் சிவபதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவபூமியில்

10.03.1932

சிவனடியில்

03.08.2006

அமரர்

புலவர் சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக்குருக்கள் D. Ac

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைக்கூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலார் கூப்புவர் தம் கை.

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் மேவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் எவருமில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் வீடு பன்னி
திருவானைக் காவுடைய செல்வா உந்தன்
அத்தா உன்பொற்பாதம் அடையப் பெற்றேன்
அல்ல கண்டன் கொண்டடியேன் என்செய்கேனே.

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடமை யெல்லாமுங்
குன்றே அணையாய் யென்னை யாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டேல்
எண்டாள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்சே யம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேனி சையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசர்க்
காட் செய்மின் குழாம் புதுந்
தண்டங் கடந்த பொருளை வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
மண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக
இந்துவாழ் சடையானாரும் ஆனந்த எல்லையில்
தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

பிறப்பால் குருக்கள் , படிப்பால் புலவர் , தொழிலால் பூசகர் , சிந்தையால் வைத்தியர் , பொழுதுபோக்கால் சோதிடர் , தன்முனைப்பால் மின்பொறியியலாளர் , தொண்டால் ஆசிரியர் , வாழ்வியியலில் ஓர் சம்சாரி , சமூகத்தில் பொறுப்புள்ள தந்தையும் பாசமிகு பேரனுமாகிய அன்னார் சிவபூமியாம் திருக்கோணமாமலையில் பேராளன் வைத்தீஸ்வரக்குருக்கள் (கோணேஸ்வர ஆலயம் , சல்லி அம்மன் ஆலயம் , மடத்தடி முத்துமாரியம்மன் ஆலயம் , சமாது தங்கவிநாயகர் ஆலயம் , தெய்வானைப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் பரம்பரை வழிவந்த ஆதீனகுரு) தங்க மகளாம் தங்கநாச்சியார் தம்பதிகளின் ஏகபுத்திரராக 10.03.1932ல் அவதரித்தார்.

திருக்கோணேஸ்வர சந்தான பரம்பரையில் தோன்றிய இவருக்கு சிவபெருமானின் சிறப்பு மூர்த்தமாகிய தோற்றத்தினைக் குறிக்கும் **"சோமாஸ்கந்தர்"** எனும் நாமத்தினை பெற்றோரும் சுற்றோரும் சூட்டி மகிழ்ந்தனர். பெற்றோருக்கு மட்டுமன்றி விஸ்வலிங்க குருக்கள் சரஸ்வதியம்மா , சபாபதி ஐயர் மனோன்மணி அம்மா என்ற இரு அத்தைமார் குடும்பத்துக்கும் அருமைக் குழந்தையாக வளர்ந்தார். இவரோடு கூடிப்பிறந்தோர் பலரல்ல பத்மாவதி அம்மா என்னும் ஒருவர் மட்டும்தான். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருக்கோணமலை பெருந்தெரு மெதடிஸ்ட் மிஸன் பாடசாலையிலும் (விக்னேஸ்வரா) தொடர்ந்து இராமகிருஸ்ண இந்துக் கல்லூரியிலும் கற்றார். 1948 இல் தந்தையின் மறைவின் பின் அவரால் நடாத்தி வரப்பட்ட ஆலய பொறுப்புகளையும் அவரது பேரனார் சிவஸ்ரீ ஏ.வை விஸ்வலிங்கக் குருக்கள் அவர்களின் ஆலயப் பொறுப்புகளையும் கையேற்று திறம்பட நடாத்தி வந்தார். அந்த ஆலயங்களாவன திருக்கோணேஸ்வரர் ஆலயம் , சல்லி அம்மன் ஆலயம், மடத்தடி முத்துமாரியம்மன் ஆலயம், சமாது தங்கவிநாயகர் ஆலயம், தெய்வானைப் பிள்ளையார் ஆலயம், உப்புவெளி பெரியதொடுவாய்ப் பிள்ளையார் மற்றும் பத்திரகாளி ஆலயம்.

இளமையிலேயே தந்தையை இழந்த இவர் தமது தாயாரின் அரவணைப்பிலும் , பேரனார் ஏ.வை. விஸ்வலிங்கக் குருக்களின் மேற்பார்வையிலும் கல்வியிலே சிறந்து சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வல்லவராக விளங்கினார். திருக்கோணமலையில் ஆங்கிலப்பாடத்தில் கூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். பின்னாளில் வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருவாக இருந்த ஆரிய திராவிட பாஸா விற்பன்னர் பிரம்ம ஸ்ரீ பூர்ணாணந்த சிவாச்சாரியாரின் பெருமை மிகு புத்திரர்களுள் ஒருவராகிய வியாகரண சிரோன்மணி சிவாசாரிய கலாநிதி பூர்ணாணந்த குருகுல அதிபர் சிவஸ்ரீ பூரண தியாகராஜ சிவாச்சாரியார் அவர்களின் தூண்டுதலுக்கும், வேண்டுதலுக்கும் ஏற்ப இந்தியாவிலுள்ள சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் கசடறக் கற்று **புலவர்** என்னும் சிறப்புபட்டத்தை பெற்றார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி கற்றகாலத்திலேயே சிதம்பரம் ஆறுமுக நாவலர் சித்தாந்த கல்லூரியில் சேர்ந்து கற்று **"சைவசித்தாந்த புலவர்"** எனும் பட்டமும் பெற்றார். இவரது படிப்புக்கு உறுதுணையாக அவரின் தமக்கையாரின் கணவர் இ. கந்தசாமி ஐயா அவர்கள் இருந்து கவனித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு திரும்பிய அவர் பல்கலைகளையும் கற்றதோடு சோதிடம், வைத்தியம், பல்வேறு கண்டுபிடிப்புகளிலும் சிறந்து விளங்கினார். ஆத்தோடு பாரம்பரிய ஆலயங்களிலும் பூசை, விழாக்களை சிறப்பாக செய்து வந்தார். அத்துடன் குருமாரின் வேண்டுகோளிற்கேற்ப சிவப்பிராமண ஒன்றியத் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். திருக்கோணமலையில் முதன்முதலாக **"நாவலர் அக்கடமி"** எனும் கல்விக் கூடத்தை ஆரம்பித்தார். அதில் தட்டச்சு, சுருக்கெழுத்து, வர்த்தகம், பொருளாதாரம், கணக்கியல் பாடங்களைக் கற்பித்து முதன்முதலில் திருக்கோணமலையில் மேற் கண்ட பாடங்களைக் கற்பிற்க்கும் பல ஆசிரியர்களை உருவாக்கினார்.

பாடசாலை நாட்களில் இவரது பாடசாலைத் தோழர்களான செல்வர்கள் சிங்காரவேல் T. சச்சிதானந்தம் யு.குலவீரசிங்கம் சுப்பிரமணியம் நடராசா சின்னத்துரை செந்திவேல் போன்றவர்களோடு சேர்ந்து 1953ம் ஆண்டில் **திருவள்ளுவர் கழகத்தை** ஆரம்பித்தார். இந்த கழகத்தினூடாக பலஅரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு மடத்தடியில் இருக்கும் தனது இல்லத்தில் இராப்பாடசாலை , **"கமலை"** என்ற கையெழுத்துப் பத்திரிகை போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக இவரது முனைப்பால் திருவள்ளுவர் கழகத்தால் நடாத்தப்பட்ட **"திருக்குறள் மாநாடு"** எவராலும் மறக்கமுடியாத ஒன்றாக இந்தியாவிலிருந்து வருகை தந்த அறிஞர்களும் கலைஞர்களும் வியந்து பாராட்டினர். இந்த மாநாட்டுச் சிறப்புக் கட்டுரை இந்தியச் சஞ்சிகையான **"கல்கியில்"** வெளிவந்தது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

மேலும் இவர் திருக்கோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும், சத்ய சாயி சேவா சமித்தியின் தலைவராகவும், சிவசேகரனர் அறக்கட்டளை அமைப்பின் தலைவராகவும், இந்து இளைஞர் பேரவையின் ஆலோசகராகவும் பலவருடங்கள் பதவி வகித்தார். 1963ம் ஆண்டு திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற போது கும்பாபிஷேக மலர் வெளியிடும் பணியில் "சைவப்புலவர்" பண்டிதர் இ. வடிவேல் அவர்களுடன் இணைந்து செயற்பட்டார். **திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு கற்கோயில் மட்டும் எடுத்தால் போதாது திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு அரிய பெருமக்கள் சொற்கோயிலும் எடுக்க வேண்டும் என்ற தினகரன் செய்தியால் உந்தப்பட்ட புலவர் அவர்கள்** தனது நண்பர் அ. சிறீஸ்கந்தராசா B.A Hon அவர்களுடன் சேர்ந்து 1963ம் ஆண்டில் **"திருக்கோணேஸ்வரம்"** எனும் வரலாற்று நூலை வெளியிட்டனர். அந்நூலில் திருக்கோணமலை நகரிலுள்ள திருக்கோயில் வரலாறுகள் பலவும் அடங்கியுள்ளது. திருக்கோணமலை பிரதான வீதியில் அமைந்துள்ள சமாது தங்க விநாயகர் ஆலய வரலாறும் இந்நூலில் அடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1967ல் தியாகராஜா ஐயாவின் திருமகளாம் தியாகேஸ்வரி அம்மையாரின் கரம் பிடித்து இல்வாழ்கையில் நுழைந்தார். உமாதேவி, சிவரஞ்சனி, சத்தியநாதன், சிவகுமாரன் எனும் நான்கு நன்மக்களைப் பெற்று தந்தையுமானார். 1971 இல் பேரனார் சிவஸ்ரீ ஏ.வை விஸ்வலிங்கக் குருக்களால் இவருக்கு ஆச்சாரியார் அபிஷேகம் செய்யப்பட்டு குருக்களாகினார். இவரது சமயபணிகளில் கல்லி அம்மன் ஆலயம், சமாது தங்கவிநாயகர் ஆலயம், உப்புவெளி பெரியதொடுவாய்ப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் கும்பாபிஷேகங்கள் ஆகியன சிறப்புடையனவாகும். தனது குமாரர்களின் உபநயனச் சடங்கினை தான் ஆதீனகுருவாக இருந்த மடத்தடி முத்துமாரியம்மன் ஆலயத்தில் தானே குருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANNAMALAI UNIVERSITY

# THIRTIETH CONVOCATION


23-11-1960.




அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்
புலவர் பட்டமளிப்பின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேரனார் ஏ. வை. விஸ்வலிங்கக் குருக்கள்
அவர்களால் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பட்டபோது



தனது மகன்மார் இருவருக்கும் உபநயனம்
செய்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணனியில் சோதிடம் கணிக்கும் ஐயா



வைத்திய சேவையில் ஐயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமாது தங்கவிநாயகர் ஆலய மூலஸ்தானம் மற்றும் வாயிற் கோபுரம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டும் போது [27.08.1999]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முற்றுமுழுதாக புனருத்தாரணம் செய்யப்பட்டுவரும்
உப்புவெளி பெரியதொடுவாய்ப் பிள்ளையார்
ஆலயத்தின் கம்பீரமான தோற்றம்.



முற்றுமுழுதாக புனருத்தாரணம் செய்யப்பட்டுவரும்
உப்புவெளி பெரியதொடுவாய் பத்திரகாளி ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று நடாத்தி மகிழ்ந்தார். . தமக்கையாரின் பிள்ளைகளான சறோஜாதேவி, லலிதாதேவி, வசந்தாதேவி ஆகியோரை மருமக்களாகவும் அடைந்தார் மூத்த மருமகளின் பிள்ளைகளான சிவப்பிரியா, சஞ்ஜவன், சுதர்ஷன், தரணியா ஆகியோரையும் கண்டு மகிழ்ந்தார்.

இல்வாழ்க்கையின் இருபத்து மூன்றாம் வருடத்தில் 1990 ஆம் ஆண்டில் நம்நாட்டின் கலவரத்தால் நாட்டை விட்டு தமிழ்நாட்டிற்கு புலம்பெயர்ந்தார் அங்கு சென்ற அவர்களை அன்பு மறவா அவர் நண்பர் பி.கே.வேலாயுதம் அவர்கள் அரவணைத்தார். அதுமட்டுமல்ல ஆண்டவனைப் போல் வெளிநாட்டில் இருக்கும் அவர் அன்பு மைத்துணர் தி.பரமராஜா கைகொடுத்தார் இவர்களின் உதவியுடன் தனது பிள்ளைகளை தன்னைப் போலவே தமிழ்நாட்டில் உயர்கல்வி கற்கவைத்து நால்வரையும் பட்டதாரிகள் ஆக்கி மகிழ்ந்தார்.

பிள்ளைகளின் கல்விசார் கடமையினை முடித்து 1994ஆம் ஆண்டில் நாடு திரும்பினார். நாடு திரும்பியதும் தன்னால் நிர்வகித்து வரப்பட்ட அவரது பாரம்பரிய உரிமைகளான ஆலயப்பொறுப்புகள் அனைத்தையும் கையேற்றார் எனினும் அவரது சந்ததியினரால் நிர்வகிக்கப்பட்ட முதன்மையான ஆலயங்களுள் ஒன்றான மடத்தடி முத்துமாரியம்மன் ஆலய உரிமை மட்டும் அவரும் அன்பர்களும் விரும்பிய போதும் கயவர்களான உருத்திராட்சப் பூனைகளால் அவரது உரிமை கையளிக்க மறுக்கப்பட்டது. பின்னர் அவரது அன்புக்குரியவர்களாலும் ஆலய அயலவர்களாலும் மீள உரிமையை சட்டமூலமாக பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டபோதும் இவ்வாறு கிழ்த்தரமாக தட்டிப்பறிக்கப்பட்ட தனது உரிமையினை அந்த கயவர்களிடம் இருந்து மீளப்பெற தான் விரும்பவில்லை என கூறிவிட்டார்.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறா
நாவினால் சுட்ட வடு

என்ற வள்ளுவனின் வாக்குப்போல் அவரது உரிமை கையளிக்க மறுக்கப்பட்டதனால் பட்டவடு அவர் மனதில் நீங்காதிருப்பினும் தன்னால் நிறைவேற்றப்படாத தனது உரிமைசார் கடமைகளை மீட்டெடுக்க தனது மக்களுக்கு கோணேசப்பெருமானும் தங்கவிநாயகரும் அருள்புரிவார் என்று கூறுவார்.

பிள்ளைகளின் கல்விப்பயனை கண்டுகளித்து பின்னர் நான்கு பிள்ளைகளுக்கும் ஜெயக்குமார், அருந்தவகுமார், சிந்துஜா, மோனிகா ஆகியோரை திருமணம் செய்து வைத்து கமலபாதன், ரகுப்பிரியன், தனுஜா, பிரணவ் ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு களிப்படைந்தார். இவ்வாறு இன்புற்றிருந்த காலத்தில் சமாது தங்கவிநாயகர் ஆலயத்தினை முற்றுமுழுதாக புணருத்தாரணம் செய்து 2004-06-13 ஆம் திகதியன்று மிகவும் சிறப்பாக மஹா கும்பாபிஷேகத்தினை நடாத்தி பேரானந்தமடைந்தார். **தனது வாழ்நாளில் இரண்டு தடவைகள் சமாது தங்கவிநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகத்தினை நடாத்த கிடைத்த பெரும் பேற்றினையும் 55 ஆண்டுகள் தங்கவிநாயகப் பெருமானின் திருமேனி தீண்டி தொண்டு செய்யும் பாக்கியம் கிடைத்தமையையும், உப்புவெளி பெரியதொடுவாய்ப் பிள்ளையார், காளி கோயில் புணருத்தாரண வேலைகள் செய்வித்தலையும்** நினைத்து இறும்பூது எய்திய போது பேரிடிபோல் மூத்தபுதல்வி உமாதேவியின் மரணச்செய்தி கிடைத்தது. மகளின் மறைவை மறக்கமுடியாமல் தவித்தார். பின்னர் தனது ஆண்மக்களை காணும் ஆவல் கொண்டு கனடா சென்று மக்களையும் மருமக்களையும் பேரனையும் கண்டு களித்த களிப்பு பொறுக்கவில்லை காலனுக்கு மனைவிமக்கள் கதறியழ காலனவன் 03-08-2006 தனில் காவுகொண்டான். அன்னாரின் ஆத்மா தங்கவிநாயகப் பெருமானின் தங்கமலர்ப் பாதங்களை சென்றடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தவம் செய்தேனோ?

பலர் போற்றும் பாலகனாய்
பார்தனில் அவதரித்து
பல்கலை கற்க கழகம்
சென்று விஞ்ஞானம் மெய்ஞானம்
வைத்தியம் தமிழ் சமஸ்கிருதம்
எனப் பல துறை கற்ற
அணையா ஞான ஒளிச்சுடரே!

உங்கள் அன்பிலும், பண்பிலும்
ஒரு துளி குறையில்லை
கல்விக்கு எல்லையில்லை, கற்க
வயதில்லை, இறுதி மூச்சுவரை
கற்று ஞானம் பெற்றீர்கள்
"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"
என்ற பழமொழியின் அர்த்தம் உங்களிடம்
புரிந்து கொண்டேன்

இறைவனை கிரசேற்றி, சற்குரு சாயி பகவானை
மனதினிலே நிறுத்தி
நல்மனையாள் துணையுடன் மக்கட்ச்
செல்வம் பெற்று அன்பு, பண்பு
அறன் இவைகளை கடிவாளமாக்கி
நேர்வழியில் எமை வழிநடத்திய
குடும்பச் சாரதி நீங்கள்

நல்ல மகனாக, நல்ல நண்பனாக
நல்ல மாணவனாக, நல்ல சமூக சேவகனாக
நல்ல பக்தி மானாக, நல்ல குருவாக
நல்ல வைத்தியனாக, நல்ல சோதிடனாக
நல்ல புலவனாக, நல்ல அறிஞனாக
நல்ல கணவனாக, நல்ல தந்தையாக
நல்ல மாமனாக, நல்ல பேரனாக
இன்னும் பல பல நல்வேடத்தில் மட்டுமே
உங்கள் வாழ்நாளை சிறப்புறக் கழித்த உமது
மகனாகப் பிறக்க நான்
என்ன தவம் செய்தேனோ!

மகன்
சோ. சத்தியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

தாயுள்ளம் மகிழப் பிறந்தாயே
தந்தையின் புகழ் ஓங்க வளர்ந்தாயே
சகோதரியின் உளம் மகிழ உயர்ந்தாயே
அண்ணாமலையில் புலவர் ஆனாயே
சைவமும் தமிழும் வளர்த்தாயே
சித்த அறிவியலையும் அறிந்தாயே
சீன மருத்துவத்திலும் சிறந்தாயே
சோதிடத் துறையையும் உணர்ந்தாயே
மங்கை தியாகேஸ்வரியை மணந்தாயே
நான்கு நல் மகவு பெற்றாயே
மருமக்களையும் கண்டு மகிழ்ந்தாயே
பேரப் பிள்ளைகளை கண்டு களித்தாயே
பிள்ளைகளுக்கு அனைத்தும் ஆனாயே
ஆனைமுகனுக்கு ஆலயங்கள் அமைத்தாயே
அதனால் உள்ளம் மகிழ்ந்தாயே
மகளின் மறைவால் வாடினாயே
மகன்களுடன் மகிழ வந்தாயே
மனித வாழ்விற்கு இலக்கணமானாயே
கடமைகள் அனைத்தையும் முடித்தாயோ
காலம் உனை அழைக்கச் சென்றாயோ!

மகன்
**சோ.சிவகுமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகின்றோம் ஐயா

அழுது அழுது ஓய்ந்து போனோம்
நினைத்து நினைத்துக் கலங்கிப் போனோம்
ஐயா உம் பிரிவைக் கேட்டு.
மக்களுடன் வாழும் ஆவலுடன்
சென்றீர் சென்றீர் கனடா சென்றீர்
எம்மைப் பிரிந்து சென்றீர்.
நினைவுகள் தம்மை நெஞ்சில் தந்து
பிரிந்து சென்றீர் மீளாத் தூரம்.
நிழற்படம் கண்ணை நிறைத்திடவில்லை
விழிநீர் முந்தி மறைக்கிறதே கண்ணை.
நீர் பெற்ற புகளெல்லாம் நினைக்கின்றோம் ஐயா.
நீர் பிறந்து வளர்ந்த திருமலை மண்ணில்
பல பாராட்டுப் பெற்றீர் எம் கண்முன்னே
இறுதியிலே நீர் பெற்றீர் பொன்னாடை
"சிறந்த தமிழ்ப் பணியாளர்" என்ற பாராட்டுடன்
உம்மை வாழ்த்தியதே திருமலைநகரம்
எம் குடும்பத்தில் மூத்த உறுப்பினராய் நின்று
எம்மை வழி நடத்தி வருவீரே
இனி எமக்கு யார் ஆதாரமாய் நிற்பர் ஐயாள
வானக் கதவை மெல்லத் திறந்து
உம் பூ விழி திறந்து பார்த்திடுவீர் ஐயா
கோணேசர் பூமியில் பிறந்து
ஏம்மைத் தூக்கி வளர்த்து
சீராட்டிப் பாராட்டி எம்முடன் விளையாடி
எம்மை ஆளாக்கி விட்டு
உம் பொறுப்பு முடிந்ததென்று
எம்மைத் தவிக்க விட்டுச்
சென்றீரே இறைவனிடம்

திருமலை வாழ்
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றினிலே ஒன்றாய் கலந்துவிட்டீர்...

கதிரவன் வெளிப்படும் காலை வேளையில்
கனடாவில் வெளிச்சம் பரவியது
நமக்கோ அவ்வேளை இருள் சேர்ந்தது
உங்கள் பிரிவுச் செய்தி கேட்டு.......

சிறிது நான் பழகிய பாசத்தை
பகிர்ந்தும், சிரித்தும், அழுதும்
கலந்து நின்ற உங்களை அன்று
பறித்துப் போனது கொடிய காலையானது!

நம் கண்முன்னே உங்கள் உயிரை
காலனவன் காவிச் சென்றானே........
தடுக்க முடியாத பாவியானோம்
பதறி, பரிதவித்து நின்றோம் உங்கள் முகம் பார்த்து

சரியை, கிரியை, யோகம், ஞானம் என
நால்வகை வழி நின்று
நல்லோர் உளம் புகுந்து- நீங்கள்
காற்றினிலே ஒன்றாய் கலந்துவிட்டீர்கள்

மருமகள்
**திருமதி. சிந்துஜா சத்தியநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கண்ணாடி மாமா

மண்ணில் பிறந்து மாணிக்கமாகி
விண்ணில் இன்று ஒளி விளக்கான
எங்கள் கண்ணாடி மாமா
அன்பின் விருட்சமாகவும் அறிவின் சுடராகவும்
என்றும் எம்முள் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
உங்கள் பிரிவால் துவளும்

மருமக்கள்
**தயாளினி சிவகரன்**
**ரிஷிகரன் ஜெயகரன்**
**தனுகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOUR NAME IS OUR ASSERT

**S** – Simplicity is your way of living

**O** – 'Ocean of information' Entitled by the learned

**M** – Magnanimous Towards the Needy.

**A** – Astonishing Achievements in Two sciences accupuncture and astrology

**S** – 'Scholar of Trincomalee why you made us mourn?

**K** – Kindness and caring is your definition of life.

**A** – Adorable by every one and you earned the true love.

**N** – 'National Patriotic' we are proud of you

**T** – Thanking the almighty for giving you in our family

**H** – 'Human Encyclopaedia' you are the master of all subjects.

**A** – Amazingly you have won the hearts from great scholars to simple Samaritan

**R** - Rarity in the mankind, you are a boon to our family .

Your Loving Daughter (In law)
**Monika Sivakumaran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WE MISS YOU GRANDPA....

You made us happy by your presence,

You made us cherishing by your care,

You turn as a child when you are with us.

Lot of things you taught to us.

Why you left us so soon grandpa?

You made us cry forever.

We hope you guide us forever….

Loving Grandchildren
**Kamalapathan**
**Ragupriyan**
**Thanuja** (France)
**Srii Pranav** (Canada)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சமாது தங்கவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது பிரதிஷ்டா பிரதமகுரு வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களால் எஜமான் அபிஷேகம் செய்யப்பட்ட நிகழ்வு. [13.06.2004]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத புலவர் சோமாஸ்கந்தக் குருக்கள்

புலவர் சிவஸ்ரீ வை சோமாஸ்கந்த குருக்கள் அவர்கள் திருகோணமலையின் பாரம்பரிய குருக்கள் பரம்பரையைச் சேர்ந்தவர். திருக்கோணேஸ்வரம் , சல்லி அம்மன் ஆலயம் , மடத்தடி முத்துமாரியம்மன் ஆலயம் , சமாது தங்கவிநாயகர் ஆலயம் , தெய்வானைப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் ஆதீன குருவாக இருந்த வைத்தீஸ்வரக் குருக்களின் மகன் ஆவார். தந்தையார் இறந்தபின் அவர் வழியில் நின்று திருக்கோணேஸ்வரம், சல்லி அம்மன் ஆலயம், மடத்தடி முத்துமாரியம்மன் ஆலயம், சமாது தங்கவிநாயகர் ஆலயம், தெய்வானைப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்பையும், அர்ச்சகர் பொறுப்பையும் ஏற்று நடாத்தி வந்தார். தமது கல்வியை விருத்தி செய்யும் பொருட்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று தமிழ்ப் பாண்டித்துவம் பெற்று புலவர் பட்டத்தையும் பெற்றார். 1963 ஆம் ஆண்டு திருக்கோணேஸ்வரத்தின் முதல் நடந்த கும்பாபிஷேகத்தின் போது திருக்கோணேஸ்வரம் என்னும் நூலை முதல் முதல் தமிழில் வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. திருக்கோணேஸ்வரம் 2ஆம் பதிப்பு ஆலடிப்பிள்ளையார் கோயில் நிருவாகத்தினால் வெளியிடப்பட்டது. அப்பொழுது இவருக்கு பெரும்பாராட்டு வைபவம் நடைபெற்றது. இவர் திருகோணமலையில் பல ஆசிரியர்களை உருவாக்கியுள்ளார். சமாது தங்கவிநாயகர் ஆலயத்தின் வளர்ச்சியின் பொருட்டு திருகோணமலை பத்ரகாளிஅம்பாள் ஆதீனமாகிய எம்மிடம் அனுகி பாலஸ்தாபனம் கும்பாபிஷேகக்கிரிகைகளை நடாத்தித்தருமாறு கேட்டதற்கமைய நாமே தலைமைதாங்கி கும்பாபிஷேகத்தை செய்துவைத்தோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகிறேன். தமிழ் சமய நிகழ்ச்சிகள் நடைபெறும் அரங்குகளில் எல்லாம் பிரதமபேச்சாளராகவும் தலமைதாங்கி கௌரவம் பெற்றார். அன்னாரின் சமயப்பணி தமிழ்ப்பணிகளை மறக்கமுடியாது. அன்னாரின் மரணச்சோகத்தையும் திருமலை வாழ் பொதுமக்கள் மறக்க முடியாமல் இருக்கின்றனர். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை உளம் உருகி பிராத்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
**வேதாகமமாமணி**
**பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்**
ஆதீனகத்தா ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சோமாஸ்கந்த குருக்களே உம்மை நினைத்து உதிர்க்கிறோம்"

பாடல் பெற்ற இலிங்க பூமியாம் கோணமாமலையில்
தங்க மகள் தங்கநாச்சியார் உதரமதில்
உருவாகி வைத்தீஸ்வர குருக்களின் மகனாய்
திருமலை தன்னில் வந்துதித்தீர் ஐயா
கலைகள் பலகற்று பட்டம் பல பெற்றீர்
சிவாச்சாரியராய் பிள்ளையாருக்கு தொண்டாற்றினீர்
அக்குபென்சர் வைத்தியத்திலும் துறைபோனீர்
பெருமிதமில்லா பெருவாழ்வு வாழ்ந்தீர் ஐயா

தியாகேஸ்வரி யென்னும் பெண்ணவளின் பதியானீர்
ஆணுமாய் பெண்ணுமாய் நால் மகவுகண்டு தந்தையானீர்
பேரப்பிள்ளைகள் பல கண்டு பேரானந்தம் கொண்டீர்
பிள்ளைகளது உயர்வில் உவகையும் கண்டீர் ஐயா

இலத்திரனியல் சாதனத்தை நம்மவர் பலர் அறிய முன்பே
அறிந்து கொண்டு விளக்கமளித்த அறிவாளி நீர்
சில மாறாத நோய்தனை அக்குபென்சரால் மாற்றிய வைத்தியரும் நீர்

மக்கள் மனதில் நினைத்ததை நிறைவாக மாற்றி
கம்பீரமான சமாது கோயிலை உருவாக்க தொண்டாற்றினீர்
தேடிவருவோரை வரவேற்று விருந்தளித்தீர்
அன்பாக அறிவுரை கூறி ஆதரவு கொண்டீர்
சைவ சிறார்களின் கலைத்திறமை கண்டு
புத்தகங்கள் அவர்களுக்கு அளித்து திருப்தி கொண்டீர்

மைந்தர்களை காண கனடா சென்று
மாதங்கள் பல மகிழ்ந்து உறவாடி
மாறாத வடுவாய் உமாவின் நினைவது
இதயத்தின் வலியை உருக்கொண்டதோ ஐயா
மகனின் கையால் கடமைசெய்திட
மனதில் நினைத்தீரோ யாம் அறியோம்
மகனது மடியில் கண்களை மூடி
நிம்மதியாய் நீண்ட உறக்கம் கொண்டீரோ

பிள்ளையாரை வணங்கும் பேறு கொண்ட உமதன்பு
இளைஞர்கள் நண்பர்கள் அயலவர்கள் நாம் அழுகின்றோம்
இறுதியாய் சோமாஸ்கந்த குருக்களது வதனமதை
பார்க்கும் பாக்கியமற்ற பாவியாகினோமே ஐயா
இன்று கண்ணீருடன் கரங்கோர்க்கின்றோம்
தாய்மண்ணை தழுவாமலே கனடாவில் இவ்வுலகை நீத்த
உம் ஆத்மா சாந்தியாகட்டும்
இறைவன் தொண்டாற்றி அவருக்கே உரித்தானீர்

**சமாது பிள்ளையார் கோயில்**
**அயலவர்களும் இளைஞர்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாது பிள்ளையாரும் நாமும்

முதற்கண் சிவஸ்ரீ புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களை இழந்து தவிக்கும் பாரியார் மற்றும் அவரின் குடும்பத்தவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்கள் திருமலை பிரதானவீதியில் அமர்ந்திருக்கும் சமாது தங்கவிநாயகர் ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவாகவும் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக எதுவித இலாப நோக்கின்றி சேவையாற்றி வந்த போதிலும் அவரின் மனதிலொரு தாக்கம் இருந்து கொண்டே வந்தது. சிறியதொரு ஆலயமாக இருக்கும் சமாது தங்க விநாயகர் ஆலயத்தை பெரியதொரு ஆலயமாகக் கட்டி மஹாகும்பாபிஷேகம் ஒன்றை தனது காலத்தில் செய்து விடவேண்டும் எண்ற மிகப் பெரிய ஆவலே அவரின் மனதாக்கலாகும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் எல்லோருடனும் பூஜை முடிந்தபின் கதைக்கும் போது தனது பெருவிருப்பதை பலதடவை தெரிவித்திருக்கின்றார். என்னிடமும் பல தடவைகள் கூறியிருக்கின்றார். இவரின் விருப்பத்தை புரிந்து கொண்ட ஆலயத்தில் மிகவும் பற்றுக்கொண்ட சில தொண்டர்கள் இவரின் ஆசையில் சிறிதளவையாவது பூர்த்தி செய்யும் நோக்குடன் சமாது பிள்ளையாரில் பற்றுகொண்ட திருமலையிலுள்ள சைவ அன்பர்களின் நிதி உதவியுடன் ஆலயத்திற்கு அருகில் ஒரு மண்டபத்தை கட்டி முடித்தார்கள். அதனால் மிகவும் சந்தோ.'.ம் எய்தியபோதும் சோமாஸ்கந்த குருக்கள் அவர்களது மனம் திருப்தி அடையவில்லை. அவரின் விருப்பு ஆலயத்தை பெரிதாக்கி கும்பாபிஷேகம் செய்வதிலேயே குறியாக இருந்தது.

அவரது ஆசையை பூர்த்தி செய்ய சமாது தங்கவிநாயகரும் திருவுள்ளம் கொண்டார். அதன்படி ஆலயத்தில் பற்றுக் கொண்ட அன்பர்கள் அடியார்களின் முயற்சிகளால் உள்நாட்டு வெளிநாட்டு சமாது தங்கவிநாயகர் பக்தர்களின் உதவியுடன் அரசாங்கதிலிருந்து பணம் பெற்றுத்தந்த திருகோணமலை பாரளுமன்ற உறுப்பினர் இரா.சம்மந்தன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் யாழ்மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி ஆகியோரினினதும் இந்து கலாச்சார அமைச்சின் உதவியுடனும் சமாது தங்கிநாயகர் ஆலயம் மிகப் பிரம்மாண்டமான உருக் கொண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று ஒரு தேவஸ்தானமாக மிளிர்கின்றது. இந்த காட்சிகளையெல்லாம் கண்ட புலவர் சோமாஸ்கந்த குருக்கள் அவர்கள் தனது ஆசைகள் எல்லாம் நிறைவேறி மனம் நிறைந்த பூரிப்புடனேயே தனது மக்களைக் காண கனடா நாட்டுக்கு சென்று அங்கு காலனின் கைகளில் அகப்பட்டு இறைவனடி சேர்ந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய சமாது தங்க விநாயகரை வேண்டுகின்றேன்.

ஆத்துடன் சாமது தங்கவிநாயகர் ஆலய கட்டிட கும்பாபிஷேக திருப்பணியில் முக்கிய பங்காற்றியவன் என்ற முறையில் ஐயாவின் விருப்பான கம்பீரமான சமாது தங்கவிநாயகர் தேவஸ்தானத்தினை அமைக்க உறுதுணை புரிந்த பின்வருவோர்களுக்கு இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

1. உள்நாட்டு சமாதுதங்க விநாயகர் அடியார்கள்.

2. வெளிநாட்டில் வாழும் சமாது தங்கவிநாயகர் அடியார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எமக்கு வெளிநாட்டு உதவிகளை பெற்றுதந்த டாக்டர். சித்திரவேலு குடும்பமு, பிறக்டர் V.P. இராஜரெட்னம் குடும்பம் திருமதி பாலசுந்தரம் குடும்பம் கதிரித்தம்பி குடும்பம்.

4. திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்மந்தன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி இந்து கலாச்சார அமைச்சு ஆகியோர்கும்.

5. எமக்கு நிதிப்பற்றாக்குறை ஏட்பட்டு ஆலய வேலைகள் பாதியில் நின்ற வேளையில் மாமனாரின் கடமையை கையேற்றமை மட்டுமல்லாது பெருமளவு நிதியினை வழங்கி வேலையை முற்றுப்பெறுவித்து மஹா கும்பாபிஷேகத்தினை நடாத்த உதவிபுரிந்த ஐயாவின் மருமகன் அருந்தவ்மார் ஐயா (கண்ணன் ஐயா) அவரின் பாரியார் ஆகியோருக்கும்

6. ஆலய கட்டிடத்திற்காக அத்திவாரக்கல் நாட்டியதிலிருந்து ஆலய கும்பாபிஷேகம் முடியும் வரை எமக்கு ஆலோசனைகளும் உதவிகளும் புரிந்த திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதினகர்த்தா வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிசந்திரக் குருக்கள் அவர்களுக்கும்.

7. எனது வலது கையாக இருந்து உதவி புரிந்த மனோன்மணி மெடிக்கல் உரிமையாளர் ந.சங்கர்ராஜா அவர்களுக்கும்

8. ஆலய கட்டிட வேலைகளை பூர்த்தி செய்து தந்த அனைத்து ஆச்சாரியார்களுக்கும் வேலையாட்களுக்கும்.

9. மற்றும் அனைத்து அன்பருக்கும் நன்றி உரிதாகட்டும்.

**டாக்டர். இ. முரளிமனோகர்**
257 பிரதான வீதி.
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாது தங்கவிநாயகர் ஆலய புனருத்தாரண நிர்மாணப் பொறுப்பாளர் டாக்டர் இ. முரளிமனோகர் அவர்களால் கும்பாபிஷேக நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட போது.



மருமகனார் உருத்திர அருந்தவகுமார் {கண்ணன் ஐயா} அவர்களிடம் ஆலய கடமைகளை கையளித்து ஆசீர்வாதம் வழங்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை போற்றும் மகான்

திருமலையில் வந்துதித்த மகானே மங்காத ஒளிவிளக்கே
சோமாஸ்கந்த ஐயாவே
வையகம் போற்றும் வைத்தீஸ்வரக் குருக்கள்
ஐயாவும் தங்கத்திருமகளாம்தங்கநாச்சியாரும் செய்த
அருந்தவத்தால் அவர்தமக்கு அருந்தவப்புதல்வனாய் அவதரித்தீர்
இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி
பாரத நாடு சென்று பயின்றமிழ்ப் புலவர் பட்டமும் பெற்றீர்
பைந்தமிழுக்கும் சைவத்துக்கும் பணிபுரியவிரும்பிய நீர்
அரசின் கீழ் கைகட்டி சேவகம் புரியும் தொழிலை நாடவில்லை
எல்லோருக்கும் வருமா இம்மனநிலை
நாவலர் வழியை கைக்கொண்ட ஐயா அவர்கள்
நாவலர் அக்கடமியைத் தோற்றுவித்து
நானிலம் போற்ற சேவை செய்து
நல் ஆசான்களை உருவாக்கினார் நம் மண்ணில்
கல்விப் பணி தமிழ்ப்பணியோடு சமயப்பணி அவர்தம்
குருதியில் குமிழ் விட்டு நிற்பதல்லவா!
ஐயா அவர்கள் கட்டிக்காத்த ஆலயங்கள்தாம் எத்தனை?
உப்புவெளி பெரிய தொடுவாய்ப் பிள்ளையார் கோயிலையும்
காளிகோயிலையும் தம் இரு கண்களாகவே போற்றினார்
சாந்தமே உருவாக பக்தி சிரத்தையுடன் அவர் பூசை செய்யும் அழகே தனிதான்
பூசைமட்டுமா? அவரின் ஆன்மீகச் சொற்பொழிவுகள் கருத்தாழம் மிக்கவையன்றோ!
அதுமட்டுமா? வைத்தியம், சோதிடம், கணனிதொழில்களிலும்
கைகண்டவரல்லவா ஐயா அவர்கள்
பொறுமை அவரின் கூடப்பிறந்த ஒன்று
பொங்கி எழுந்து அவர் பேசியது இல்லை
அமைதி அடக்கம் அவரின் ஆபரணங்கள்
ஆணவம் அவரிடம் இல்லாத ஒன்று
இல்லறவாழ்விலும் இணையற்று விளங்கிய ஐயா
நன் முத்துக்களாக நான்கு மக்களை பெற்று
பேரக்குழந்தைகளையும் கண்டு மகிழ்வோடு வாழ்ந்த காலத்தில்
காலனுக்கு பொறுக்கவில்லையோ மூத்த புத்திரியை
அவசரமாக அழைத்த அவன்
அடுத்து ஐயாவையும் எம்மிடம் இருந்து பிரித்துவிட்டானே
விதியை வெல்ல முடியாதா?
பிள்ளையார் கோயில், காளிகோயில் கும்பாபிஷேகம் காண ஐயா
வருவார் என நாம் எண்ணியிருக்க நடந்தது என்ன?
இறைவா உன் அடிகளுக்கு ஐயாவை அழைத்துவிட்டாயே

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிராத்திப்போமாக

**உப்புவெளி பெரியதொடுவாய்ப்**
**பிள்ளையார் கோயில் மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை ஆதி சைவ சிவப்பிராமண ஒன்றியம்
(பாசுபதமரபு)

## சிவப்பிரம்மஸ்ரீ புலவர்.வை சோமாஸ்கந்தக் குருக்கள்

## இரங்கற்பா

ஆதி சைவ குலத்தினிலே பரத்துவாஜ
அரிய திருக் கோத்திரத்தில் திருக்கோணேசர்
மேதகு நற் சந்தான பரம்பரைக்கு
மேன்மை தர வந்துதித்த மாதவரே
புலவரே சோமாஸ்கந்தரே நின்றன்
மறைவதனால் கலங்குகின்ற மனைவி மக்கள்
மேதினியில் இனி எந்நாள் நின்னைக் காண்பார்?
விடிவெமக்குக் கிடையாதோ, விதியி..தாமோ!

விதி வசத்தால் நினையிழந்தோம் கிழக்கிலங்கை
விரும்பும் ஆதி சிவக்குருமாரின் ஒன்றியத்தை
அதிவிருப்பால் ஸ்தாபித்தோம் ஒன்றுபட்டு
ஆண்டிருந்தாய், பல காலம் தலைவனாக
கதியிழந்தோர் அனைவருக்கும் தொண்டு செய்தாய்
கருணைமிகு குருவாய்ப்பல் ஆலயங்கள்
அதிசயங்கள் மிகுமாறு கடமையாற்றி
அனைத்துயிரும் கதிகலங்க அகன்றிட்டாயே!

அகன்ற பிரபஞ்சத்தில் இந்து தர்மம்
அனைவருக்கும் வழி காட்டும் அற்புதத்தை
புகன்றிட்டாய்: கிரிகைகளை இப்படித்தான்
புரிதல் கடன் என்பதையும் புரியவைத்தாய்
இயன்றவரை இந்து என்றால் இவ்வாறே தான்
இருந்துலகம் புனிதமுற இயங்கவேண்டும்
பயன் கருதாக் கடமையுணர்வுடனே ஆற்றும்
பக்குவமே வாழ்வென்றாய்: பறந்திட்டாயே!

தங்க விநாயகர்க்கோதுகின்ற மந்திரங்கள்
பலநினது குரல் ஒலியால் அமிர்தமாகும்
வரமளிக்கும் பிரணவத்தைக் கணங்கள் தோறும்
வாய்முணுக்க மனம் நிறைய ஓதி நிற்பாய்
பரமன் நினைப்படைத்தமையின் நோக்க மோர்ந்து
பிசகின்றிக் காரியங்கள் ஆக்கி வென்றாய்
அரியசிவன் பாத நிழல் அடைந்துவிட்டாய்
ஆனாலும் நாம் நினைந்து அழுகின்றோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்றுவிட்ட சகோதரன்
இராஜகந்த பத்மநாத சிவாச்சாரியருடன்



சமய நிகழ்வான திருமுறை முற்றோதலின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதபடி பிறக்கின்றோம்: மீண்டும் அந்த
அழுகையோடே இறக்கின்றோம் அதனை வெல்ல
கவின் கலைகள் சோதிடமும் வைத்தியமும் கற்று- புலவனாகி
கலைதன்னை எமக்கீந்து முன் போய்விட்டாய்
பழுதகன்ற தங்கநாச்சி வைத்தீஸ்வரரும்
பயந்து நினைப் பார்க்களித்த பயன்தான் இஃதோ?
திருமகள் தியாகேஸ்வரி நினது துணைவி, மக்கள்
துயர்ச்சுழியிற் பட எதற்கோ துணிந்து போனாய்?

துணிவதுவே துணை என்பாய் தூயவாழ்வே
துன்பத்தைத் துடைக்குமெனச் சொல்லிநிற்பாய்
சத்தியத்தின் உண்மை எனச் சாயிதன்னை
தரணியிலே நீ துதித்து வணங்கி நின்றாய்
பணித்தூய்மையதால் உளங்கள் பலவும் வென்றாய்
பாரை விட்டு நினை அமரர் பறித்ததென்ன?
திருமலையின் ஸ்கந்தனே நினது ஆன்மா
மகா சாந்தி அடைக அரன் மலரடிக்கே!!

ஓம்
சாந்தி: சாந்தி: சாந்தி:

இவ்வண்ணம்
கௌரவ செயலாளர்
**இராஜகந்தபத்மநாத சிவாச்சாரியார்**
ஆதி சைவ சிவப்பிராமண ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர். சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக் குருக்கள்

புலவர் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயா அவர்களை 60 வருடங்களுக்கு மேலாக நன்கறிந்து பழகியுள்ளேன். திருகோணமலையில் தற்காலத்தில் தமிழப்புலவர் பட்டத்தை பெற்றவர் ஐயா மட்டுமே. பட்டத்தோடு ஆசிரியர் தொழில் பார்க்க நல்ல வாய்ப்புக் கிடைத்தும் அதனை விரும்பாது தமிழ்த் தொண்டிலும் சமயத் தொண்டிலும் ஆலயத் தொண்டிலும் முழுநேரத் தொண்டராக ஈடுபட்டு பாடுபட்டு உழைத்தார். நான்கு ஆலயங்கள் அவருடைய பொறுப்பில் உள்ளது. அவற்றோடு மாரியம்மன் ஆலயத்திற்கும் பலவருடங்கள் ஆதீன குருவாக இருந்து பணியாற்றினார்கள். சமாது தங்கவிநாயகர் ஆலய திருப்பணியை திறம்பட நடாத்தி கும்பாபிஷேகம், திருவிழாக்கள் எல்லாவற்றையும் இனிதே நிறைவேற்றினார். உப்புவெளி பெரியதொடுவாய்ப் பிள்ளையார், காளி கோயில் புணருத்தாரண வேலைகள் செய்துள்ளார். துமிழிற்கும் சமயத்திற்கும் புலவர் ஐயா ஆற்றிய தொண்டுகள் மிகப்பல. சுமஸ்கிருதத்திலும் ஆழ்ந்த அறிவுள்ளவர். புல புத்தகங்களை எழுதியுள்ளார் இவற்றுள் திருக்கோணேஸ்வரம் எனும் நூல் முக்கியமானது.

கனடாவிலிருந்து இங்குவந்து தொண்டுகளை தொடர இருந்தார் காத்திருந்து காலன் கணக்கை முடித்துவிட்டான்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

ஐயாவின் பிரிவால் வருந்தும் மனைவி மக்கள் உற்றார் உறவினர் அன்பர்கள் ஆறதலடையவும். ஆவரது ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

**போ. கந்தையா**
காந்தி ஆசிரியர்
முத்துக்குமார சுவாமி கோவிலடி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா! நீர் மீண்டும் உலகில் பிறக்க வேண்டின் திருகோணமலையில்தான் பிறக்க வேண்டும் ஐயா

திருமலையில் வள்ளுவனுக்கு ஒருகழகம்
ஐம்பத்துமூன்றதனில் நண்பர்களுடன் தோற்றுவித்தான்
திசைஎங்கும் அவன்புகழை பரப்பவேண்டி
திருமலை முற்றவெளிதனில் விழாவெடுத்தார்
திறமைபெறு தமிழறிஞர் பலரோடும்
பெருமைபெறு கலைஞர்களையும் தான்அழைத்தார்

தமிழ்நாட்டில் இருந்துவந்த அனைவருமே
மகாநாட்டு நிகழ்வுகண்டு மலைத்துநின்றார்
"கல்கி" யிலே விதந்துரைத்துக் கட்டுரையாய்
எழுதிஇவர்(கள்) செயல்தனையே போற்றிநின்றார்

திருமலையில் பெருந்தெருப்பள்ளியிலும் - ஸ்ரீராம
கிருஷ்ணமிசன் இந்துக் கல்லூரியிலும்
தன்படிப்பை முடித்துமவர் தமிழ்நாடு
சென்றுமே படித்துப் புலவனுமானார்
திருமலைக்குத் திரும்பியவர் வந்தபோதும்
திரவியத்தைத் தேடஅவர் முயன்றதில்லை
திருமலையில் சிறார்கல்வி கற்கவேண்டி
"நாவலர் அக்கடமி" தோற்றுவித்தார்
பள்ளியிலே கற்றறியாப் பாடங்களாம்
வர்த்தகமாம் பொருளாதாரம் கணக்கியல்தான்
இத்தனையும் கற்பித்தார் கற்பிக்கநல்
ஆசான்களையும் ஆக்கியுமே தந்துவைத்தார்
தன்முனைப்பால் சோதிடமும் எண்கணிதசாஸ்திரமும்
தன்பேரன் விஸ்வலிங்க குருக்களிடம்
வைத்தியமும் கற்றுமிவர் வெற்றிபெற்றார்
வந்தவர்க்குத் துயர்தீர்து சித்தி(யும்)பெற்றார்

டாக்டர் அருள்ராமலிங்கம் வேண்டிநிற்க
அக்கியுப்பஞ்சர் சாதனங்கள் அத்தனையும்
சித்தனிவன் கைவண்ணத்தால் திருமலையில்
சீராகவே செய்தியளித்தான் பெருமையின்றி

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்திரெண்டில்
பங்குனிமாதம் திகதிபத்தினில்தான் சிவஸ்ரீ
வைத்தீஸ்வரக்குருக்கள் தங்கநாச்சியார் தம்பதிகட்கு
திருமலை மாரிஅம்மன்கோவிலடியில் பிறந்தார்
பிறப்பால்குருக்கள் இவர் படிப்பால்புலவன்
தொழிலால் பூசகர் சிந்தையால் வைத்தியன்
பொழுதுபோக்கால் சோதிடன் தொண்டால் ஆசிரியன்
தன்முனைப்பால் பொறியியலாளன் வாழ்வில்ஒருசம்சாரி
சமூகத்தில் பொறுப்புள்ளதந்தையிவன் இத்தனையும்
பெற்றவர்தான் எங்கள் சோமாஸ்கந்த ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்அரிய நண்பர் அவர் எனக்கு நல் ஆசான் அவர்
தன்அரியஉடன்பிறப்பு தவத்தால்கிடைத்த அருமருந்து
என்செயல்கள் அத்தனையும் போற்றிநின்று
எனைரசித்து ஊக்குவித்த இன்பஊற்று
எனைஅழைத்தார் செல்போனில் பேசுதற்கு
அவர்அழைப்பை அறியுமுன்பே எனைவிட்டு
ஐயகோ போய்விட்டாரே என்அன்பரசு - இனி
ஆரிடத்தில் காண்பேன் இவர்அரவணைப்பு

ஐயாநீசென்றுவிட்டாய் இல்லைஇல்லை வென்றுவிட்டாய்
மெய்யான பொய்யுடலை இன்றுவிட்டாய்
எய்யாத இடத்தில்நீ என்றும்நிற்பாய்
இகமெல்லாம் உன்புகழ் பரவிநிற்கும்
உலகில்நீ வாழ்ந்தபோது செய்தவையோஅநேகம்
உயிருள்ளவரை நாம் மறப்போம் இல்லை.
உத்தமனே! நீமீண்டும் பிறக்கவேண்டில்
திருமலையில் தான் நீர் பிறக்கவேண்டும்.

இவ்வண்ணம்
கலாவிநோதன் கலாவிருதன் கலாபூஷணம்
**த.சித்தி அமரசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார்
# தமிழறிஞர் புலவர்
# சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்

தேவாரம் பாடல் பெற்ற தெய்வத்திரு நகராம் திருக்கோணமலையில் ஞானசம்பந்தப் பெருமான் பெயரைக் கொண்ட வீதியில் அடக்கமாக வாழ்ந்துவந்த பெரியார் தமிழறிஞர் புலவர் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் அண்மையில் கனடாவில் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் நாம் எல்லாம் அதிர்ச்சி அடைந்தோம். அன்னாருடைய இழப்பு திருகோணமலை மாவட்டத்திற் கோர் பேரிழப்பாகும்.

இப்பெரியார் 1932ம் ஆண்டு பிறந்தவர் அமரத்துவம் அடையும்போது அன்னாருக்கு எழுபத்திநான்கு வயதாகும். அதாவது தன்னுடைய 74 ஆவாது அகவையில் எம்மைவிட்டுப் பிரிந்த சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயாவின் பன்முகப் பட்டபணியை எடுத்துப்பார்க்கும் போது அவர் செயல்பாட்டின் சிறப்புத்தன்மையை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது. என்றால் அது மிகையாகாது.

திருக்கோணேசர் சந்தான பரம்பரையைச் சேர்ந்த சிவாச்சாரியரான இவர் மடத்தடி அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயப் பிரதம குருவாக இருந்தபோது ஆலயத்தை நல்ல முறையில் நடாத்தி வந்தார் அயலவர்களோடும் அடியார்களோடும் ஈடுபாட்டுடனும் அர்பணிப்புடனும் செயலாற்றியவர் ஆவார்.

அருள் மிகு சமாது தங்கவிநாயகர் ஆலயம் உப்புவெளி அருள் மிகு பெரிய தொடுவாய்ப்பிள்ளையார் ஆலயம், பத்ரகாளி ஆலயம் ஆகியவற்றின் தர்மகத்தாவாவும் பிரதம குருவாகவுமிருந்து அரும்பணியாற்றியவர் இவ் ஆலயங்களை தெய்வசாநித்தியம் மிக்கவையாகவும் அருட்பொலிவுடனும் திகழச் செய்ததில் தன்னிகரற்று விங்கியவர்.

மேற் குறிப்பிட்ட ஆலயங்களில் அருள் மிகு சமாது தங்கவிநாயகர் ஆலயம் இன்று புதுப் பொலிவுடன் அருளாட்சி மிக்கதாக மிளிரச்செய்ததொடு மேற்கூறப்பட்ட ஆலயங்களின் தர்மகத்தாப் பொறுப்பையும் தன்னுடைய மருமகனான சிவஸ்ரீ உருத்திர அருந்தவகுமார் (கண்ணன் ஐயா) அவர்களிடடம் ஒப்படைத்து விட்டு அமைதியாக இருந்து வந்தார். பல துறை விற்பன்னராக விளங்கிய புலவர் ஐயா திருக்கோணமலையில் இருந்து தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலக்கழகத்தில் பயின்று புலவர் பட்டம் பெற்றுத் திரும்பியவர்ராவார். இவரும் ஆசிரியர் ஸ்ரீஸ்கந்தராசாவும் இணைந்து முதன் முதலாகத் திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற 1963ம் ஆண்டு “திருக்கோணேஸ்வரம்” என்ற அரிய நூலை எழுதி வெளியிட்டார்கள் இந்த நூல் இரண்டாம் பதிப்பாக 1996ம் ஆண்டு அருள் மிகு ஆலடிவிநாயகர் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நூலில் திருக்கோணமலையிலுள்ள சகல சைவாலயங்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். அத்துடன் இந் நூலில் திருக்கோணமலையின் சமூகவளர்ச்சி திருகோணமலைத் தமிழ்ப்புலவர்கள் திருக்கோணமலை வரலாற்று மூலகங்கள் என்ற தலைப்புக்களில் குறிப்பிடத்தக்க அரிய விடயங்களைக் குரிப்பிட்டுள்ளாரர்கள்.

சமய விடயங்களில் எழுதும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களை உரிய ஆதாரத்துடன் எடுத்து விளக்கும் ஐயாவின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையால் எமது திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆலோசகராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டார். சைவத்தமிழ் அறிஞர் குழுவின் தலைவராகவும் இருந்து அவ்வப்போது ஆலய அறங்காவலர்களுக்கும் சிவாச்சாரியார்களுக்கும் இளைஞர்களுக்கும் அனபர்களுக்கும் சிறந்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நல்கி வந்தார்.

சோதிடத்தில் ஆழ்ந்த அறிவு பெற்ற புலவர் ஐயா அவர்கள் கணணியிலும் சோதிடக்கலையை அறிமுகம் செய்து முற்போக்காளராக செயல்பட்டு வந்தார். திருவள்ளுவர் கழகத்திலும் ஐயாவின் பணி இன்றியமையாது இருந்தது. வைத்தியத்துறையிலும் குறிப்பாக சித்தவைத்தியத்தில் திறம்படச் செயல்பட்டு வந்த ஐயா அவர்கள் அக்குபஞ்சர் முறையிலும் நோயாளர்களுக்கு உதவி வந்தார்.

மேலும் இந்து இளைஞர் பேரவையானது இளைஞர்களை ஒன்றிணைத்து சிறப்புடன் செயலாற்றத் திருமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென வலியுறித்தியதோடு " சிவ தீட்சை வழங்குங்கள்" எனக்கூறி எமக்கு வழிகாட்டியாக விளங்கியவராவார்.

எனவே புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயாவின் ஆத்மா சாந்தியடையக் கோணேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களை போற்றி வணங்குகின்றோம். புலவர் ஐயாவின் பணியினை அவருடைய குடும்பத்தவர்கள் முன்னெடுத்துச் செல்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

சிவஞானச்செல்வர்
**செல்லப்பா சிவபாதசுந்தரம்**
மதிப்பார்ந்த பொதுச்செயலாளர்
திருக்கோணமலை மாவட்டம்
இந்து இளைஞர் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்
# சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்
# அஞ்சலிச் செய்தி

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற பொய்யா மொழிக்கொப்ப சிறப்புடை மரபில் பாசுபத அந்தணர் வழியில் தோன்றிப் பெருமை அடைந்தவர் புலவர் சோமாஸ்கந்தக் குருக்களவர்கள். திருக்கோணமலை திருக்கோணேசப் பெருமானின் பூசை , விழாக்களைச் செய்ய குளக்கோட்டு மன்னனால் அழைத்து வரப்பட்ட திருக்கோணேசர் சந்தான பரம்பரையைச் சேர்ந்த சிவாச்சாரியர்களுள் ஒருவர் சோமாஸ்கந்தக் குருக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இளமையிலேயே தந்தையை இழந்த இவர் தமது தாயாரின் அரவணைப்பிலும் , எமது மாமனாரும் குருக்களின் பேரனாருமாகிய ஏ.வை. விஸ்வலிங்கக் குருக்களின் மேற்பார்வையிலும் கல்வியிலே சிறந்து சம்ஸ்கிருதம் , தமிழ் , ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வல்லவராக விளங்கினார். திருக்கோணமலையில் ஆங்கிலப்பாடத்தில் கூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். பின்னாளில் வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருவாக இருந்த ஆரிய திராவிட பாஸா விற்பன்னர் பிரம்ம ஸ்ரீ பூர்ணாணந்த சிவாச்சாரியாரின் பெருமை மிகு புத்திரர்களுள் ஒருவராகிய வியாகரண சிரோண்மணி சிவாசாரிய கலாநிதி பூர்ணாணந்த குருகுல அதிபர் சிவஸ்ரீ பூரண தியாகராஜ சிவாச்சாரியார் அவர்களின் தூண்டுதலுக்கும், வேண்டுதலுக்கும் ஏற்ப சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் கசடறக் கற்று புலவர் என்னும் சிறப்புபட்டத்தை பெற்றார். இவரது படிப்புக்கு உறுதுணையாக அவரின் தமக்கையாரின் கணவர் இ. கந்தசாமி ஐயா அவர்கள் இருந்து கவனித்து வந்தார்.

நாடு திரும்பிய அவர் பல்கலைகளையும் கற்றதோடு சோதிடம், வைத்தியம், பல்வேறு கண்டுபிடிப்புகளிலும் சிறந்து விளங்கினார். ஆத்தோடு பாரம்பரிய ஆலயங்களிலும் பூசை விழாக்களை சிறப்பாக செய்து வந்தார். அத்துடன் நில்லாது குருமாரின் வேண்டுகோளிற்கேற்ப சிவப்பிராமண ஒன்றியத் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். சாமாது தங்கவிநாயகப் பெருமானின் கும்பாபிசேகத்தைத் தலைமை தாங்கி சிறப்பாக முடித்துவைத்த அவர் பிள்ளைகளை காணபதற்காக கனடா சென்ற வேளை காலனின் கையில் சிக்கி சிவைக்கியம் ஆனார். ஊறவினராகிய அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நானும் எனது குடும்பத்தினரும் பேர்அதிர்ச்சிக்கு ஆளானோம். அவரின் மறைவு ஜீரணிக்க முடியாததொன்று. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆதி கோணேசப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இவ்வண்ணம்
**வேதகிரியா சிரோன்மணி**
**சிவஸ்ரீ செ. தியாகராஜக் குருக்கள்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவராலும் பாராட்டப்பட்ட புலவர் சோமாஸ்கந்த ஐயா அவர்கட்கு எமது அஞ்சலி

நான் சிறுவயதில் இருந்தே ஐயாவை நன்கு அறிந்தவன். அனைவரிடத்திலும் அன்பாகவும் சாந்தமாகவும் பழகக்கூடியவர் தினசரி காலையும் மாலையும் தவறாது சமாது தங்கவிநாயகர் ஆலயத்திற்கு பூசைக்கு வரும் பொழுது என்னிடம் ஆத்மீகம் சம்பந்தமான விடையங்களையும் அதன் தத்துவங்களையும் விளக்கிக் கூறுவார். அண்ணாமலைப்பல்கலைக் கழகக்கூடத்தில் அவர் படித்த காலத்தின் நிகழ்வுகளை கூறக் கேட்டிருக்கின்றேன். கடைசியாக ஐயா அவர்கள் கனடா செல்லும் பொழுது வீட்டு வாசலில் வைத்து சந்தோசமாக வழியனுப்பி வைத்தேன். அதன்பின் ஐயாவின் சுக செய்திகளை அவரின் மருமகன் அருந்தவகுமார் (கண்ணன் ஐயா) அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். திடீரென அன்று மாலை கேட்ட செய்தியால் கலக்கமுற்றோம் பிறப்புண்டேல் இறப்பு உண்டு என்பதை நினைத்து மனம் சாந்தியடைவதோடு அன்னாரின் பிரிவால் துயர் உறும் அனைவருக்கும் எமது கோணநாயகம்பெருமான் மனச்சாந்தியைத் தந்தருள வேண்டுகின்றோம்.

மீண்டும் பிறப்பு உண்டேல் ஐயா திருகோணமலையில் மீண்டும் பிறந்து சமாது தங்கவிநாயகருக்கே சிவத்தொண்டு புரிய இறைவன் நல்லருள் புரிவாராக.

**ந.மகேந்திரஜோதி குடும்பத்தினர்**
229,பிரதான வீதி,
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பரப்பிரம்மத்தின் தூய நிழலிற் சரணமெய்திய
தவத்திரு குருக்கள் ஐயா அவர்களே

சோமாஸ்க்கந்த நிலையை எய்திய தங்கள் திருப்பாதங்களை என் இதயத்திலிருத்தி வாசமலர் கொண்டிறைஞ்சி நின்று, தெய்வ புலமைத் திருவள்ளுவார் கூறிய வண்ணம், கல்வி நிலை தவநிலை துறவு நிலை என்னும் முத்திநத்தாருக்கும் உறு துணை நின்று பற்றுக் கோடு அற்றவர்களுக்கும் பிதிரர்களுக்கும் தெய்வத்துக்கும் புதியவர் என்று முறையே சொல்லப்படுகின்ற ஐந்திநத்தாருக்கும் அறநெறி நின்று துணை புரிந்தும், தங்கள் பரம்பரை என்றும் பொலிவுற்று எதிலும் எஞ்ஞான்றும் பழியெய்தா நிலை நின்று அன்புடன் பிறர்க்குதவும் பாங்கினின்றும் அறம் வளர்த்து, அண்டினோர் அனைவரையும் நற்குண நற்செயய்கைகள், நல்லுபதேசம் என்பவற்றால் ஆதரித்தும் ஆகர்சித்தும் அறத்தின் வழியே நின்று பிறரையும் அறவழியிற் செலுத்துவதற்கு தாமும் எடுத்துக்காட்டாக வையதத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இகத்தில் மட்டுமின்றி பரத்திலும் தெய்வத்துக்கு கொப்பாக நின்று தெய்வமாகி, இருப்போருக்கும் யாவற்றாலும் காவல் தெய்வம் போல் மிளிர்ந்து சாயுச்சிய நிலையையடைந்த தங்கள் ஒழுக்காற்றில், தவம் கல்வி சீரிய பண்பு என்பவற்றால் உலகாண்ட தெய்வம் தாங்கள். துங்கள் பொற்பாதம் பணியும் பேறு கிடைக்க அருள் பாலித்த திருமலை மடத்தடிமேய ஸ்ரீதங்கவிநாயகர் தம் மலர்ப் பாதம் பணிந்திறைஞ்சி இதய சுத்தியுடன் இச் சிறு சொன் மாலையைத் தங்கள் திருவடித்தாமரையில் புனைகின்றேன்.

மேலும் "இவ்வுலக வாழ்வை நீத்துப் போன நல்ல உள்ளங்கள் திரும்பப் பிறவி எடுப்பததில்லை" என்ற ஆன்றோர் வாக்கிற்கினைய சாயுச்சிய நிலை எய்திப் பேரின்பப் பெருவாழ்வு எய்திய தங்கள் பொற்றிருப்பாதங்கள் எங்கள் நெஞ்சங்களை நிறைத்து நிற்கும் என்பதில் இஞ்சித்தும் ஐயமில்லை. எங்கள் நெஞ்சங்களிற் கிளர்ந் தெழும் துன்பங்கள் நீங்கி இன்பவாழ்வ எய்தத் தங்கள் அருட்கண்ணோக்கு எங்களுக்கு வழி சமைக்கும். அந்த நிம்மதியில் தங்கள் திருவினையில் உருவாகி ஓங்கி நின்று அருட்கடாட்சம் பொழிந்து நிற்கும் ஸ்ரீ சமாது தங்கவிநாயகப் பெருமானின் அருள் பொழியும் திருக் கனேசலிங்கம் அருளௌி கான்று நின்று காக்கும் என்று மன நிறை வெய்தி நிற்கின்றோம் ஐயா!

துன்பமில்லாப் பெருவாழ்வு எய்திய திருமகள் பெருமகன் தாங்கள் முத்தமிழும் நல்கும் ஸ்ரீ சித்தி விநாயகன் சமாது தங்கவிக்னேஸ்வரன் உயர் கருனை பொழியும் கணபதி தங்களை உயர் பதவியிற் சேர்த்துக் கொண்டது போலவே தங்கள் திருக்குழந்தைகள் அவர் பாலுதித்த பிள்ளைக்கனியமுதங்கள், உற்றார் உறவினர் யாவரும் இனிதே வாழ்வாங்கு வாழ்வதற்கு உயர் கருணை பொழியும் இன்பக் கடல்மூழ்கி இன்புற்றிருக்க மடத்தடி ஸ்ரீ சமாது தங்கவிநாயகர் சித்தியெல்லாம் அருளி என்றென்றும் துணைநிற்பார் என்பதில் ஐயமேதுமில்லை. ஆனால் ஐயனே மேற்கூறியவற்றால் எம்மனம் ஒருப்படவில்லை கண்ணீர் விட்டே தொழுகின்றோம் தங்கள் தண்ணனி மிகு திருப்பாதங்களை எங்கள் எண்ணத்திலுயர்ந்துறைந்த தங்கள் தூய இதயந்தன்னை

இந்த வேளையில் சிவானுபூதிமான் திருறை தந்த திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருப்பதிகம் ஒன்றையும் அதே கருத்தைக் கொண்ட தமிழ் மூதாட்டி ஔவையும் அருளிய பாடல்கள் பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்- வேண்டாம்
நமக்கும் அது வழியே நாம் போமளவும்
எமக் கென்னென்றிட்டுட்டிரும்"

" தந்தையார் போயினார் தாயாரம் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டுடாரு கூற்றுவர் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்த நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே
ஆந்தணாரூர் தொழு துய்யலாம் மையல் கொண்டஞ்சல் நெஞ்சே"

எனவே நாமும் இறைவன் அம்பலக்கூத்தன் செம்பாதம் தொழுதேத்திப் பணிந்து நல் வாழ்வு வழ்வோமாக.

வணக்கம்

**அன்பன் நாகப்பர் சோமசுந்தரம்**
**நயினை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் உறைவிடமாய்

பண்பின் சிகரமாய் பலருடன் இனிதாய் பேசி
அன்பின் அணிகலனாய் பெருவாழ்வு கண்டு
என்றும் என் மனததில் ஏற்றம் பெற்றீர்
தன் வாழ்வில் தனக்கெனத் தனித்துவமாய்

சமாதுப் பெருமானுக்கு ஒரு கணமும்
விடாது தொண்டாற்றித் தொழுது வாழ்ந்தீர்
ஆலயம் நான் வரும் போதெல்லாம்
அன்பாய் முறுவலித்து ஆறுதலாய் நோக்கிடுவீர்

"ஆலயமா உங்கள் அலுவலகம்
அர்சனை தானா தங்கள் வருமானம்" எனக்
குழந்தைத் தனமாய் அகவை ஆறில்
குறும்பாய் நான் கேட்டு நின்ற வேளை!

முறுவல் பூத்து என் முதுகில் தட்டி
முகம் பூத்து "குழந்தாய் நான் செய்வது
வருமானம் தரும் தொழில் ஒன்றல்ல
மனப்பாரம் நீக்கும் இறை தொண்டு" என்றீரே

அகவை பல நான் கடந்த பின்னும் சிறு
மகவைப் போல் குழைவாய் "படிக்கிறாயா
மருத்துவராய் நீ வருவாயா எனக்கு நோய் தீர
மருந்து நீ தருவாயா?" எனக் கேட்பீரே

சிரித்து நான் நிற்கும் வேளைகளில்
"சீரிய சாதனைகள் படைக்க வேண்டும்" என
சிறப்பாக எனை வாழ்த்தி ஆசி பலகூறி
சிந்தையில் என்றும் உறைந்து விட்டீரே

பிறந்தோர் இறப்பது புதுமை யொன்றால்ல
இறந்தோர் ஆற்றிய இறவாச்செய்கையே
இறந்தும் எம் சிந்தையில் வாழ்வது அது
ஆன்றோர் சிலர் உமைப் போன்றோரே

**செல்வி மைதிலி விவேகாணந்தன்**
பிரதான வீதி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்தி அடைய பிராத்திக்கின்றோம்

திருக்கோணமலை சமாது தங்கவிநாயகர் ஆலயம், பெரிய தொடுவாய் பிள்ளையார் ஆலயம், தொடுவாய்ப் பத்திரகாளி ஆலயம், தெய்வானைப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் ஆதீன கர்த்தாவும் வேதாகமங்களையும் இந்துசமய கிரிகை முறைகளையும் தெளிவுறக் கற்றுணர்ந்த தமிழ் அறிஞரும் சோதிடருமாகிய புலவர் சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்களின் மறைவையொட்டி இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் அவரது ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

திருகோணமலை மக்களின் இந்துசமய மேம்பாட்டிலும் கல்விவளர்சியிலும் பெரிதும் அக்கறையுடன் செயற்பட்டார் ஆலய வழிபாட்டிற்கு வழிகாட்டியாக இந்து பாரம்பரியங்களை செவ்வனே கடைப்பிடித்து சிறப்பான பணியை செய்து மக்கள் மனதில் நீங்காப் புகழ் படைத்த புலவரது இழப்பு இந்து மக்களுக்கு பேரிழப்பாக நாம் கொள்ளவேண்டும். அன்னாரது உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

**இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்கலத்தின் சார்பில்**
**இந்துசமய கலாச்சார திணைக்கள கலாச்சார உத்தியோகத்தர்**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடத்தடியில் விளைந்த மாணிக்கம்

## புலவர். சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக் குருக்கள்

மடத்தடி மாரியம்மன் பாரம்பரிய ஆதீனகுருவே!
முத்தமிழும் வேதசாஸ்திரமும் கற்றுணர்ந்த கனியமுதே!
ஆம்பாளுக்கு வாழ்நாளை அர்ப்பணித்த ஆரமுதே!
எங்கள் பாசமிகு குருக்கள் ஐயாவே!

நடுவில் மாரியம்பாள் தனைப்பிரிந்து கலக்கமுற்றாயே!
தாயவளின் கலகமிது என்று தானுரைத்தீரே!
மீண்டும் அம்பாளை சிறப்பிக்க அழைத்தோமே!
உரியகாலம் வரின் வருவேனென வாக்களித்தீரே!

அம்பாள் ஆலயம் வருவீரென ஆர்ப்பரித்தோமே!
ஆனால் ஆறாத்துயரில் எமையாழ்த்திச் சென்றாயே!
தன்னடிக்கு அழைப்பு விடுததாளோ அம்பாளே!
தங்களைப்போல் குருவைதனை ஆராதிக்க அழைப்பாளே!

மடத்தடியின் மடியில் விளைந்த மாணிக்கமே!
எங்கள் சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயாவே!
எம்மைப் பிரிந்துசென்ற உமது ஆத்மாவே!
சாந்தியுற மாரியம்பாள் மலரடி வேண்டுகிறோமே!

**மடத்தடி மாரியம்மன் ஆலய**
**அயலவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை தந்த முத்து
## புலவர் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயா

# அஞ்சலிச் செய்தி

திருக்கோணேசர் சந்தானத்தில் வந்தவர் சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயா புன்முறுவல் பூத்தமுகம் கழுத்தில் உருத்திராட்சம், நெற்றியில் விபூதி, தோற்றத்தில் மென்மை கல்வியில் சிகரம், நினைத்ததை முடிப்பதில் நக்கீரன், பாசத்தின் உறைவிடம், இப்படி பல்வேறு திறமைகள் கொண்டவர் எங்கள் ஐயா. காளிராசா காளிராசா என்று என்னை எப்போதும் அழைப்பார் அவர் சொல்லும் கருமங்களை செய்து கொடுப்பதில் எனக்கொரு திருப்தி- எப்பொழுதும் மாரி அம்பாள் தங்கவிநாயகர் சிறப்புக்களை கூறுவார். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் சமாது தங்க விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை அடியவர்களின் உதவியுடன் சிறப்பாக நிறைவேற்றினார். வயதானபோதும் மேலும் கற்க வேண்டும் என்ற ஆசையுடன் புதிய புத்தகங்கள் வாங்குவார். "பலா மரத்தை நாடும் பறவைகள்" போல அவரை நாடி சமய ரீதியான சந்தேகங்களை கேட்டறிய பல பெரியோர் ஐயாவிடமே வருவார்கள் அவர்களை அன்புடன் அமைதியாய்ப் பேசி விளக்கமளிக்கும் அருளாளர். சத்திய சாயியின் மீது மிகுந்த பக்தி கொண்டவர். இவ்வாறான பெருமைகள் உடைய ஐயாவிற்கு அவரது கனவுகளை நிறைவேற்றக் கூடிய மருமகன் கண்ணன் ஐயா வாய்த்தமை அவருக்கும் அடியார்கள் எமக்கும் தங்கவிநாயகர் தந்த பரிசாகும். தன்னைத் தொடர்ந்து தனது கருமங்களை மகளும் மருமகளும் சிறப்பாக நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் சிவனடி சேர்ந்தார். இவரது இழப்பு திருமலைவாழ் சைவ அடியார்கள் அனைவருக்கும் ஓர் பேரிழப்பாகும். ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கோணேசப்பெருமானை வேண்டுகின்றோம்.

**அன்பர் காளிராசா**
மாரியம்மன் கோவிலடி
திருக்கோணமலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோணேஸ்வரம் (இரண்டாம் பதிப்பு)**
**நூலாசிரியர்களுள் ஒருவரான**
**புலவர் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களுக்கு**
**ஆலடி விநாயகர் தேவஸ்தானம் வழங்கும்**


# பாராட்டுப் பா மடல்

**வெண்பா**



"சைவத்தமிழ்த் தொண்டு தளராமல் ஆற்றிவரும்
பொய்யில் புலமை புகழாளர் வை. சோமாஸ்
கந்தக் குருக்களது கைநூலைக் கற்றுவரும்
எந்நாவும் வாழ்த்தும் இனிதே"

ஆதிசைவக் குலத்தில் விளைந்த
ஆரமுதான அருந்தமிழ் உண்டு
பல்கலைக் கழகப் பட்டம் பெற்று
நல்ல புலவராய் நாளும் தமிழுக்கும்
சைவத்திற்கும் தன் கடனாற்றி
உய்யும் மக்கட்குயர் வழிகாட்டி
தங்கவிநாயகர் சமாதுப் பிள்ளையார்
மங்காப் புகழுடை மடத்தடி
மாரியம்மனுக்கும் ஆதீனகுருவாகி
சீலத் தொழுகி சித்தவைத்தியமும்
கைவரப் பெற்று கண்ணியத்தோடு
வையத்து அமைதியாய் வாழ்வினைக்காத்து
போத்துக்கேயரின் போக்கால் மக்கள்
ஆர்த்துப் புதைத்த அகழ்ந்தெடு சிலைகள்
அறுபத்த மூன்றில் அருங்குட முழுக்கிடு
பெறுமதி மிக்க பேரின்பம் விளை
புனித நாளன்று புலவர் ஐயா நீர்
நனி உயர் பணியொன்றாற்றினீர் நன்றே!
குனித்த புருவன் கோணநாயகனின்
பனித்த சடையை பால் வெண்ணீற்றை
இனித்த பொற்பாத எழிலினையெல்லாம்
மனித்தப் பிறப்பின் மதிப்பினைக் காக்க
நூலாய்த் தந்ததை நுவலுவார் யாரோ?
பாலா? தேனா? பாகா? சாறா?
இந்நூல் மீண்டும் இரண்டாம் பதிப்பாய்
பொன் ஆலடியின் புகழ் தேவஸ்தான
சிவஸ்ரீ முத்துக்குமார சுவாமியின்
தவப்பெரு மைந்தர் தாங்கிய சிவஸ்ரீ
(சோதிடப் புலமையோன்) சுந்தரலிங்க
தேசிகர் தம்முடன் சிவஸ்ரீ சண்முகரெத்தின
குருக்கள் ஆகியோர் இனிதாய் வாழ்த்தியே
வந்திடும் இத்தினம் "ஆன்மீக வள்ளல்" ஆம்
பல்லோர் விரும்பிய பட்டமும் தந்தே
பண்புடன் ஏற்கப் பணிவாய் வேண்டி
அன்புடன் மேலும் அரும் பணியாற்ற
வாழ்த்தினோம் ஐயா வாழ்க பல்லாண்டே!



**27-08-1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"திருக்கோணேஸ்வரம்" நூல் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழாவின் போது பாராட்டுப்பா மடல் வழங்கப்பட்டல் [27.08.1996]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழாவில் கௌரவம் பெறும்

# புலவர். வை. சோமாஸ்கந்தக் குருக்கள்



திருக்கோணமலையைச் சேர்ந்த வைத்தீஸ்வரக் குருக்கள் தம்பதிகட்கு 1932ஆம் ஆண்டு மார்ச்மாதம் 10 திகதி மாரியம்மன் கோவிலடியில் இருக்கும் இவரது இல்லத்தில் பிறந்தார். இவரது மூத்த சகோதரியார் பத்மாவதி ஆவார்.

திருக்கோணமலை மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும் (விக்னேஸ்வரா கல்லூரி) ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றார். அதன்பின் இந்தியா சென்று அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் மாலை வேளைகளில் சிதம்பரம் ஆறுமுக நாவலரின் சித்தாந்த கல்லூரியிலும் சேர்ந்து புலவர் பட்டம் பெற்றார்.

இலங்கை வந்ததும் நாவலர் அக்கடாமியை ஆரம்பித்து, திருக்கோணமலையில் முதல் முறையாக வர்த்தகம், பொருளாதாரம், கணக்கியல் பாடங்களைக் கற்பித்தார்.

பாடசாலை காலத்தில் வள்ளுவர் கழகத்தின் தலைவராக இருந்து பல செயற்பாடுகளைச் செய்தார். கழகத்தால் வெளிவந்த கையெழுத்துச் சஞ்சிகை ''கமலை'' ''திருக்குறள் மாநாடு'' இவ்வாறு சாதனையின் சான்று பற்றி கல்வி இதழும் எழுதியது.


தாய்வழிப்பேரன் விஸ்வலிங்கக் குருக்களிடம் வைத்தியம் கற்றார். சாஸ்திரம் எண்கணிதம் இவரது முயற்சியால் கற்றது.

டாக்டர் அருள் ராமலிங்கத்தின் தூண்டுதலாலும், வேண்டுதலாலும் ''அக்கியுபஞ்சர்' வைத்தியத்திற்கு தேவைப்பட்ட கருவியை, இங்கேயே வடிவமைத்துக் கொடுத்தார்.

இவர் இன்று சமாதுப்பிள்ளையார் கோவில் உப்புவெளி காளிகோயில் ஆகியவற்றின் ஆஸ்தான குருவாகவும், தர்ம கர்த்தாவாகவும் இருந்து வருகின்றார்.

இவர், காலத்தால் போற்றப்பட வேண்டியவர். இவரைக் கௌரவிப்பதில் இப்பிரதேச செயலகம் எடுத்த முயற்சிக்கு எமது பாராட்டுக்கள்.

கலாவினோதன் - கலாபூஷணம்
த. சித்தி அமரசிங்கம்.



சோமஸ்கந்தர், இங்கு வடிவமைத்த அக்கியுப்பஞ்சர் உபகரணத்தின் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை பிரதேச சாகித்திய விழாவில்
அரசாங்க அதிபரால் கௌரவிக்கப்பட்டபோது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கள் வழிதொடர....

எங்களை தங்கள் வழிதொடர வழிநடாத்தி
அந்த அரும்பெரும் பாக்கியந்தனை
எமக்கு அளித்த எங்கள் அன்பு ஐயாவே!
தாங்கள் கற்ற துறைகளில் இருந்து
எல்லோருக்கும் பயன்படும் வகையிலான
மிகச் சிறிய அளவு விடயங்களை
தங்களின் பாத கமலங்களில்
சமர்ப்பிக்கின்றோம்.

அன்பு மருமகன், செல்லமகள்.
**அருந்தவகுமார் (கண்ணன்)**
**சிவரஞ்சனி (ரதி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ மந்திரம்

ஓம்
பூர்புவஸ் ஸுவ:
தத்ஸவி துர்வரேண்யம்
பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோ தயாத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ கணபதி ஸஹஸ்ரநாம பாராயண முறை

இந்த ஸ்ரீகணபதி ஸஹஸ்ரநாமத்தை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்தால் ஞானமும் செல்வமும் புகழும் ஸகலகார்ய ஸித்தியும் உண்டாகும்.

காலையில் அல்லது மாலையில் ஸ்நானம் ஸந்தியாவந்தநம் செய்தபின் ஸஹஸ்ரநாம பாராயணம் செய்யலாம். தாமே பாராயணம் செய்வதற்கு வசதியில்லாதவர்கள் பிறரைக் கொண்டும் பாராயணம் செய்விக்கலாம். ஸங்கல்பம் சொல்லும் போது தாம் கோரிய பலனைச் சொல்லிக் கொள்ள வேண்டும்.

இந்த ஸ்ரீ கணபதி ஸஹஸ்ரநாமம் முழுவதையும் பாராயணம் செய்வதே உத்தமமானது. அதற்கு வசதியோ அவகாசமோ இல்லாதவர்களின் ஸௌகரியத்திற்காக, இந்த ஸஹஸ்ரநாமத்திலிருந்து குறிப்பாகச் சில நாமங்களைக் கீழே தருகிறோம். சில பலன்களையும் குறிக்கிறோம். அந்த அந்தப் பலனை விரும்புகிறவர்கள் அந்த அந்த ஸ்லோகத்தை சிரத்தையுடன் ஜபித்துக் கொண்டிருந்தால் ஸ்ரீ விக்நேஸ்வரரின் அருளால் இஷ்ட ஸித்தியை அடையலாம்.

ஸகல காரிய ஸித்திக்கான எளிய முறை

## 1 விக்நங்கள் விலக-

இந்த 5 ஆவது சுலோகத்தை தினமும் 10 தரம் சொன்னால் இடையூறின்றி காரியங்கள் நிறைவேறும்.

மஹாகணபதிர் புத்தி ப்ரிய: ஷிப்ர ப்ரஸாததந
ருத்ர ப்ரியோ கணாத்யக்ஷ உமாபுத்ரோ ऽகநாஸந:

## 2 நாகதோஷ நிவிருத்திமூலம் புத்திரஸந்ததி உண்டாக

இந்த 36,37 ஆகிய சுலோகங்களைப் படித்தால் ஸர்ப்பதோஷ நிவிருத்தியாகி புத்ரஸந்ததி உண்டாகும்.

ஸ்தம்பகாகார கும்பாக்ரோ ரநந்தமௌளிர் நிரங்குஸ:
ஸர்ப்பஹார கடீஸூத்ர: ஸர்ப்ப யஜ்ஞோபவீதவாந்

ஸர்ப்பகோடீர கடக: ஸர்ப்ப க்ரைவேயகாங்கத:
ஸர்ப்ப கக்ஷோதராபந்த: ஸர்ப்பராஜோத்தரீயக:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 விரோதிகளை விரட்ட

இந்த 55 ஆவது சுலோகத்தை 18 தடவை படித்தால் விரோதிகள் அழிவர்

வஜ்ராத்யஸ்த்ர பரீவார: கணசண்டஸமாஸ்ரய:
ஜயோ ஜய பரீவார: விஜயோ விஜயாவஹ:

## 4 சந்தோஷம் பொங்க

இந்த 57,58 ஆகிய இரு சுலோகங்களை காலையில் 10 தரம் மனனம் செய்தால் துக்கம் நீங்கி சந்தோஷம் உண்டாகும்.

அநந்தாநந்த ஸுகத: ஸுமங்கள ஸுமங்கள:
இச்சாஸக்திர் ஜ்ஞாநஸக்தி க்ரியாஸக்தி நிஷேவித:

ஸுபகா ஸம்ஸ்ரிதபத: லலிதா லலிதாஸ்ரய:
காமிநீ காமந: காம: மாலிநீ கேளிலாலித:

## 5 வித்யாபிவிருத்தி உண்டாக

இந்த 59 ஆவது சுலோகத்தை படித்தால் கல்வி வளரும்

ஸரஸ்வத்யா ஸரிதோ கௌரீ நந்தந: ஸ்ரீநிகேதந:
குருகுப்த பதோ வாசா ஸித்தோ வாகீஸ்வரேஸ்வர:

## 6 அம்மை முதலிய ஸ்போடகங்கள் சாந்தியடைய

இந்த 73 ஆவது சுலோகத்தை 108 தரம் ஜபிக்க அம்மை முதலியன சாந்தமாகும்.

ஸ்வபக்த விக்ந நாஸஸ்ச ஸுரத்விட் சக்தி லோபக்ருத்
விமுகார்சா விலுப்தஸ்ரீ: லூதாவிஸ்போட நாஸந:

## 7 தனம் உண்டாக

இந்த 92 ஆவது சுலோகத்தை படித்தால் தனதான்யாதிகள் பெருகி சுபிக்ஷம் உண்டாகும்.

தநதாந்யபதிர் தந்யோ தநதோ தரணீதர:
த்யாநைக ப்ரகடோ த்யேய: த்யாநோ த்யாந பராயண:

## 8 வியாதிகள் நீங்க

இந்த 93 ஆவது சுலோகம் வியாதிகளைப் போக்கி ஆரோக்கியம் கொடுக்கும்

நந்த்யோ நந்தி ப்ரியோ நாதோ நாதமத்ய ப்ரதிஷ்டித:
நிஷ்கலோ நிர்மலோ நித்யோ நித்யா நித்யோ நிராமய:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 மனதில் ஏற்படும் பயத்தை போக்க

இந்த 99 ஆவது சுலோகத்தை தினமும் 10 தரம் படிக்கவும்

ப்ருகேஷபதத்த லக்ஷ்மீக: பர்கோ பத்ரோ பயாபஹ:
பகவாந் பக்தி ஸுலபோ பூதிதோ பூதி பூஷண:

## 10 பசி உண்டாக.

இந்த 103 ஆவது சுலோகத்தை படித்தால் பசி உண்டாகும்.

ரஸோ ரஸ ப்ரியோ_ ரஸ்யோ ரஞ்ஜகோ ராவணார்ச்சித:
ரக்ஷோ ரக்ஷாகரோ ரத்ந கர்போ ராஜ்யஸுகப்ரத:

## 11 வியாபாரத்தில் லாபம் உண்டாக

இந்த 104 ஆவது சுலோகத்தை பல தடவை ஆவர்த்தி செய்ய லாபம் சித்திக்கும்

லக்ஷோ லக்ஷ ப்ரதோ லக்ஷ்யோ லயஸ்தோ லட்டுக ப்ரிய:
லாஸ்ய ப்ரியோ லாஸ்ய பதோ லாப க்ருல் லோக விஸ்ருத:

## 12 வயலில் விளைச்சல் அதிகரிக்க

இந்த 112 ஆவது சுலோகத்தை சொல்லி உழுதால் விளைச்சல் அதிகரிக்கும்

க்ஷேத்ராதிப: க்ஷமாபர்தா க்ஷமாபர பாராயண:
க்ஷிப்ர க்ஷேமகர: க்ஷேமா நந்த: க்ஷோணீ ஸுரத்ரும:

## 13 பிரஸவ கால கஷ்டம் நீங்க

இந்த 114 ஆவது சுலோகத்தை பாராயணம் செய்தால் சுகப் பிரசவம் ஏற்படும்.

ஆபிருப்யகரோ வீர ஸ்ரீப்ரதோ விஜயப்ரத
ஸர்வ வஸ்யகரோ கர்ப்ப-தோஷஹா புத்ரபௌத்ரத:

## 14 வழக்குகளில் பிரதிவாதியை மடக்க

இந்த 115 ஆவது சுலோகத்தை படித்தால் பிரதிவாதியின் வாதம் எடுபடாது நம் பக்கம் ஜயம் ஏற்படும்.

மேதாத: கீர்த்தித: ஸோக ஹாரீ தௌர்பாக்யநாஸந:
ப்ரதிவாதி முகஸ்தம்ப: துஷ்டசித்த ப்ரஸாதந:

## 15 சூன்யம் முதலிய பிறர் மந்திரங்கள் பலிக்காமல் போக

இந்த 116 ஆவது சுலோகத்தை 108 தடவை ஜபித்து விபூதி அணிந்தால் பிறருடைய ஏவல் சூன்யம் முதலியவை நம்மை ஒன்றும் செய்யா.

பராபிசாரஸமந: து: கபஞ்ஜந காரக
லவஸ்த்ருடி: களா காஷ்டா நிமேஷ: கடிமுஹுர்த்தக:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 நவக்கிரஹ தோஷம் நீங்க-

இந்த 119 ஆவது சுலோகத்தை பாரயணம் செய்தால் நவக்கிரஹ தோசம் குறையும்

ராஹுர் மந்த: கவிர் ஜீவ: புதோ பௌம. ஸஸீரவி:
கால: ஸ்ருஷ்டி: ஸ்திதிர் விஸவ: ஸ்தாவரோ ஜங்கமோஜகத்

## 17 பூத,ப்ரேத பிசாசங்களின் தோஷம் நீங்க

இந்த 120,121 ஆகிய இரு சுலோகங்களை படிக்கவும்

பூராபோக்நிர் மருத் வ்யோமா அஹம் க்ருத் ப்ரக்ருதி: புமாந்
ப்ரஹ்மா விஷ்ணு: ஸிவோ ருத்ர ஈஸ: ஸக்தி: ஸதாஸிவ:

த்ரிதஸா: பிதர: ஸித்தா: யக்ஷா: ரக்ஷாஸ்ச கிந்நரா:
ஸாத்யா வித்யாதரா பூதா: மநுஷ்யா: பஸவ: ககா:

## 18 நான்கு புருஷார்த்தங்கள் சித்திக்க-

இந்த 131 ஆவது சுலோகத்தை படிக்கவும்

சதுர்பாஹுஸ் சதுர்தந்த: சதுராத்மா சதுர்முக:
சதுர்விதோபாயகரஸ் சதுர்வித பலப்ரத:

## 19 அஷ்டைஸ்வர்யம் பொங்க-

இந்த 142, 143 ஆகிய இரு சுலோகங்களை படிக்கவும்

அஷ்டஸக்தி ஸம்ருத்திஸ்ரீ ரஷ்டைஸ்வர்ய ப்ரதாயக:
அஷ்டபீடோப பிடஸ்ரீ ரஷ்டமாத்ரு ஸமாவ்ருத:

அஷ்டபைரவ ஸேவ்யாஷ்ட வஸுவந்த்யோஷ்ட முர்த்திப்ருத்
அஷ்டசக்ர ஸ்புரந்மூர்த்தி ரஷ்டத்ரவ்ய ஹவி: ப்ரிய:

## 20 ஸஹஸ்ரநாம ஜபபலன் சித்திக்க-

இந்த 161,162 ஆகிய இரு சுலோகங்களைப் படித்தால் ஸஹஸ்ரநாம ஜபபலன் கிடைக்கும்

ஸஹஸ்ரபத்ர நிலய: ஸஹஸ்ரபணிபூஷண:
ஸஹஸ்ரஸீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்

ஸஹஸ்ரநாம ஸம்ஸ்துத்ய: ஸஹஸ்ராக்ஷ பலாவஹ:
பணாமண்டல ஸாஹஸ்ர பணிராஜ க்ருதாஸந:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீரஸ்து
# ஸ்ரீ கணபதி
# ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்

ஓம் கணேஸ்வரோ கணக்ரீடோ கணநாதோ கணாதிப:
ஏகதம்ஷ்ட்ரோ வக்ரதுண்டோ கஜவக்த்ரோ மஹோதர: 1
லம்போதரோ தூம்ரவர்ணோ விகடோ விக்நநாயக:
ஸுமுகோ துர்முகோ புத்தோ விக்நராஜோ கஜாநந: 2
பீம: ப்ரமோத ஆநந்த: ஸுராநந்தோ மதோத்கட:
ஹேரம்ப: ஸம்பர: லம்பு: லம்பகர்ணோ மஹாபல: 3
நந்தநோऽலம்படோ பீம: மேகநாதோ கணஞ்ஜய:
விநாயகோ விரூபாக்ஷோ தீர: ஸுரோ வரப்ரத: 4
மஹாகணபதிர் புத்தி ப்ரிய: ஷிப்ர ப்ரஸாததந
ருத்ர ப்ரியோ கணாத்யக்ஷ உமாபுத்ரோऽகநாஸந: 5
குமாரகுரு ரீஸாந புத்ரோ மூஷிகவாஹந:
ஸித்திப்ரத: ஸித்திபதி: ஸித்திஸ் ஸித்தி விநாயக: 6
விக்நோத்துங்கபுஜஸ் ஸிம்ஹ வாஹநோ மோஹி நீ ப்ரிய:
கடிம்கடோ ராஜபுத்ர: ஸகல: ஸம்மிதோऽமித: 7
கூஸ்மாண்டகணஸம்பூத: துர்ஜயோ தூர்ஜயோ ஜய:
பூபதிர் புவநேஸஸ்ச பூதாநாம் பதிரவ்யய: 8
விஸ்வகர்த்தா விஸ்வமுக விஸ்வரூபோ நிதிர் க்ருணி:
கவி: கவீநாம்ருஷபோ ப்ரஹ்மண்யோ ப்ரஹ்மணஸ்பதி: 9
ஜ்யோஷ்ட ராஜோ நிதிபதி: நிதிப்ரிய பதிப்ரிய:
ஹிரண்மய புராந்தஸ்த: ஸுர்யமண்டலமத்யக: 10
கராஹதி த்வஸ்தஸிந்து ஸலில: பூஷதந்தபித்
உமாங்ககேளி குதுகீ முக்தித: குலபாலக: 11
கிரீடீ குண்டலீ ஹாரீ வநமாலீ மநோமய:
வைமுக்யஹத த்ருஸ்ய ஸ்ரீ: பாதாஹத்யா ஜிதக்ஷிதி: 12
ஸத்யோஜாத: ஸ்வர்ணபுஜ: மேகலீ துர்நிமித்தஹ்ருத்
துஸ்ஸ்வப்ந ஹ்ருத் ப்ரஹஸநோ குணீ நாதப்ரதிஷ்டித: 13
ஸுரூபஸ் ஸர்வ நேத்ராதி வாஸோ வீராஸநாஸ்ராய:
பீதாம்பர: கட்கதர: கண்டேந்து க்ருதஸேகர: 14
சித்ராங்க ஸ்யாம தஸநோ பாலசந்த்ர: சதுர்புஜ:
யோகாதிபஸ் தாரகஸ்த: புருஷோ கஜகர்ணக: 15
கணாதிராஜோ விஜய ஸ்திரோ கணபதிர் த்வஜீ:
தேவதேவ: ஸ்மர ப்ராண தீபகோ வாயுகீலக: 16
விபஸ்சித்வரதோ நாதோ நாதபிந்த வலாஹக:
வராஹவதநோ ம்ருத்யுஞ் ஜயோ வ்யாக்ராஜிநாம்பர: 17
இச்சாஸக்தி தரோ தேவ த்ராதா தைத்யவிமர்தந:
ஸம்பு வக்த்ரோத்பவ: ஸம்பு கோபஹா ஸம்புகாஸ்யபூ 18
ஸம்புதோஜா: ஸிவாஸோக ஹாரீ கௌரீ ஸுகாவஹ:
உமாங்க மலஜோ கௌரீ தேஜோபூ: ஸ்வர் பவ: 19
யஜ்ஞகாயோ மஹாநாதோ கிரி வர்ஷஸ்ஸுபாநந:
ஸர்வாத்மா ஸர்வ தேவாத்மா ப்ரஹ்மமூர்த்தா ககுப் ஸ்ருதி: 20
ப்ரஹ்மாண்ட கும்பஸ் சித்வ்யோம பால: ஸத்ய ஸிரோருஹ:
ஜகஜ்ஜந்ம லயோந்மேஷ நிமேஷோக்ந்யர்க்க ஸோமத்ருக் 21
கிரீ ந்த்ரைகரதோ தர்ம: தர்மிஷ்ட ஸாமப்ரும்ஹித:
க்ரஹர்க்ஷ தஸநோ வாணீ ஜிஹ்வோ வாஸவ நாஸிக: 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலாசலாம்ஸஸ் ஸோமார்க்க கண்டோ ருத்ரஸிரோதர:
நதீநத புஜ: ஸர்பாங் குளிகஸ் தாரகாநக: 23
ப்ருமத்ய ஸம்ஸ்திதகரோ ப்ரஹ்மவித்யா மதோத்கட:
வ்யோமநாப: ஸ்ரீஹ்ருதயயோ மேருப்ருஷ்டோர்ணவோதர: 24
குக்ஷிஸ்த்த யக்ஷகந்தர்வ ரக்ஷ: கிந்நர மாநுஷ
ப்ருத்வீகடி: ஸ்ருஷ்டிலிங்க: ஸைலோரூ தக்ரஜாநுக: 25
பூதாளஜங்கோ முநிபத் காலாங்குஷ்டஸ் த்ரயீதநு:
ஜ்யோதிர்மண்ட. லாங்கூல: ஹ்ருதயாலாந நிஸ்சல: 26
ஹ்ருத்பத்ம கர்ணிகாஸாயீ வியத்கேளி ஸரோருஹ:
ஸத்பக்த த்யாந நிகள: பூஜாவாரி நிவாரித: 27
ப்ரதாபீ காஸ்யபஸுத: கணபோ விடபீ பலீ
யஸஸ்வீ தார்மிக: ஸ்வோஜா: ப்ரதம: ப்ரமதேஸ்வர: 28
சிந்தாமணி த்வீபபதி: கல்பத்ரும வநாலய:
ரத்நமண்டப மத்தியஸ்தோ ரத்ந ஸிம்ஹாஸநாஸ்ரய: 29
தீவ்ரா ஸிரோத்ருதபத: ஜ்வாலிநீ மௌளிலாளித:
நந்தா நந்தித பீடஸ்ரீ: போகதா பூஷிதாஸந: 30
ஸகாமதாயிநீபீட: ஸ்ப்புர துக்ராஸநாஸ்ரய:
தேஜோவதீ ஸிரோரத்ந: ஸத்யாநித்ய வதம்ஸித: 31
ஸவிக்நநாஸிநீ பீடஸ் ஸர்வஸக்தயம்புஜாலய:
லிபிபத்மாஸநாதாரோ வஹ்நிதாம த்ரயாலய: 32
உந்நத ப்ரபதோ கூட குல்ப: ஸம்வ்ருதபார்ஷ்ணிக:
பீநஜங்க: ஸ்லிஷ்டஜாநு: ஸ்தூல ரூபோந்நமத்கடி: 33
நிம்நநாபி: ஸ்தூல குக்ஷி: பீநவக்ஷா ப்ருஹத்புஜ:
பீநஸ்கந்த: கம்புகண்ட: லம்போஷ்டோ லம்பநாஸிக: 34
பக்நவாமரதஸ் துங்க தக்ஷதந்தோ மஹாஹநு:
ஹ்ரஸ்வநேத்ர த்ரய: ஸுர்ப்ப கர்ணோ நிபிட மஸ்தக: 35
ஸ்தம்பகாகார கும்பாக்ரோ ரந்நதமௌளிர் நிரங்குஸ:
ஸர்ப்பஹார கடீஸுத்ர: ஸர்ப்ப யஜ்ஞோபவீதவாந் 36
ஸர்ப்பகோடீர கடக: ஸர்ப்ப க்ரைவேயகாங்கத:
ஸர்ப்ப கக்ஷோதராபந்த: ஸர்ப்பராஜோத்தரீயக: 37
ரக்தாம்பரதரோ ரக்த: ரக்தமால்ய விபூஷண:
ரக்தேக்ஷிணோ ரக்தகரோ ரக்த தால்வோஷ்ட பல்லவ: 38
ஸ்வேத: ஸ்வேதாம்பரதர: ஸ்வேதமால்ய விபூஷண:
ஸ்வேதாதபத்ரருசிர: ஸ்வேதசாமர வீஜித: 39
ஸர்வாலயவ ஸம்பூர்ண: ஸர்வலக்ஷண லக்ஷித:
ஸர்வாபரணபூஷாட்ய: ஸர்வஸோபா ஸமந்வித: 40
ஸர்வமங்கள மாங்கள்ய: ஸர்வகாரண காரண:
ஸர்வதைக கர: ஸார்ங்கீ பீஜாபூர கதாதர: 41
இக்ஷுசாபதர: ஸுலீ சக்ரபாணி: ஸரோஜப்ருத்
பாஸீ த்ருதோத்பலஸ் ஸாலி மஞ்ஜரீ ப்ருத் ஸ்வாந்தப்ருத் 42
கல்பவல்லீதரோ விஸ்வா பயதைக கரோ வஸீ
அக்ஷமாலாதரோ ஜ்ஞாந முத்ராவாந் முத்கராயுத: 43
பூரணபாத்ரீ கம்புதரோ விதூதாரி ஸமூஹக:
மாதுலுங்க தரஸ்சூத கலிகாப்ருத் குடாரவாந் 44
புஷ்கரஸ்த ஸ்வர்ணகடீ பூர்ண ரத்நாபிவர்ஷக:
பாரதீ ஸுந்தரீ நாத: விநாயக ரதிப்ரிய: 45
மகாலக்ஷ்மீ ப்ரியதம ஸித்தலக்ஷ்மீ மநோஹர:
ராமாமேஸ பூர்வாங்க: தக்ஷிணோமா மஹேஸ்வர: 46
மஹீவராஹ வாமாங்க: ரதிகந்தர்ப பஸ்சிம:
ஆமோத மோதஜநந: ஸப்ரமோத ப்ரமோதந 47
ஸமேதித ஸம்ருத்திஸ்ரீ: புத்திஸித்தி ப்ரவர்த்தக:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தஸௌமுக்கிய ஸுமுக: காந்தி கந்தளிதாஸ்ரய: 48
மதநாவத்யாஸ்ரிதாங்க்ரி: க்ருதவைமுக்ய துர்முக:
விக்ந ஸம்பல்லதோபக்ந: ஸதோந்நித்ர மதத்ரவ: 49
விக்ந க்ருந் நிக்நசரணோ த்ராவிணீ ஸக்தி ஸத்க்ருத:
தீவ்ரா ப்ரஸந்ந நயநோ ஜ்வாலிநீ பாலநைக த்ருக் 50
மோஹிநீ மோஹநோ போக தாயிநீ காந்திமண்டித:
காமிநீகாந்த வக்த்ர ஸ்ரீ: அதிஷ்டித வஸுந்தர: 51
வஸுதாரா மநோமோத மஹாஸங்க நிதி ப்ரபு
நமத்வஸுமதீ மௌளி: மஹாபத்ம நிதி ப்ரபு: 52
ஸர்வ ஸத்குரு ஸம்ஸேவ்ய ஸோசிஷ்கேஸ ஹ்ருதாஸ்ரய:
ஈஸாநமூர்தா தேவேந்த்ர ஸிக: பவந நந்தந: 53
உக்ர: ப்ரத்யுக்ர நயநோ திவ்யாஸ்த்ராணம் ப்ரயோகவித்
ஐராவதாதி ஸர்வாஸா வாரணாவரண ப்ரிய: 54
வஜ்ராத்யஸ்த்ர பரீவார: கணசண்டஸமாஸ்ரய:
ஜயோ ஜய பரீவார: விஜயோ விஜயாவஹ: 55
அஜிதார்ச்சித பாதாப்ஜ: நித்யா நித்ய வதம்ஸித:
விலாஸிநீ க்ருததோல்லாஸ: ஸௌண்டீஸௌந்தர்ய மண்டித: 56
அநந்தாநந்த ஸுகத: ஸுமங்கள ஸுமங்கள:
இச்சாஸக்திர் ஜ்ஞாநஸக்தி க்ரியாஸக்தி நிஷேவித: 57
ஸுபகா ஸம்ஸ்ரிதபத: லலிதா லலிதாஸ்ரய:
காமிநீ காமந: காம: மாலிநீ கேளிலாலித: 58
ஸரஸ்வத்யா ஸ்ரிதோ கௌரீ நந்தந: ஸ்ரீநிகேதந:
குருகுப்த பதோ வாசா ஸித்தோ வாகீஸ்வரோஸ்வர: 59
நளிநீ காமுகோ வாமா ராமாஜ்யேஷ்டா மநோரம:
ரௌத்ரீ முத்ரித பாதாப்ஜ: ஹும்பீஜஸ்துங்க ஸக்திக: 60
விஸ்வாதிஜநநத்ராண: ஸ்வாஹஸக்தி: ஸகீலக:
அம்ருதாப்தி க்ருதாவாஸ: மதகூர்ணித லோசந: 61
உச்சிஷ்ட கண உச்சிஷ்ட கணேஸோ கணநாயக:
ஸார்வகாலிக ஸம்ஸித்தி: நித்ய ஸைவதிகம்பர: 62
அநாபாயோநந்தத்ருஷ்டி ரப்ரமேயோSஜராமர:
அநாவிலோSப்ரதிரதோ ஹ்யச்யுதஸ் சாம்ருதாக்ஷர: 63
அப்ரதர்க்யாக்ஷயோSஜய்யோ அநாதஸ்ச அநாமய:
அமோக ஸித்திரத்வைதோ அகோரோSப்ரதிமாநந: 64
அநாகாரோபி பூம்யக்நி பலஹா வ்யக்த லக்ஷண:
ஆதாரபீட ஆதார ஆதாராதேய வர்ஜித: 65
ஆகுவாஹந கேத்வாஸா பூர காகு மஹாரத:
இக்ஷுஸாகர மத்யஸ்த: இக்ஷுபக்ஷண லாலஸ: 66
இக்ஷுசாபதி ரேகஸ்ரீ: இக்ஷுசாப நிஷேவித:
இந்தரகோப ஸமாநஸ்ரீ: இந்த்ரநீல ஸமத்யுதி: 67
இந்தீவர தளஸ்யாம: இந்து மண்டல நிர்மல:
இந்த்ரப்ரிய இடாபாக இடாதாமேந்திராப்ரிய: 68
இக்ஷ்வாகு விக்ந வித்வம்ஸீ இதிகர்த்தவ்யதேப்ஸித:
ஈஸாந மௌளிரீஸாந ஈஸாந ஸுத ஈதிஹா 69
ஈஷணா த்ரய கல்பாந்த ஈஹா மாத்ர விவர்ஜித:
உபேந்தர உடுப்ருந்மௌளி: உடேரக பலி ப்ரிய: 70
உந்நதாநந உத்துங்க உதாரஸ் த்ரிதஸாக்ரணீ:
ஊர்ஜஸ்வா நுஜ்வலதநு: ஊஹாபோஹ துராஸத: 71
ருக்யஜுஸ்ஸாம ஸம்பூதி ருத்தி ஸித்தி ப்ரவர்த்தக:
ருஜுசித்தைக ஸுலப: ருணத்ரய விமோசந: 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வபக்த விக்ந நாஸஸ்ச ஸூரத்விட் சக்தி லோபக்ருத்
விமுகார்சா விலுப்தஸ்ரீ: லூதாவிஸ்போட நாஸந: 73
ஏகாரபீட மத்யஸ்த ஏகபாத க்ருதாஸந:
ஏஜிதாகிலதைத்யஸ்ரீ: ஏதிகாகில ஸம்ஸ்ரய: 74
ஐஸ்வர்யநிதிரைஸ்வர்ய ஐஹிகாமுஷ்மிக ப்ரத:
ஐரம்மத ஸமோந்மேஷ ஐராவத நிபாநந: 75
ஓங்காரவாச்ய ஓங்பார ஓஜஸ்வா நோஷதீபதி:
ஔதார்ய நிதிரௌத்தத்ய துர்ய ஔந்நத்ய விக்ரஹ: 76
ஸூராரீணா மங்குஸஸ்ச ஸூரநாகாங்குஸஸ் ததா
அஸமஸ்த விஸர்காந்த பாதேஷு பரிகீர்த்தித: 77
கமண்டலுதர: கல்ப கபர்தீ கலபாநந:
கர்மஸாக்ஷி கர்மகர்த்தா கர்மாகர்ம பலப்ரத: 78
கதம்ப கோரகாகார: கூஸ்மாண்ட கணநாயக:
காருண்யதேஹ: கபில: கதக: கடிஸூத்ரப்ருத் 79
கர்வ: கட்க ப்ரிய: கட்கீ காதாந்தஸ்த: கநிர்மல:
கர்வாட ஸ்ருங்க நிலய: கட்வாங்கீ கதுராஸத 80
கணாட்யோ கஹநோ கம்யோ கத்ய பத்ய ஸூதார்ணவ:
கத்யகாந ப்ரியோ கர்ஜ: கீத கீர்வாண பூர்வஜ: 81
குஹ்யாசார ரதோ குஹ்ய: குஹ்யாகம நிருபித:
குஹாஸயோ குஹாப்திஸ்தோ குருகம்யோ குரோர் குரு: 82
கண்டா கர்கரிகா மாலீ கண்டா கும்ப கடோதர:
சண்டாஸ் சண்டீஸ்வரஸ் சண்டீ சண்டேஸஸ் சண்டவிக்ரம 83
சராசர பிதா சிந்தா மணி சர்வண லாலஸ
சந்தஸ் சந்தோ வபுஸ் சந்தோ துர்லக்ஷஸ் சந்த விக்ரஹ: 84
ஜகத்யோநிர் ஜகத் ஸாக்ஷீ ஜகதீஸோ ஜகந்மய:
ஜபோ ஜபபரோ ஜப்யோ ஜிஹ்வா ஸிம்ஹாஸந ப்ரபு: 85
ஜலஜ் ஜலோல்லஸத் தாந ஜங்காரி ப்ரமராகுல:
டங்கார ஸ்பார ஸம்ராவா நுகாரி மணி நூபுர: 86
தாபத்ரய நிவாரீ ச ஸர்வ மந்தரைக ஸித்தித:
டிண்டிமுண்டோ டாகிநீஸோ டாமரோ டிண்டிம ப்ரிய: 87
டக்கா நிநாத முதிதோ டௌகோ டுண்டி விநாயக
தத்வாநாம் பரமஸ் தத்வ ஜ்ஞேயஸ் தத்வ நிருபித 88
தாரகாந்தர ஸம்ஸ்தாந: தாரகஸ் தாரகாந்தக:
ஸ்தாணு: ஸ்தாணு ப்ரிய ஸ்தாதா ஸ்தாவரோ ஜங்கமோஜகத் 89
தக்ஷயஜ்ஞ ப்ரமதநோ தாதா தாநவமோஹந:
தயாவாந் திவ்ய விபவோ தண்ட ஹ்ருத் தண்டநாயக: 90
தந்த ப்ரபிந்நாப்ரமல: தைத்யவாரண தாரண:
தம்ஷ்ட்ராலக்ந த்விப கடோ தேவார்த்த ந்ருகஜாக்ருதி: 91
தநதாந்யபதிர் தந்யோ தநதோ தரணீதர:
த்யாநைக ப்ரகடோ த்யேய: த்யாநோ த்யாந பராயண: 92
நந்த்யோ நந்தி ப்ரியோ நாதோ நாதமத்ய ப்ரதிஷ்டித:
நிஷ்கலோ நிர்மலோ நித்யோ நித்யா நித்யோ நிராமய: 93
பரம் வ்யோம பரந்தாம பரமாத்மா பரம்பத:
பராத்பர: பஸூபதி: பூர்ணமோதக ஸாரவாந் 94
பூர்ணாநந்த: பாராநந்த: புராண புருஷோத்தம:
பத்ம ப்ரஸந்ந நயந: ப்ரணதாஜ்ஞாந மோசந: 95
ப்ரமாண ப்ரத்யயாதீத ப்ரணதார்த்தி நிவாரண:
பலஹஸ்த: பணிபதி: பேத்கார பணித ப்ரிய: 96
பாணார்ச்சிதாங்க்ரியுகளோ பாணகேளி குதூஹலீ
ப்ரஹ்மா ப்ரஹ்மார்ச்சிதபதோ ப்ரஹமசாரீ ப்ருஹஸ்பதி: 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ருஹத்தமோ ப்ரஹ்மபரோ ப்ரஹ்மண்யோ ப்ரஹ்மவித்ப்ரிய:
ப்ருஹந்நாதாக்ர்ய சீ த்காரோ ப்ரஹ்மாண்டாவளி மேகல: 98
ப்ருகேஷபதத்த லக்ஷ்மீக: பர்கோ பத்ரோ பயாபஹ:
பகவாந் பக்தி ஸுலபோ பூதிதோ பூதி பூஷண: 99
பவ்யோ பூதாலயோ போக தாதா ப்ருமத்ய கோசர:
மந்தரோ மந்த்ரபதிர் மந்த்ரீ மதமத்த மநோரம: 100
மேகலாவாந் மந்தகதி: மதிமத் கமலேக்ஷண:
மஹாபலோ மஹாவீரோ மஹாப்ராணோ மஹாமநா: 101
யஜ்ஞோ யஜ்ஞபதிர் யஜ்ஞ கோப்தா யஜ்ஞ பலப்ரத:
யஸஸ்கரோ யோககம்யோ யாஜ்ஞிகோ யாஜகப்ரிய: 102
ரஸோ ரஸ ப்ரியோ ரஸ்யோ ரஞ்ஜகோ ராவணார்ச்சித:
ரக்ஷா ரக்ஷாகரோ ரத்ந கர்போ ராஜ்யஸுகப்ரத: 103
லக்ஷா லக்ஷ ப்ரதோ லக்ஷ்யோ லயஸ்தோ லட்டுக ப்ரிய:
லாஸ்ய ப்ரியோ லாஸ்ய பதோ லாப க்ருல் லோக விஸ்ருத: 104
வரோண்யோ வஹ்நி வதநோ வந்த்யோ வேதாந்த கோசர:
விஸ்வகர்த்தா விஸ்வசக்ஷு: விதாதா விஸ்வதோ முக: 105
வாமதேவோ விஸ்வநேதாவஜ்ரீ வஜ்ர நிவாரண:
விஸ்வபந்தந விஷ்கம்ப தாரோ விஸ்வாதிப: ப்ரபு: 106
ஸப்த ப்ரஹ்ம ஸம ப்ராப்ய: ஸம்பு ஸக்தி கணேஸ்வர:
ஸாஸ்தா ஸிகாக்ர நிலய: ஸாரண்ய: ஸிகரீஸ்வர: 107
ஷடர்த்து குஸும ஸ்ரக்வீ ஷடாதார: ஷடக்ஷர:
ஸம்ஸாரவைத்ய: ஸர்வஜ்ஞ: ஸர்வ போஷஜ போஷஜ: 108
ஸ்ருஷ்டி ஸ்திதிலய க்ரீட: ஸுரகுஞ்ஜர பேதந:
ஸிந்தூரித மஹாகும்ப: ஸதஸத் வ்யக்திதாயக: 109
ஸாக்ஷீ ஸமுத்ர மதந: ஸ்வஸம்வேத்ய: ஸ்வதக்ஷிண:
ஸ்வதந்த்ரஸ் ஸத்ய ஸங்கல்ப: ஸாமகாநரத: ஸுகீ 110
ஹம்ஸோ ஹஸ்தி பிஸாசீஸோ ஹவநே ஹவ்ய கவ்ய புக்
ஹவ்யோ ஹ்ருத ப்ரியோ ஹர்ஷோ ஹ்ருவ்லோகா மந்த்ர மத்யக:111
க்ஷேத்ராதிப: க்ஷமாபர்தா க்ஷமாபர பாராயண:
க்ஷிப்ர க்ஷேமகர: க்ஷேமா நந்த: க்ஷோணீ ஸுரத்ரும: 112
தர்ம ப்ரதோர்த்தத: காம தாதா ஸௌபாக்கியவர்த்தந:
வித்யா ப்ரதோ விபவதோ புக்தி முக்தி பலப்ரத: 113
ஆபிரூப்யகரோ வீர ஸ்ரீப்ரதோ விஜயப்ரத
ஸர்வ வஸ்யகரோ கர்ப்ப-தோஷஹா புத்ரபௌத்ரத: 114
மேதாத: கீர்த்தித: ஸோக ஹாரீ தௌர்பாக்யநாஸந:
ப்ரதிவாதி முகஸ்தம்ப: துஷ்டசித்த ப்ரஸாதந: 115
பராபிசாரஸமந: து: கபஞ்ஜந காரக
லவஸ்த்ருடி: களா காஷ்டா நிமேஷ: கடிமுஹுர்த்தக: 116
ப்ரஹரஸ்ச திவா நக்த: அஹோராத்ர அஹர்நிஸம்
பக்ஷோ மாஸாயநோ வர்ஷா: யுக: கல்போ மஹாலய 117
ராஸிஸ் தாரா திதிர் யோக: வார: கரண அம்ஸக:
லக்நோ ஹோரா காலசக்ரோ மேரு: ஸப்தர்ஷயோ த்ருவ: 118
ராஹுர் மந்த: கவிர் ஜீவ: புதோபௌம. ஸஸீ ரவி:
கால: ஸ்ருஷ்டி: ஸ்திதிர் விஸவ: ஸ்தாவரோ ஜங்கமோஜகத்119
பூராபோக்நிர் மருத் வ்யோமா அஹம் க்ருத் ப்ரக்ருதி: புமாந்
ப்ரஹ்மா விஷ்ணு: ஸிவோ ருத்ர ஈஸ: ஸக்தி: ஸதாஸிவ: 120
த்ரிதஸா: பிதர: ஸித்தா: யக்ஷா: ரக்ஷாஸ்ச கிந்நரா:
ஸாத்யா வித்யாதரா பூதா: மநுஷ்யா: பஸவ: ககா: 121
ஸமுத்ரா: ஸரித: ஸைலா: பூதோ பவ்யோ பவோத்பவ:
ஸாங்க்ய: பாதஞ்ஜலோ யோக: புராணஸ்ச ஸ்ருதி: ஸ்ம்ருதி:122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாங்காஸ்ச ஸதாசார: மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:
ஆயுர்வேதோ தநுர்வேத: காந்தர்வ: காவ்யநாடக: 123
வைகாநஸோ பாகவதோ மாநுஷ: பாஞ்சராத்ரக:
ஸைவ: பாஸுபத: கால முகோ பைரவ ஸாஸந: 124
ஸாக்தோ வைநாயக: ஸௌரோ ஜைநகார்ஹத ஸம்ஹித:
ஸதஸத் வ்யக்த அவ்யக்த: ஸசேதந அசேதந: 125
பந்தோமோக்ஷ: ஸுகோ போகோ யோக: ஸத்ய அணுர் மஹத்
ஸ்வஸ்தி ஹும்ரூப ஷட்ரூப: கட்கரூப: ஸ்வதாமய: 126
ஸ்வாஹாரூப: ஸ்ரௌஷட்ரூபோ வௌஷட்ரூபோ வஷண்மய:
ஜ்ஞாந விஞ்ஞாந ஆநந்தோ போத: ஸம்வித் ஸமோ யம: 127
ஏக ஏகாக்ஷரஸ் சைக ஏகாக்ஷர பாராயண:
ஏகாக்ரதீ ரேகவீர ஏகாநேக ஸ்வரூபத்ருத் 128
த்விரூபோ த்விபுஜோ த்வ்க்ஷோ த்விரதோ த்விபரக்ஷக:
த்வைமாதுரோ த்விவதந: த்வந்த்வாதீதோ த்வயாதிக: 129
த்ரிதாமா ஸ்ரீகரஸ் த்ரேதா த்ரிவர்க பலதாயக:
த்ரிகுணாத்மா த்ரிலோகாதிஸ் த்ரிஸக்தீஸஸ் த்ரிலோசந: 130
சதுர்பாஹுஸ் சதுர்தந்த: சதுராத்மா சதுர்முக:
சதுர்விதோபாயகரஸ் சதுர்வித பலப்ரத: 131
சதுராநந ஸம்ப்ரீத: சதுர்வர்ணா ஸ்ரயாஸ்ரய:
சதுர்விதவசோ வ்ருத்தி பரிவ்ருத்தி ப்ரவர்த்தக:
சதுர்த்தீ பூஜந ப்ரீத: சதுர்த்தீதிதி ஸம்பவ: 132
பஞ்சாக்ஷராத்மா பஞ்சாத்மா பஞ்சாஸ்ய: பஞ்ச கருத்யக்ருத்
பஞ்சாதார: பஞசவர்ண: பஞ்சாசக்ஷர பாராயண: 133
பஞ்சதாள: பஞ்சகர: பஞ்ச ப்ரணவபாவிக:
பஞ்சப்ரஹ்ம மயஸ்பூர்த்தி: பஞ்சாவரண வாரித: 134
பஞ்சபக்ஷ்ய ப்ரிய: பஞ்ச பாண: பஞ்ச ஸிவாத்மக:
ஷட்கோணபீட: ஷட்சக்ர தாமா ஷட்க்ரந்தி பேதக: 135
ஷடத்வ த்வாந்த வித்வம்ஸீ ஷடங்குள மஹாஹ்ரத:
ஷண்முக: ஷண்முக ப்ராதா ஷட்சக்தி பரிவாரித: 136
ஷட்வைரி வர்க வஜத்வம்ஸீ ஷடூர்மிபய பஞ்ஜந:
ஷட்தர்க்க தூர: ஷட்கர்ம நிரத: ஷட்ரஸாஸ்ரய: 137
ஸப்தபாதாளசரண: ஸப்த த்வீபோரு மண்டித:
ஸப்த ஸ்வர்லோக மகுட:ஸப்த ஸப்தி வரப்ரத: 138
ஸப்தாங்கராஜ்ய ஸுகத: ஸப்தர்ஷிகண மண்டித:
ஸப்தச்சந்தோநிதி: ஸப்த ஹோதா ஸப்த ரஸாஸ்ரய: 139
ஸப்தாப்திகேளிகாஸார: ஸப்தமாத்ரு நிஷேவித:
ஸப்தச்சதா மோதமத: ஸப்தச்சந்தோமுக ப்ரிய: 140
அஷ்டமூர்த்தி த்யேயமூர்த்தி ரஷ்ட ப்ரக்கிருதி காரண:
அஷ்டாங்கயோக பலபுக் அஷ்டபத்திராம்புஜாஸந: 141
அஷ்டஸக்தி ஸம்ருத்திஸ்ரீ ரஷ்டைஸ்வர்ய ப்ரதாயக:
அஷ்டபீடோப பீடஸ்ரீ ரஷ்டமாத்ரு ஸமாவ்ருத: 142
அஷ்டபைரவ ஸேவ்யாஷ்ட வஸுவந்த்யோஸஷ்ட மூர்த்திப்ருத்
அஷ்டசக்ர ஸ்புரந்மூர்த்தி ரஷ்டத்ரவ்ய ஹவி: ப்ரிய: 143
நவநாகாஸநாத்யாஸீ நவநித்யநுஸாஸிதா
நவத்வார கநாதார : நவததார நிகேதந: 144
நரநாரயண ஸ்துத்யோ நவதுர்கா நிஷேவித:
நவநாத மகாநாதோ நவநாக விபூஷண: 145
நவரத்ந விசித்ராங்க: நவஸக்தி ஸிரோத்ருத:
தஸாத்மகோ தஸபுஜோ தஸதிக்பதி வந்தித: 146
தஸாத்யாயே தஸப்ராணோ தஸேந்த்ரிய நியாமக:
தஸாசஷர மஹாமந்த்ரோ தஸாஸா வ்யாபி விக்ரஹ: 147



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதஸாதி ருத்ரைஸ் ஸம் ஸ்துத ஏகாதஸாசஷர:
த்வாதஸோத்தண்ட தோர்தண்ட: த்வாதஸாங்க நிகேதந: 148
த்ரயோதஸ பிதாபிந்ந விஸ்வதேவாதி தைவத:
சதுர்தஸேந்தர ப்ரபவ: சதுர்தஸ மநுப்பிரபு: 149
சதுர்தஸாதி வித்யாட்ய: சதுர்தஸ ஜகத் ப்ரபு:
ஸாம பஞ்சதஸ: பஞச தஸீஸீதாம்ஸு நிர்மல: 150
ஷோடஸாந்தபதாவாஸ: ஷோடஸேந்துகளாத்மக:
ஸப்த ஸப்ததஸீ ஸப்த தஸ: ஸப்த தஸாசஷர: 151
அஷ்டாதஸ த்வீபபதி ரஷ்டாதஸ புராணக்ருத்
அஷ்டாதஸெளஷதி ஸ்ரஷ்டா அஷ்டாதஸ முநிஸ்ம்ருத: 152
அஷ்டாதஸ லிபி வ்யஷ்டி ஸமஷ்டி ஜ்ஞாந கோவித:
ஏகவிம்ஸ: புமாநேக விம்ஸத்யங்குனி பல்லவ: 153
சதுர்விம்ஸதி தத்வாத்மா பஞ்சவிம்ஸாக்ய பூருஷ:
ஸப்தவிம்ஸதி தாரேஸ: ஸப்தவிம்ஸதி யோகக்ருத்: 154
த்வாத்ரிம்ஸத் பைரவாதீஸ: சதுஸ்த்ரிம்ஸந் மஹாஹ்ரத:
ஷட்த்ரிம்ஸத் தத்வ ஸம்பூதி ரஷ்ட த்ரிம்ஸத் களாதநு: 155
நமதேகோந பஞ்சாஸந் மருத்துவர்கோ நிரர்கள:
பஞ்சாஸதசஷரஸ்ரேணி: பஞ்சாஸத் ருத்ர விக்ரஹ: 156
பஞ்சாஸத் விஷ்ணு ஸக்தீஸ: பஞ்சாஸந் மாத்ருகாலய:
த்விபஞ்சாஸத் வபு: ஸ்ரேணிஸ் த்ரிஷஷ்ட்யசஷர ஸம்ஸ்ரய: 157
சது: ஷஷ்ட்யர்ண நிர்ணேதா சது: ஷஷ்டி களாநிதி:
சது: ஷஷ்டி மஹாஸித்த யோகிநீ ப்ருந்தவந்தித: 158
அஷ்டஷஷ்டி மஹாதீர்த்த சேஷத்ர பைரவ பாவந:
சதுர்ணவதி மந்த்ராத்மா ஷண்ணவத் யதிக ப்ரபு: 159
ஸதாநந்த: ஸதமக: ஸதபத்ராயதேசஷண:
ஸதாநீக: ஸதத்ருதி: ஸததார வராயுத: 160
ஸஹஸ்ரபத்ர நிலய: ஸஹஸ்லபணிபூஷண:
ஸஹஸ்ரஸீர்ஷா புருஷ: ஸஹஸ்ராசஷ: ஸஹஸ்ரபாத்: 161
ஸஹஸ்ரநாம ஸம்ஸ்துத்ய: ஸஹஸ்ராசஷ பலாவஹ:
பணாமண்டல ஸாஹஸ்ர பணிராஜ க்ருதாஸந: 162
அஷ்டாஸீதி ஸஹஸ்ரௌக மஹர்ஷி ஸ்தோத்ரா யந்த்ரித:
மஹாகாயோ மஹாத்மா பிசண்டிலஸ்சேஷ்டதோ ரஸ: 163
ஆதாரஸ்ச வேதமய: ஹேரம்ப: ஸ்கந்தபூர்வஜ:
லுசஷாதீஸ ப்ரியோதார லசஷாதார மநோரத: 164
சதுர்லசஷ ஜப ப்ரீத: சதுர்லசஷ ப்ரகாஸித:
சதுராஸ்தி லசஷாணாம் ஜீவாநாம் தேஹஸம்ஸ்தித: 165
கோடிஸுர்ய ப்ரதீகாஸ: கோடிசந்த்ராம்ஸுநிர்மல:
கோடியஜ்ஞ ப்ரமதந: கோடியஜ்ஞ பலப்ரத: 166
ஸிவா பவாத்யஷ்ட கோடி விநாயக துரந்தர:
ஸப்தகோடி மஹாமந்த்ர மந்த்ரிதாவயவ த்யுதி: 167
த்ரயஸ் த்ரிம்ஸத் கோடிஸுர ஸ்ரேணீ ப்ரணதபாதுக:
அநந்த தேவதா ஸேவ்ய: அநந்தஸுபதாயக: 168
அநந்தநாமாऽநந்தஸ்ரீ ரநந்தாநந்த ஸௌக்யத:

ஸ்ரீ கணபதி ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

ௐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் காயத்ரி தேவி போற்றி

## ஸ்ரீமதி சௌந்தர கைலாசம்

முத்தோடு பவளம் தங்கம் முரண்படு கருமை வெண்மை
இத்தனை நிறங்கள் கொஞ்சும் எழில் முகம் ஐந்து கொண்ட
உத்தமி ஒவ்வொன்றிற்கும் விழிகள் மூன்றுடைய அன்னை
தத்துவ எழுத்து ரூபம் தாங்கிய எங்கள் தேவி
இரண்டு தாமரைகள் சங்கு ஏவு சக்கரம், கபாலம்
மிரண்டவர்க்கபயம், தாளில் விழுந்திடில் விரதம் இன்னும்
அங்குசம், கயிறு, சாட்டை, ஆகிய பத்தும் கொண்டே
திங்களின் கலைகொள் மௌலித் தேவி காயத்ரி போற்றி

## காலையில் காயத்ரி

ஒளியருள் சூரிய மண்டலத்தின் நடு உள்ளவளை
தெளிவருள் காயத்ரியை என் தேவியை சிந்திப்பனே
உவந்தவள் குமரியாக உள்ளவள் அன்னத்தின்மேல் அமர்ந்தவள்
ஜபமாலைக் கை அழகினால் நாவில் 'ரிக்' கைச் சுமந்த காயத்ரி
பிரும்ம தேவதைச் சுடரே போற்றி

## பகலில் சாவித்ரி

ஒளியருள் சூரிய மண்டலத்தின் நடு உற்றவளை
தெளிவருள் காயத்ரியை என் தேவியை சிந்திப்பனே
வெங்கதிர் நடுவில் வாசம் வெண்ணிறம் காளை மீது
மங்களம் சாவித்ரி ரூபம் மலரெனும் பருவம் நாவில்
பொங்கிடும் யஜுர் வேதம் பொலிந்திடும் கையில் சூலம்
இங்குக் காயத்ரி ருத்ர தேவதை என்பேன் போற்றி

## மாலையில் சரஸ்வதி

ஒளியருள் சூரிய மண்டலத்தின் நடு உள்ளவளை
தெளிவருள் காயத்ரியை என் தேவியை சிந்திப்பனே
கரியதாம் நிறத்தை மூத்த கலைமகள் வடிவை, நன்மை
சொரியுமாம் ஒளியிடத்தை சுழலுமாயுதத்தை சென்று
சொரியுமாம் பொழுதில் சாமவேத உச்சரிப்பைக் கொண்ட
கருடவாகனத்து விஷ்ணு தேவதை காயத்ரி போற்றி

## காயத்ரி தியானம்

ஓம்
ஒளியினை பதினான்கெனும் உலகினுக்குதவி ஞான
வளியில் உலவும் அந்த வெய்யவன் தனக்கும், வற்றா
அளியினால் ஒளியையூட்டி ஆண்டிடும் பொருளே, நல்ல
தெளிவினை தந்து அஞ்ஞான இருளினைத் தீர்ப்பாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காயத்ரீ மகிமை

"பாய்ந்தோடுவது தண்ணீர்: துள்ளிச் செல்வது மனம்: இரண்டையும் அடக்குந்தோறும். அவை சக்தியில் பெருகும்" உதாரணமாக-

தண்ணிரின் வேகத்தை தடுத்து (நிறுத்தி) மீண்டும் திறந்து விட்டால் அதன் வேகம்-அதினின்று உண்டாகும் மின்சார சக்தி – ஒப்பற்ற நன்மை தரும் அல்லவா? மனத்தின் வேகத்தை அளந்தறிய இந்த உதாரணம் போதும்! இது போல் சிறு பருவத்தில் தொடங்கி சிறந்த அக்கறையோடும் அன்போடும் செய்து வருகின்ற காயத்ரி ஜபம், மானஸிக சக்தி – வளர்ச்சி- சிறுவர்களுக்குத் தாய்ப்பால் போல் மேன்மேலும் சிறந்த (ஒப்பற்ற) சக்தியளிக்கும்! இதன் பெருமையைப் பல உதாரணங்க்ளோடு மேலே காணலாம்.

இங்கு ஆதியில் நான்கு வேதங்களுக்கும் அரிய பெரிய பாஷ்யம் செய்தருளிய ஸ்ரீவித்யாரண்ய பெருமானது காயத்ரி பாஷ்யத்தினின்று ஒரு சில அரிய விஷயங்களை மொழி பெயர்த்தளிப்போம்.

## காயத்ரீ ப்ரசம்ஸை: சிறப்பு (வர்ணித்தல்)

மகா மந்திரமாகிய காயத்ரியையும், நான்கு வேதங்களையும் தராசில் வைத்து நிறுத்துப் பார்ப்பதனால் நான்கு வேதங்களும் அமைந்த ஒரு தட்டுக்கு நிகராகவே மற்றொரு தட்டில் அமைந்த காயத்ரியும் சம எடையில்! துலங்கும் வேதங்களின் சாரமானவை எவை? ஊபநிஷத்துக்கள்! அவை ரகசியமானவை. அனால் அவற்றின் சாரம் காயத்ரியும் மூன்று வியாஹ்ருதிகளும் ஆகும். பூ: புவ: ஸுவ: என்பவை தாம் வ்யாஹ்ருதிகள்: அவை (1) பூலோகம் (2) பூமியை தொடர்ந்துள்ள மேல் (இடையில் அமைந்த லோகம், அப்பால்) (3) சுவர்க்கலோகம் என்பவற்றைக் குறிப்பிடுவதுடன் அவை "பரமாத்மாவின் சொரூபம்" என்ற அறிவையும் நமக்கு உணர்த்துகின்றன.

காயத்ரி தேவியினது பெருமையை இவ்வாறு தெரிந்து கொள்பவன் சிறந்த பிராம்மணனாவான்! இதனை இவ்வாறு தெரிந்து கொள்ளாதவன் நான்கு வேதங்களின் கரைகண்டவனாயினும், அவனை இழி குலத்தோன் என்றுதான் கருதுவர் பெரியோர்! என்று வியாசர் பெருமான் எச்சரிக்கையிடுகின்றார் பெரியோர் வாக்கினின்று அவ்விதச் சொல் பெறுதல் நலமன்றே!

## வேதமாதாவை (வேதத்தின் தாயை) காயத்ரி என அழைப்பதேன்?

அன்போடு கானஞ் செய்பவனை- ஜபம் -செய்கின்றவரை விடாது பாதுகாப்பது எதுவோ அதனைத்தான் காயத்ரி என்று அழைத்தனர். அறிவு ஆற்றல், அனுபவம் மிகுந்த பெரியோர்: அதுமாத்திரமா? காயத்ரி தான் வேதத்தின் தாய். காயத்ரி தான் பாவத்தையெல்லாம போக்கும் அன்னை! காயத்ரியினும் சிறந்தது - இவ்வுலகிலும் இல்லை: அங்கும் (மேலுலகிலும் ) இல்லை. ஆகவே காயத்ரிதான் மிகமிகப் பரிசுத்தமான மந்திரம் எனவும் அப்பெரியார் முரசறைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி ஜபம் செய்வோரின் பெருமையைக் குறித்து புகழ்தல்

ஒருவர் வேத வேதாகமங்களை யெல்லாம் படித்த வித்தகனாக இருக்கலாம்: யஜ்ஞும் தானம் பல செய்பவராக இருக்கலாம். ஆனால் (அவர் காயத்ரி தியானத்தை செய்யாவிடின் ) சகல மந்திரங்களின் தாயாகிய காயத்ரி தேவியை தியானம் செய்து கொண்டு விளங்கும் பரிசுத்தாத்மாவினது 16 கலையில் ஒரு கலை (ஒரு பங்கு ) பெருமையையும் பெறுதற்குரியவரல்லர். இதன் சாரமான கருத்தென்ன? பிராமணர் இரு (3)வேளைகளிலும் மனம் பொருந்தி காயத்ரி ஜபம் செய்து வருவராயின் அவர் அஸத்துக்களின் பொருளைக் கை நீட்டி வாங்கியவர்ராயினும், எவ்வித பாவமும் அவரைத் தீண்டாது: அவர்பரமபாவமான கதியை அடைவர்

எது ஜபம் செய்வதற்குறிய லட்சணம்? (அல்லது அன்பு வேண்டுகோள்) எல்லாம் வல்ல ஈசன் (பரமேசன் ) எங்கும் வியாபித்து -இரண்டறக் கலந்து விளங்குகின்றானாயினும் அவன் காயத்ரி தேவியை உபாசனம் புரியும் பக்தருக்கு விசேஷ நன்மைகளை அளிக்கின்றான் என்பதை கவனிக்க வேண்டும். இங்கு பெரியாரான யாஜ்ஞவல்கிய முனிவர் பெருமான் தெரிவிக்கின்ற ஒரு உதாரணம் மிக அழகாக விளங்குகிறது!

"பசுவின் பாலை நிறைய உட்கொண்டால் அது உடம்பிற்கு நல்ல வளர்சியளிக்கும் என்று பலர் கூறுகின்றனரல்லவா? அது அவ்வளவு சரியன்று! ஏன் தெரியுமா? காயத்ரி ஜபத்தில் தினந்தோறும் மனத்தைச் செலுத்தும் அன்பனுக்கு எப்பொழுதுமே நன்மை செய்யும் சுபாவம் கொண்ட சதாசிவன் அந்தப் பசுவின் பாலிலுள்ள சத்தைப் பார்க்கினும், அதிகமான சத்தை அளித்து போஷித்து வரகின்றான்.( அந்தத் தியானத்தில் நிலைத்தவனை") ஆனால் சதாசிவன் காயத்ரி ஜபம் செய்யாதவரிடமும் உள்ளீடாகி விளங்குவது உண்மையானதாயினும், காயத்ரி உபாசனையின் மூலமாக வேண்டிக் கொள்ளாதவருக்கு அவ்வாறு உதவி செய்ய இயலாதாம்! தட்டாதவனுக்கு யார் கதவைத் திறப்பார்? கேளாதவனுக்கு எவர் கொடுப்பார்?

## ஜபம் செய்வதற்கு அமையும் இடத்திற்கேற்ப பல அளவு பலன்

வீட்டில்- பரிசுத்தமான இடத்தில்-அமர்ந்து காயத்ரி ஜபம் செய்யலாம்: ஒன்றுக்கு ஒன்று தான் பலன், ஆனால் ஓடுகிற நீரோடைப் பக்கம் அல்லது நதிக்கரையில் அமர்ந்து ஜபம் செய்தால 1க்கு 2பங்கு பலன், பசுபோஷிக்கப் பெற்று விளங்கும் சாலையில் ஜபம் செய்தால் 1க்கு 10 பங்கு பலன். யாகசாலையாகிய அக்னிஹோத்ரசாலையில் காயத்ரி ஜபம் செய்தால் 1க்கு 100 பங்கு பலன். மகான்கள் சித்தி பெற்ற ஸ்தலங்கள், ஸ்தல புராணம் (பாடல் பெற்ற ) சேஷத்திரங்கள் என்பவற்றிலும், தெய்வீகமான- ஆலய சந்நிதிகளிலும் செய்யும் ஜபம், ஆயிரம்லட்சம் -கோடிப் பங்கு பலன் தரும். ஆனால் பெருமாள் சந்நிதியிலே செய்யும் காயத்ரி ஜபத்தின் பலனுக்கு எல்லை கூற இயலாது! அது அநந்தமான பலன் தருவது என்றார் சிவபெருமான்! அது அன்பின் அளவை பொறுத்தது போலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தெந்த ஆசனங்களில் அமர்ந்து காயத்ரி ஜபம் செய்யலாம்? அவற்றின் பலன் எத்தகையது?

இந்தக் கேள்வியை முன்னொருமுறை சில முனிவர்கள் கேட்ட பொழுது ஸ்ரீவியாஸபகவான் அளித்த விடை வருமாறு:

1.தர்ப்பாஸனம், 2. கம்பளம், 3. மான்தோல், 4.பட்டு 5.மரவுரி 6.பலபத்திரம், என்பகைவள் நல்ல ஆசனங்களாகக் கொள்ளலாம்

1. தர்ப்பாஸனத்தில் உட்காந்து ஜபம் செய்தால் பாவங்கள் போம். (பரிசுத்தம் உடலுக்கும் மனதிற்கும் உடன் தோன்றும்)
2. கம்பளியில் (இரத்தினக் கம்பளத்தில் அமர்ந்து செய்தால் துக்கம் (துன்பம்) பாதியாது நீங்கும்
3. மான்தோலில் அமர்ந்து செய்தால் ஞானம் வரும்.(சாந்தம் பெருகும்) மனஅமைதியே ஒரு ஆனந்தமல்லவா?
4. பட்டு ஆசனத்தில் உட்கார்ந்து ஜபம் செய்தால் பாக்கியம் விருத்தியாகும்
5. மரவுரி பலத்தை வளர்க்கும். அனுபவத்தில் பார்க்கலாம். ஸ்ரீராமபிரான் உபயோகித்த பரிசுத்தமான மரவுரியினம் மலையாளத்தில் கிடைக்கும்
6. பலபத்திரம் உடம்பை சுத்தி செய்வதாம்.

இனி, வேறு இரண்டு ஆசனங்களுக்கும் தனித்தனி பலன் கூறப்படுகின்றது. 1. கிருஷ்ணாஜினம் மான் தோலை உபயோகிப்பது போல் பெண்யானைத் தோலையும் உபயோகிப்பது உண்டு. அது பலவகை வியாதிகளையும் போக்கும். ஆக்காரணத்தை உணர்த்தவே போலும்; சிவபெருமான் ஆனை தாண்டவபுரத்தில் அற்புத நடனம் புரிகிறார்! (பிறவிப் பிணிக்கும் மருந்தளிக்கும் பெருமானே ஆனைத்தோலையணிந்து, அனைவரும் அதன் பெருமையை விளக்கத்தான் போலும்!) புலித் தோலிலும் அமர்ந்து ஜபம் செய்யலாம். அது மோட்சத்தை அளிக்கும் சக்தி வாய்ந்தது. ஆனால் சந்நியாசிகளுக்கு (கோப தாபங்களை வெல்வதற்குறியாக) உள்ளது என்பர் பெரியோர்! இல்லறத்தாரிலும் உள்ளத்துறைவுடையோர் இருத்தல் கூடும்!

## ஜபம் செய்யும் பொழுது எதனைக் கொண்டு எவ்வாறு எண்ண வேண்டும்?

சுண்டுவிரலின் அடுத்த விரலுக்கு அநாமிகை என்று பெயர். அதன் இரண்டாவது கணு (பருவம்) தொடங்கி, சுண்டுவிரலின் முதல் வரை வழியாக மேலே வந்து ஆள்காட்டு விரலின் அடிக்கணுவரை எண்ணி வந்தால், தொகையும் பத்து கிடைக்கும். நீண்டு நிற்கும் அடிக்கணுக்களாகிய இரண்டையும் ஒரு முறை வலம் வந்து போலாயிற்று! இவ்வாறு செய்தாலெ, "ஒரு மாமேருப் பிரதட்சிணம்" என்று கூறப்படுகின்றது. இந்த மேருவை திடீரென்று தாண்டக் கூடாதாமம்!

இந்தக் கணுக்களின் வழியாகவே காயத்ரியை எண்ணி(தியானித்துக் கொண்டு) பன்முறை- எண்ணிக் கொண்டு ஜபம் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைகளை உபயோகித்தல் அவசியமா?

காமியமான கோரிக்கைகளை உலகின் தாயான காயத்ரி தேவியிடமிருந்து பெற விரும்புவோர், பலவித மாலைகளை கைக்கொண்டு ஜபம் புரியலாம். அதன் பலன் பன்மடங்கு அதிகமாகும். உதாரணமாக: முன் தெரிவித்த அங்குல எண்ணிக்கையின் வழி அறியாது விரல் விட்டு எண்ணி ஜபம் செய்பவரின் ஒரு பங்குதான் பலன். அங்குல முறை அறிந்து. மேருவைக் கடவாது ஜபம் செய்யின் 10 கணக்காகும். புத்ரஜீவ' என்னும் மரத்தின் கனிகொண்டு (மணிகொண்டு) ஜபம் செய்தால் 1க்கு 100 பங்கு பலன் பவழத்தால் மாலை கட்டி அதன்வழியாக ஜபம் செய்தால் ஆயிரம் பங்கு பலன். முத்து மாலை கொண்டு ஜபம்புரியின் பதினாயிரம் பங்கு பலன். பொன்னினால் மணி செய்து அதன் வழியாக ஜபம் செய்தால் லட்சம் பங்கு பலன் தரும். தர்ப முடியினால் எண்ணிக்கை செய்து ஜபம் இயற்றல் கோடி பங்கு பலன். துளசி மணி கொண்டு ஜபம் புரிதல் அநந்தமான பலன் தரும். ருத்திராஷமணி கொண்டு ஜபம் புரியின் ,அதன் பலன் தன்னாலும் கூற இயலாது என்று, பார்வதியை நோக்கிப் பரமசிவன் கூறியிருப்பதாகப் புராணம் பேசுகின்றது.

குறிப்பு:
இங்கு தெரிவித்த புத்ரஜிவிமணி அலாபாத்தில் விற்கப்படுகின்றது. அது ருத்ராஷ மணியிலும் பெரிய அளவில் பழபழப்பாகவும் இருக்கும்.

இனி ஆசிரம மாறுபாட்டிற்கேற்ப ஜபம் செய்ய வேண்டும்! ஆதன் விஷேட முறையை, 18 ஸ்மிருதி கர்த்தர்களில் ஒருவராகிய 'இயமன' என்பவர் விளக்குகின்றார்: பிரும்மசாரி, கிருகஸ்தர் இருவரும் 108 வீதம் காயத்ரி ஜபம் செய்ய வேண்டும். வனவாசத்தை மேற்கொண்டு விளங்கும் வானப்பிரஸ்தரும், சந்நியாசிகளாக விளங்கும் 4வது ஆசிரமிகளும் தினம் 2000 உருவுக்கு அதிகமாக ஜபம் செய்ய வேண்டும் (இது பெரியோர் மூலம் அறிதற்குறியது )

## காயத்ரி ஜபத்தைக் குறித்து இல்லறத்தார்க்கு ஒரு எளிய முறை

இல்லறத்தானாகிய கிருகஸ்தனுக்கு வேலை பல இருக்குமாதலால் அதற்கேற்ப சிறிது அநுகூல முறை விளக்கப்படுகின்றது. அதாவது, இல்லறத்தான் 108 முறை ஜபம் செய்ய வேண்டியதுதான். ஆனால், வேறு வேலை இருப்பின் என்செய்வது? அதிற் பாதியாகிய 54 முறையேனும் செய்தல் நலம். அல்லது 27 செய்தல் மூன்றாந்தரமாகும். அதினின்றும் குறைவாக செய்யும் முறை கூறப்படவில்லை!

## காயத்ரியை 'அதிகமாக' ஜபம் செய்யத் தகாத காலங்கள்

சிரார்த்தம், பிரதோஷ வேளை. அமாவாசை ஆகிய நாட்களில் காயத்ரி ஜபத்தை 10 முறை செய்தல் தகும். வேதங்கள் கற்கக் கூடாத (அநத்தியயன) நாட்களில் 28 முறை ஜபம் செய்தலே போதுமானது. இவையல்லாத 'பிற' காலங்களில் வழக்கம் போல் குறித்த முறைஅளவு ஜபம் செய்யத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜபத்தை எவ்விதம் செய்தல் வேண்டும்?

சாதாரணமாக வாயினால் உச்சரித்த காயத்ரி செய்தற்கு பலன் ஒரு பங்குதான் ஜப முறையாகச் செய்தால் 10 பங்கு பலன் உதடசைந்த அளவில் செய்தால் 100 பங்கு பலன் தரும். மனத்தினாலேயே செய்யின் ஆயிரம் பங்கு பலன் அழிக்கும்!

உதடு அசையும்படி செய்தால் உபாம்சு ஜபம் என்று கூறப்படும் (பற்களை மூடிக் கொண்டு நாவைமட்டும் அசைத்து சத்தம் வெளிவராத வாறு ஜபம் செய்தாலே உபாம்சுவாம் ) மனதினால்மட்டும் செய்தால் தான் மானசீக ஜபமாகும். காலையில் சந்தியாவந்தனம் செய்யும் பொழுது நின்று கொண்டு காயத்ரி ஜபம் செய்தல் வேண்டும். சூரிய பகவான் உதயமாகி அவரது தர்சனம் கிடைக்கும்வரை ஜபம் செய்தலே உத்தமம்

நடுப்பகல் சந்தியாவந்தனம் உட்காந்தவாறு செய்ய வேண்டும். மாலை நன்றாக அமர்ந்து, நட்சத்திர ஒளி புலப்படும் வரை ஜபம் செய்தலே மேல்.

சூரியனைப் பார்த்துக் கொண்டே செய்தாலும் ஒரு பொது முறைதான் கண்ணில் சிற்றொளி பாய்தலே போதும்!

## காயத்ரி ஜபமும்பிரம்ம தேஜஸின் வளர்ச்சியும்

ஒப்பற்ற (ஞானக் கருத்தமைந்த ) காயத்ரி மந்திர கருத்தை மனதில் பதித்து ஜபம் செய்பவரின் முகத்தில் ஒரு மஹத்தான சாந்த ஒளி வீசிக்கொண்டிருக்கும் இவ்வித தேஜஸ் உண்டாவதன் காரணம் என்ன? “யத்பாவம் தத்பவதி” “எதை நினைக்கின்றானோ, அதாகின்றான் மனிதன்” என்பது ஒரு உண்மைப் பழமொழி! இங்கு காயத்ரி ஜபம் செய்வோர் மததில் “எதனை எவ்வாறு” நினைக்கின்றனர்? முதலில், “ஓம்,பூ:புவ: ஸுவ:” என்ற வ்யாஹ்ருதிகளை உச்சரிக்கும் பொழுதே அவர்களின் இருதயம் -சங்கல்ப சக்தி! –பூலேகம், புவர்லோகம், சவர்க்கலேகம் என்ற மூனறையும் பற்றிச் சென்று.அப்பால் ஆகாயத்தின்னிடையே விளங்கும் சூரிய பகவானை வணங்கி அங்கிருந்தபடி தனது ஹ்ருதயத்தில் உள்ளீடாய் விளங்குகின்ற ஜீவாத்மா பரமாத்மாவோடு இரண்டறக் கலந்து முகத்தின் வழியே மலருகின்றது:

கண்ணொளி வழி பிரகாசிக்கிறது. இதனையே பிரம்ம தேஜஸ் என்பர் பெரியோர். இந்தப் பிரம்மதேஜஸ் அழிவற்ற சக்தியையும், அழகையும் ஆனந்த வாழ்வையும் அவரவர் விரும்பும் பிறவற்றையும் அழிப்பதாகும்! காயத்ரி மந்திரத்தை தாயின் வடிவமாக அமைத்ததேன்? காயத்ரி ஜபம் செய்வோரது முகத்தில் ஒளிரும் காந்த சக்தி- தாய்ப்பாலை பருகி வளரும் குழந்தையின் முகத்தையே நிகர்ந்து விளங்குவதால். காயத்ரி மந்திரத்தை தேவியின் திருமேனியாக – அன்னையின் வடிவமாக அனுபவத்தில் கண்டு கூறினர் பெரியோர்! அந்த அருள் அன்னை வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காயத்ரி தேவியின் தனிப்பெருமை

உலகின் தாய்போல் பல மாதரிருப்பினும் நம்மை ஈன்றெடுத்த தாயின் பெருமை தனித்து விளங்குவது போல் காயத்ரியைப் போன்று பல மந்திரங்கள் வேதத்திலிருப்பினும் அவை வேத மாதாவான காயத்ரிக்கு நிகராவன அன்று. உதாரணமாக

1. க்ரியை (நற்காரியம்) ஒன்றும் செய்திருப்பவன், 2.மூர்க்கன், 3.பெரிய நோய் கொண்டவன், 4.மனம் போல் ஆசரனை கொண்டவன் என்ற இந்நால்வருக்கும் வாழ்நாள் உள்ளவரை. தீண்டல் காத்தல் தகும், என்று கூர்ம புராணத்தில் ஸ்ரீவியாசர் பெருமான் தெரிவித்திருக்கின்றார்! இத்தகைய பாவ ஜன்மம் பெற்றவர்கள் கூட எந்த மகான்களின் உபதேசத்தையேனும் பெற்று பதினாயிரம் முறை காயத்ரி ஜபம் செய்யின் அவரது குற்றங்கள் குறைகள் - தோஷங்கள் பாவங்கள் பஞ்சென பறக்குமென்று வேதவியாசர் பெருமான் வேறொரிடத்தில் தெரிவித்திருக்கின்றார். (ஆகவே காயத்ரி தான் -புத்திரனை பரிசுத்தஞ் செய்யும் தாய் பொன்ற தென) முடிவாகிறது.

2. ஆனால் காயத்ரியை மனதில் அறிந்து கொண்டு மட்டும் நின்று விடுகின்றவர்க்கு காயத்ரியின் அருளைப்பெற முடியாதாம்! ஏன்? பசுவின் மடியில் பாலிருப்பதை அறிகிறோம், ஆனால் அதனை, கைகொண்டு கறந்து பாத்திரத்தின் உதவி கொண்டு உட்கொண்டவர்க்கல்லாது, நோய் நீங்குமா? பசி தீருமா? போசிப்பு கிடைக்குமா? முகச் செழிப்புத்தான் துலங்குமா? அதுபோன்று காயத்ரியினது ஜபத்தின் தன்மைக்கேற்ப பயன்னளிக்கும் ஈசன் காயத்ரி ஜபம் செய்வோர் செய்யாதோர் ஆகிய இருவரது உள்ளத்திலும் அமைந்திருக்கின்றாராயினும், காயத்ரி ஜபம் செய்தல் என்னும் முயற்சி கொண்டு வேண்டுபவரே ஈசனது அருளைப் பெற இயலும். அகவே கறந்தவாக்கே பால் கிடைப்பது போல், ஆண்டவன் காயத்ரி மூலமாக வேண்டுவோர்க்கே அவரது அருள் கிடைக்குமாறு ஒரு வழி வகுத்திருக்கின்றார் போலும்.

# உள்ளத் தூய்மையளிக்கும் உயர் காயத்ரி!

உடலைத் தண்ணீர் கொண்டு கழுவித் தூயதாக்குகின்றோம். எப்பொழுது? தினந்தோறும் தான்! அந்த உடலில் சுற்றிய ஆடையையும் நீரில் நனைத்து, சவுக்காரமிட்டு மினுமினுக்கச் செய்கிறோம்! எப்பொழுது தினந்தோறும்தான்! அது போல் உள்ளத்தையும் (ஏன்? ஈசன் அங்கு வாசம் செய்கின்றாராம்! அரசர் அமரும் இடத்தை அழகு செய்ய வேண்டாமா?)தூய்மையாக வைத்திருக்க வேண்டுவதே! அதற்கான காயத்ரியை ஜபிக்க வேண்டுமாம். பத்து முறை ஜபம் செய்தால் அன்றாடம் அறிந்தும் அறியாமலும் செய்த பாவம் கரையுமாம், 100 முறை காயத்ரி ஜபம் செய்தால் முன் செய்த பாவமும் மனதினின்று நீங்குமாம் பதினாயிரம் காயத்ரி ஜபம் புரிந்தவர் பல வகை பாவம் செய்தவராயினும் அவை நீங்கி பரிசுத்தராக விளங்குவாராம் அழுக்கற்ற கண்ணாடியின் முகம் நன்றாக விளங்கும்! அது போல் தூய்மையுள்ள நெஞ்சில் ஈசனது அருள் விலாஸம் மேன்மேலும் தாண்டவம்மாடும்! வாழ்வின் ஆனந்தத்தை வையகத்தில் துய்க்க வழி இதுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸகல தேவதா காயத்ரி மந்த்ரங்கள்

1. ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவன்:

ஓம் தம் வாகீச்வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹி
தந்நோ ஹஸெள: ப்ரசோதயாத்॥

2. ஸ்ரீ லக்ஷ்மீ வராஹன்:

ஓம் தநுர்த்தராய வித்மஹே வக்ர தம்ஷ்ட்ராய தீமஹி
தந்தோ வராஹ: ப்ரேசோதயாத்॥

3. ஸ்ரீ நரஸிம்ஹன்:

ஓம் வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நாரஸிம்ஹ ப்ரசோதயாத்॥

4. ஸ்ரீ ராமன்:

ஓம் தாசரதாய வித்மஹே ஸீதாவல்லபாய தீமஹி
தந்நோ ராம: ப்ரசோதயாத்

5. ஸ்ரீ க்ருஷ்ணன்:

ஓம் தாமோதராயவித்மஹே ருக்மிணீ வல்லபாய தீமஹி
தந்நோ க்ருஷ்ண: ப்ரசோதயாத்॥

6. ஸ்ரீ நிவாஸன்:

ஓம் நிரஞ்ஜநாய வித்மஹே நிராபாஸாய தீமஹி
தந்நோ ஸ்ரீ நிவாச: ப்ரசோதயாத்॥

7. ஸ்ரீ ஹம்ஸாவதாரம்:

ஓம் ஹம்ஸ ஹம்ஸாய வித்மஹே பரமஹம்ஸாய தீமஹி
தந்நோ ஹம்ஸ: ப்ரசோதயாத்॥

8. ஸ்ரீ லக்ஷ்மீ காயத்ரி:

ஓம் மஹாதேவ்யை வித்மஹே விஷ்ணு பத்ந்யை ச தீமஹி
தந்நோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத்॥

9. பூமிதேவி:

ஓம் தநுர்தராயைச வித்மஹே ஸர்வ ஸித்யை ச தீமஹி
தந்நோ தரா ப்ரசோதயாத்॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஸ்ரீ நீளா காயத்ரி:

ஓம் மஹாதேவ்யை வித்மஹே விஷ்ணு பத்நயை ச தீமஹி
தந்நோ நீளா ப்ரசோதயாத்॥

11. ஸ்ரீ ஸுதர்சநர்:

ஓம் ஸுதர்சநாய வித்மஹே ஜ்வாலா சக்ராய தீமஹி
தந்நோ சக்ர: ப்ரசோதயாத்॥

12. ஸ்ரீ விஷ்வக்ஸேனர்:

ஓம் விஷ்வக்ஸேநாயவித்மஹே வேத்ரஹஸ்தாயதீமஹி
தந்நோ விஷ்வக்ஸேந: ப்ரசோதயாத்॥

13. ஸ்ரீ கருடன்:

ஓம் தத்புருஷாய வித்மஹே ஸுவர்ண பக்ஷாய தீமஹி
தந்நோ கருட: ப்ரசோதயாத்

14. ஸ்ரீ ஆஞ்ஜநேயர்:

ஓம் தத்புருஷாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி
தந்நோ மாருதிப் ப்ரசோதயாத்!

ஸ்ரீ சங்கரன்:

(1) ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்॥

ஸ்ரீ கணபதி:

(2) ஓம் தத்புருஷாய வித்மஹேவக்ரதுண்டாய தீமஹி
தந்நோ தந்தி: பிரசோதயாத்!!

ஸ்ரீ நந்தீச்வரன்:

(3) ஓம் தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி
தந்நோ நந்தி: ப்ரசோதயாத்॥

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர்:

(4) ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி
தந்நோ ஷண்முக: ப்ரசோதயாத்॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ப்ரஹ்மா:

(5) ஓம் வேதாத்மகாய வித்மஹே ஹிரண்ய கர்பாய தீமஹி
தந்நோ ப்ரம்ஹா ப்ரசோதயாத்॥

ஸ்ரீ பாஸ்கரன் (சூரியன்)

(6) ஓம் பாஸ்கராய வித்மஹே மஹாத்யுதிகராய தீமஹி
தந்நோ ஆதித்ய: ப்ரசோதயாத்॥

ஸ்ரீ அக்னி பகவான்:

(7) ஓம் வைச்வாநராய வித்மஹே லாலீலாய தீமஹி
தந்நோ அக்நி: ப்ரசோதயாத்॥

ஸ்ரீ துர்கா தேவி:

(8) ஓம் காத்யாயநாய வித்மஹே கந்யகுமாரி தீமஹி
தந்நோ துர்கி: ப்ரசோதயாத்॥

தக்ஷிணாமூர்த்தி:

(9) தக்ஷிணாமூர்த்தயே ச வித்மஹே த்யாநஸ்த்தாய தீமஹி
தந்நோ தீச: ப்ரசோதயாத்॥

ஸ்ரீ பரப்ரஹ்மகாயத்ரி:

(10) ஓம் பரமேச்வராய வித்மஹே பரதத்வாய, தீமஹி
தந்நோ ப்ரஹ்ம ப்ரசோதயாத்॥






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடம்

## ஸ்ரீ பாதுகையும் நவக்ரஹங்களும்



**ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி**

**பாதுகாப்யாம் நம:**

**கநகருசிரா காவ்யாக்யாதா சனைஸ்சரஞ்சிதா**
**ச்ரிதகுருபுதா பாஸ்வத்ருபா த்விஜாதிபஸேவிதா |**
**விஹிதவிபவா நித்யம் விஷ்ணோ: பதே மணிபாதுகே**
**த்வமஸி மஹதீ விச்வேஷாம் ந: சுபா க்ரஹமண்டலீ ||**

இந்த ஸ்லோகம் ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகனால் அருளிச் செய்யப்பட்ட **பாதுகாஸஹஸ்ரம்** என்கிற கிரந்தத்தில் காஞ்சநபத்ததி என்கிற பகுதியிலுள்ளது. இதில் சூரியன் முதலிய ஏழு பிரதான க்ரஹங்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சாயா க்ரஹங்களான ராஹு கேதுக்களுடைய மந்திரங்களின் பீஜாக்ஷரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை, அவரவர்களுடைய ஆசார்யர்களிடம், அல்லது பெரியோர்களிடம், உபதேசமாகப் பெற்றுக்கொண்டு தினந்தோறும் 10 அல்லது 28 தடவை ஜபம் செய்தால் நவக்ரஹங்களால் ஏற்படக்கூடிய துன்பங்கள் அருகேயும் அணுகாது. இன்பமே பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ:

# நவக்ரஹக் கோலம்

## பெண்மணிகளுக்கொரு வரப்பிரசாதம் !

பெண்கள் தம் வீட்டையும் சுற்றுப்புறங்களையும் பசுஞ் சாணம் தெளித்துத் துடைத்துக் கோலம் போடுவதென்பது தொன்றுதொட்டு நம் நாட்டில் நடைபெற்றுவரும் நல்ல பழக்கமாகும்.

நல்ல முறையில் போடப்படும் கோலங்கள் மனிதரையே யல்லாது தேவதைகளையும் ஆகர்ஷிக்கக் கூடியனவாகும். ஏதோ மனத்துக்குத் தோன்றியபடி போடாமல் முறையாகக் கோலங் களைப் போடுவது க்ஷேமகரமாக இருக்கும். அவ்விதக் கோலங்கள் தேவதைகளுக்கு ப்ரீதியை உண்டாக்கக்கூடிய வகையில் யந்திர வடிவில் அமையவேண்டும்.

ஆகவே, ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் இயற்றியுள்ள ''ஸௌந்தர்ய லஹரி'' என்ற ஸ்தோத்ரக் கிரந்தத்தில் சொல்லிய படி, நவக்ரஹங்களின் காரகாம்சங்களை அனுசரித்து, யந்திர உருவங்களை உள்ளடக்கிய கோலங்கள் இங்கு அச்சிடப் பெற்றிருக் கின்றன.

பெண்மணிகள் அரிசிமாவினால் பகவானுடைய ஸந்நிதியிலோ மற்றும் காலால் மிதிக்காத இடங்களிலோ அந்த அந்தக் கிழமை களில் அந்த அந்தக் கோலங்களைப் போட்டு, அவற்றிற்கெதிரில் குத்து விளக்கேற்றி வந்தனை வழிபாடுகள் செய்து அந்த அந்தக் கிழமைக்குரிய க்ரஹத்தின் ஸ்லோகத்தையும், ஸௌந்தர்ய லஹரி ஸ்லோகத்தையும் பக்தியுடன் படித்தால் ஸ்ரீ தேவியினுடையவும், நவக்ரஹங்களுடையவும் அருளால் ஆயுராரோக்ய ஸௌபாக்யங் களுண்டாகுமென்பது திண்ணம்.

நவராத்திரி காலத்தில் ஒன்பது நாட்களிலும் வரிசையாக இந்தக் கோலங்களை கொலுவிற்குமுன் போடலாம். சுற்றுக்கோடு களை மாத்திரம் வெள்ளை மாவினால் அமைத்து நடுப்பாகங்களைப் பற்பல வர்ணமுள்ள மாவினாலோ குங்குமத்தாலோ அலங்காரம் செய்தால் மிக அழகாக அமையும்.

இப்படிப்பட்ட வீடுகளில் ஸ்ரீ லோகமாதாவின் பரிபூரண கடாக்ஷம் நிலவி, இவ்வீடுகளில் வஸிப்போர்க்கு நவக்ரஹங்களும் நல்லதே செய்துவருவர்.

**ஸ்ரீரஸ்து, சுபமஸ்து, சிராயுராரோக்யமஸ்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்ரஹக் கோலம்

## 1. ஞாயிற்றுக்கிழமை (சூரிய பகவான்)




சூரியபகவான்

ஸௌர்ய ஸ்துதி

ஜபாகுஸும ஸங்காஶம்
காஶ்யபேயம் மஹாத்யுதிம் |
தமோரிம் ஸர்வ பாபக்நம்
ப்ரணதோஸ்மி திவாகரம் ||

ஸௌந்தர்ய லஹரி

தநீயாம்ஸம் பாம்ஸும் தவ சரண பங்கேருஹ பவம்
விரிஞ்சி: ஸஞ்சிந்வந் விரசயதி லோகா நவிகலம் |
வஹத்யேநம் ஶௌரி: கதமபி ஸஹஸ்ரேண ஶிரஸாம்
ஹரஸ் ஸம்க்ஷுத்யைநம் பஜதி பஸிதோத்தூளந விதிம் ||

(பலன்: ஸகலகாரிய ஸித்தி, லோக ஆகர்ஷணம்)

---

## 2. திங்கட்கிழமை (சந்திர பகவான்)

சந்த்ர ஸ்துதி




சந்த்ரபகவான்

ததிஶங்க துஷாராபம்
க்ஷீரோதார்ணவ ஸம்பவம் |
நமாமி ஶஶிநம் ஸோமம்
ஶம்போர் மகுட பூஷணம் ||

ஸௌந்தர்ய லஹரி

ஶிவ: ஶக்த்யா யுக்தோ யதி பவதி ஶக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குஶல: ஸ்பந்திதுமபி |
அதஸ்த்வா மாராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத மக்ருத புண்ய: ப்ரபவதி ||

(பலன்: முன்னேற்றமும், தடங்கல் நீக்கமும்)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. செவ்வாய்க்கிழமை

## (குஜ பகவான்)




அங்காரகபகவான்

அங்காரக ஸ்துதி


தரணீ கர்ப்ப ஸம்பூதம்
 வித்யுத்காந்தி ஸமப்ரபம் |
குமாரம் ஶக்தி ஹஸ்தம் ச
 மங்களம் ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

தடில்லேகாதந்வீம் தபநஶஶி வைஶ்வாநர மயீம்
 நிஷண்ணாம் ஷண்ணாமப்யுபரி கமலாநாம் தவ கலாம் ||
மஹாபத்மாடவ்யாம் ம்ருதித மம மாயேந மநஸா
 மஹாந்த: பஶ்யந்தோ தததி பரமாஹ்லாத லஹரீம் ||
(பலன்: சத்ருக்களை ஜயித்தல்)

---

## 4. புதன் கிழமை (புத பகவான்)




புதபகவான்


புத ஸ்துதி

ப்ரியங்கு கலிகா ஶ்யாமம்
 ரூபேணாப்ரதிமம் புதம் |
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம்
 தம் புதம் ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

ஸவித்ரீபிர் வாசாம ஶஶிமணி ஶிலாபங்க ருசிபி:
 வஶிந்யாத்யாபிஸ் த்வாம் ஸஹ ஜநநி ஸஞ்சிந்தயதி ய: |
ஸ கர்த்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கி ஸுபகை:
 வசோபிர் வாக்தேவீ வதந கமலாமோத மதுரை: ||
(பலன்: ஸகல சாஸ்திர ஞானம்)

---



குருபகவான்

## 5. வியாழக்கிழமை (குரு)

குரு ஸ்துதி

தேவாநாஞ்ச ரிஷீணாஞ்ச
 குரும் காஞ்சந ஸந்நிபம் |
பக்தி பூதம் த்ரிலோகேஶம்
 தம் நமாமி ப்ருஹஸ்பதிம் ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சௌந்தர்ய லஹரி

அவித்யாநா மந்தஸ்திமிர மிஹிர த்வீப நகரீ
ஜடாநாம் சைதந்ய ஸ்தபக மகரந்த ஸ்ருதிஜரீ |
தரித்ராணாம் சிந்தாமணி குணநிகா ஜந்மஜலதௌ
நிமக்நாநாம் தம்ஷ்ட்ரா முரரிபு வராஹஸ்ய பவதி ||
(பலன்: ஸகலஸம்பத்தும் வித்யையும்)

## 6. வெள்ளிக்கிழமை (சுக்ர பகவான்)

சுக்ர ஸ்துதி

ஹிமகுந்த ம்ருணாலாபம்
தைத்யாநாம் பரமம் குரும் |
ஸர்வஶாஸ்த்ர ப்ரவக்தாரம்
பார்கவம் ப்ரணமாம்யஹம் ||


சுக்ரபகவான்

சௌந்தர்ய லஹரி

சதுர்ப்பி: ஶ்ரீகண்ட்டை: ஶிவயுவதிபி: பஞ்சபிரபி
ப்ரபிந்நாபி: ஶம்போர் நவபிரபி மூலப்ரக்ருதிபி: |
த்ரயஶ் சத்வாரிம்ஶத் வஸுதல கலாஶ்ர த்ரிவலய
த்ரிரேகாபி:ஸார்தம் தவ ஶரணகோணா: பரிணதா: ||
(பலன்: விவாஹப்ராப்தி, ஸௌபாக்யம், மலட்டு நீக்கம்)

---


சனிபகவான்

## 7. சனிக்கிழமை (சனி பகவான்)

ஶநி ஸ்துதி

நீலாஞ்ஜந ஸமாபாஸம்
ரவிபுத்ரம் யமாக்ரஜம் |
ச்சாயா மார்த்தாண்ட ஸம்பூதம்
தம் நமாமி ஶநைஶ்சரம் ||

சௌந்தர்ய லஹரி

த்வயா ஹ்ருத்வா வாமம் வபு ரபரித்ருப்தேந மநஸா
ஶரீரார்தம் ஶம்போ ரபரமபி ஶங்கே ஹ்ருதமபூத் |
யதேதத் த்வத்ரூபம் ஸகல மருணாபம் த்ரிநயநம்
குசாப்யா மாநம்ரம் குடில ஶஶி சூடால மகுடம் ||
(பலன்: வியாதி, கடன், பேய், பிசாசு ஆபத்து நீங்கல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. ராகு பகவான்

(செவ்வாய்க்கிழமை இந்தக் கோலமும் போடலாம்)



ராகு பகவான்

ராஹு ஸ்துதி

அர்தகாயம் மஹாவீர்யம்
சந்த்ராதித்ய விமர்தநம் |
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம்
தம் ராஹும் ப்ரணமாம்யஹம் ||


ஸௌந்தர்ய லஹரி

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாஶம் கீநாஶோ பஜதி தநதோ யாதி நிதநம் |
விதந்த்ரா மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலதி த்ருஶாம்
மஹா ஸம்ஹாரே ஸ்மிந் விஹரதி ஸதி த்வத்பதி ரஸௌ ||

(பலன்: எக்காரியத்திலும் ஜயமடைதல்)

## 9. கேது பகவான்

(சனிக்கிழமை இந்தக் கோலமும் போடலாம்)



கேதுபகவான்

கேது ஸ்துதி

பலாஶ புஷ்ப ஸங்காஶம்
தாரகா க்ரஹ மஸ்தகம் |
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

த்வதந்ய:பாணிப்யா மபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித வராபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்ச்சா ஸமதிகம்
ஶரண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ ||

(பலன்: தரித்ரம், வியாதி, பீடைகள் நிவர்த்தி)

---

ஸ்ரீய: பதியான பகவான் க்ருபையால், பக்தர்கள் அனைவரும் ஆற்றலும், ஆயுளும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும்.

பக்தி பெருகட்டும்!
வாழ்க பக்தர்கள்! வாழ்க வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவம்

## 1. திரிகடுகு

திரிகடுகு என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று சரக்குகள் சேர்ந்த கூட்டுமருந்தின் பெயராகும். இது மிகப் பழைமையான கூட்டுமருந்து என்பது, நல்லாதனார் நாம் இயற்றிய நூலுக்குத் 'திரிகடுகம்' என்று பெயரிட்டமையே புலப்படுத்தும்.

அ. சுக்கு

வேறு பெயர்கள் : ஆர்த்ரகம், உலர்ந்த இஞ்சி, சுக்கு, சுண்டி, சொண்டி, சௌபன்னம், சௌவர்ணம், நவசுறு, நாகரம், மஹௌஷதம், விச்வபேஷஜம், விடமுடிய அமிர்தம், வேர்க்கொம்பு, கோடகம்.

Zingiber Officinale, Roscoe
Eng : Dried Ginger.


இஃது இந்தியாவில் அநேக இடங்களில் பயிரிடப்படுகிறது; நீர் செழிப்புள்ள இடங்களில் முக்கியமாய் உண்டாகிறது. ஆயினும், செம்பாடுகளிலும் மணல் பூமிகளிலும், சிறப்பாகவும், சென்னை, கொச்சி, திருவாங்கூர் முதலிய இடங்களிலும், பஞ்சாப், வங்காளம் முதலிய நாடுகளிலும் ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. இது பச்சையாக உள்ளபோது இஞ்சி என்றும் உலர்ந்தபின் சுக்கு என்றும் பெயர்பெறும்.

**பயன்படுத்தும் உறுப்பு : கிழங்கு (உலர்ந்தது)**
**சுவை—கார்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்கை :** வெப்பமுண்டாக்கி — உஷ்ணகாரி (Stimulant) பசித்தீத்தூண்டி — ஜடராக்கினிவர்த்தனி (Stomachic) அகட்டு வாய்வகற்றி — உதரவாதஹரகாரி (Carminative)



படம் 1. இஞ்சி (சுக்கு)

**குணம் :** சுக்கினால், செரியாமை, மார்பெரிச்சல், புளியேப்பம், வெப்பம், கீழ்வாய் நோய், இரைப்பு, இருமல், கழிச்சல், நீரேற்றம், குன்மம், வயிற்றுப்புசம், காதுகுத்தல், மூகநோய், தலைநோய், சூலைவலி, பாண்டு, வயிற்றுக்குத்தல், ஐயசுரம் போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கு : சுக்கைக் களி செய்து நெற்றிக்கிடத் தலைவலியும், கழுத்தின் மீதிடத் தொண்டை வலியும், புருவத்தின் மீதிட அண்மைப் பார்வைக் கெடுதியும் நீங்கும்.

சுக்கு, கற்கண்டு வகைக்கு வராகனெடை ஒன்று. இரண்டையும் பொடிசெய்து, காலை மாலை இரு வேளையும் இளநீரில் ஒரு சிட்டிகை கொடுக்க, சுமையெடுத்து உடம் பதிர்ந்து நெஞ்சுவலிப்பதும், மேல் மூச்சு காண்பதும் நீங்கும்.


ஆ. மிளகு

வே. பெ : கறி, கோளகம், மிரியல், சருமபந்தம், வல்சம், மரிசம், குறுமிளகு, மலையாளி.

Piper Nigrum, Linn.

இது, தென்னிந்தியாவில் மலையாளம், கொச்சி, குடகு, மைசூர் முதலிய மலைநாடுகளில் பயிராகும் ஒருவகைக் கொடி. இது மரங்களைச் சுற்றி ஏறி அடர்த்தியாய் வளரும். இதன் பழத்துக்கு மிளகு என்பது பெயர். இதன் பழம் பழுத்த தோல் உதிர்ந்தால் அதனை வெள்ளை மிளகு எனக் கூறுவர்.

சுவை — கைப்பு, கார்ப்பு; தன்மை—வெப்பம்;
பிரிவு—கார்ப்பு.



படம் 2

மிளகு (பச்சை) மிளகு (காய்ந்தது)

செய்கை : காறலுண்டாக்கி (Acrid)

அகட்டுவாய்வகற்றி—உதாவாதஹரகாரி (Carminative); முறைவெப்பகற்றி—முறைவியாதிரோதி (Antiperiodic); தடிப்புண்டாக்கி—ஷோணகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Rubefacient); வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant); வீக்கங்கரைச்சி (Resolvent); வாத மடக்கி—வாதஹரகாரி (Antivata).

பச்சை மிளகு (A green variety of Pepper)

குணம்: இது வளிநோய்களையும் சீழ்மூலத்தையும் நீக்கும்.


பழம் (மிளகு)

இதனால் குளிர்சுரம், பாண்டு, கோழை, கழிச்சல், குன்மம், வாயு, சுவையின்மை, வெறி, மூலம், சந்நியாசம், வலிப்பு (அபஸ்மாரம்), பிரமேகம், இருமல், பங்குவாதம், குய்யரோகம், சோணிதவாதம், களநோய், செவிவலி, இரத்தகுன்மம், செரியாமை, காமாலை இவை போகும்.

மிளகு வளி, தீ, கபக்குற்றங்கள் இவை அனைத்தையும் நீக்கும். அன்றியும் தியிர்வாதம், கழலை, வளி, சளி இவைகளையும் அகற்றும்.

வழக்கு: மிளகு, பெருங்காயம், அபினி வகைக்கு 2 கிராம் எடுத்து, செவ்வையாக அரைத்து 12 மாத்திரைகள் செய்து, அதில் ஒரு மணிக்கொரு முறை ஒரு மாத்திரை கொடுத்துவர, வாந்திபேதி நீங்கும்.

## இ. திப்பிலி



படம் 3

திப்பிலி (சிறியது) திப்பிலி (பெரியது)

வே. பெ: உஷ்ணம், உல்லவுறர்ச்சி, காமன், குடாரி, கோலகம், கோழையறுக்கி, சரம், மாகதி, கணை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுலி, கணம், பாணம் பிப்பிலி வைதேகி, அம்பு, ஆதிமருந்து.

Piper longum, Linn

Chavica roxburgii

இது கொடி வகை இதனைத் தென்னிந்தியாவிலும், வங்காளத்தின் கீழ்ப்பாகங்களிலும் இதன் பழத்திற்காகப் பயிரிடுகிறார்கள். இதற்கு மிளகைப் பார்க்கிலும் காரம் மிக அதிகம். இதில் இருவகை உண்டு. ஒன்று அரிசித் திப்பிலி, மற்றொன்று யானைத் திப்பிலி

ப. உ : காய், அரிசி, வேர்

பச்சை

சுவை—இனிப்பு, தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு

உலர்ந்தது

சுவை — கார்ப்பு, தன்மை — வெப்பம், பிரிவு — இனிப்பு

செய்கை

வெப்பமுண்டாக்கி — உஷ்ணகாரி (Stimulant)

அகட்டுவாயுவகற்றி – உத்ரவாதஹரகாரி (Carminative)

## 2. திரிபலை

திரிபலை என்பது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆகியவை சேர்ந்த மருந்தின் பெயராகும். இதனை மருத்துவ மூப்பழம் எனவுங் கூறுவர்.

அ. கடுக்காய்

வே. பெ : அபையன், அமுதம், அம்ருதா, அரிதகி, ஏமவதி, இயவி, ஹைமவதி, கடு, சிவா, பத்தியம், பிதெக்வரா, வனதுர்க்கி, விஜயதேவன், ரோகிணி, ஜீவந்தி.

Terminalia chebula, Retz.

Eng : Chebulic Myrobalam, Ink nut.

கடுக்காய், மர வகுப்பைச் சேர்ந்தது. இது சில இடங்களில் உயர்ந்தும், சில இடங்களில் மிக உயரமின்றித் தாழ்ந்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சாதுர் சாதம்


சாதுர் சாதம் என்பது ஏலம், இலவங்கம், இலவங்கப் பட்டை, சிறுநாகப்பூ என்னும் நான்கு மணமுள்ள சரக்குகளைக் குறிக்கும் தொகைப் பெயர். இவை பெரும்பாலும் இளகங்கள், தைலங்கள், சூரணங்கள் ஆகியவற்றுக்கு மணமூட்டவும் பயன்படும்.

**அ. ஏலம் (பெரிய) ஏலம்**

வே. பெ. : ஆஞ்சி, கோரங்கம், துடி, அருசகனி.

Eletaria cardamomum
Malabar cardamoms.
Eng. Cardamom seeds

இச் செடி, ஏலக்காயின் பொருட்டுக் குளிர்ச்சியுள்ள மலை நாடுகளில் பயிரிடப்படுகின்றது. இக் காய் மூன்று பிரிவுள்ளது உள்ளிலும் மும்மூலையுடையது. விதை கறுப்பு; மணமுள்ளது மருந்துகளுக்கு மணம் தரும். இதில் வேறு வகைகளுமுண்டு.



படம் 17. ஏலம்

சுவை — கார்ப்பு, தன்மை—வெட்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை : வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)
பசித்தீத்தூண்டி—ஜாடராக்கினிவர்த்தனி (Stomachic)

குணம் : இது தொண்டை, நாள், வாய், கீழ்வாய் இவற்றில் உண்டாகும் நோய்களையும், இருமல், கழிச்சல், நீர்ச்சுருக்கு, நெஞ்சில் கோழைக்கட்டு, சிலந்தி நஞ்சு இவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும்; அழலை ஆற்றும்; வெண்ணீரைப் (விந்து பெருக்கும்.

ஏலம், அதிமதுரம், செங்கழுநீர், கோட்டம், விலாமிச்ச வேர், வெட்டிவேர், சுக்கு, சந்தனம், நன்னாரி, கோரைக் கிழங்கு, பற்பாடகம் முதலியவற்றைச் சிறிது நசுக்கி ஓர் எடையாய்க் கூட்டி, நீர் விட்டு எட்டில் ஒன்றாய் வற்றக் காய்ச்சி அருந்தின் உடல் வெப்பு, குருவியர்வை, சுரம் முதலியன தீரும்.

ஏலப்பொடி

வ. மு : ஏலம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, சந்தனக் கட்டை, வால்மிளகு இவற்றின் பொடி வகைக்கு 34 கிராம், சருக்கரை 85 கிராம் சேர்த்துக் கலந்து 2 கிராம் முதல் 4 கிராம் சேர்த்துக் கலந்து கொடுக்க இருமல், நாவறட்சி, வயிற்றுவலி முதலியன நீங்கும்.

ஏல வடகம்

ஏலவரிசி, இலவங்கப்பட்டை, முந்திரிகை (கொட்டைத் திராட்சை உலர்ந்தது), திப்பிலி வகைக்கு 204 கிராம், அதிமதுரம், சருக்கரை, பேரீந்து வகைக்கு 102 கிராம் இவற்றை ஒன்றுபட இடித்துச் சூட்டுடன் இருக்கும்போதே, கழற்சிக்காய் அளவு உருண்டை செய்து வேளைக்கு 1-2 கொடுக்க மாந்தம், வயிற்றுவலி, பொருமல் கழிச்சல், அழல் போம்.

ஆ. இலவங்கம்

வே. பெ : அருக்கம், உற்கடம், கருவாய், கிராம்பு சோசம், திரளி, வராங்கம்.

Eugenia Caryophyllata, Wild.

Eng : Cloves

இஃது இந்தியாவிலும் இலங்கையிலும் பயிராகிறது. எல்லாக் கடைகளிலும் விற்கப்படும்.

சுவை—காரமும் விறுவிறுப்புமுள்ளது, தன்மை—வெப்பம் பிரிவு—கார்ப்பு.

செய்கை : இசிவகற்றி – அங்காகர்ஷண நாசனி (Antispasmodic



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)

பசித்தீத்தூண்டி—ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)



படம் 18. இலவங்கம்

குணம்: கிராம்பு மயக்கம், பேதி, வாந்தி, குருதிக்கழிச்சல், நாட்பட்ட கழிச்சல், எருவாய்க்கடுப்பு, செவிநோய், சிவந்த மச்சம், கறுத்த மச்சம், கண்ணில் பூ, படைகள் ஆகியவற்றை நீக்கும். கறிமசாலையிலும் சேரும்.

வ. கு: கிராம்பை நீர்விட்டு மை போலரைத்து, நெற்றியிலும், மூக்குத்தண்டின் மீதும் பற்றிட தலைபாரமும் நேர்ற்றமும் குணமாகும்.

தணலில் வதக்கி வாயிலிட்டுச் சுவைக்க, தொண்டைப்புண் ஆறும். பற்களின் ஈறு கெட்டிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இரண்டு ஆழாக்கு வெந்நீரில், கிராம்புத்தூள் கால் பல சேர்த்து, அரை மணி நேரம் வரையில் மூடி வைத்து வடிகட்டி ⅛ முதல் ¼ ஆழாக்கு வீதம் உட்கொள்ள, பசித்தீயைத்தூண்டி குமிச்சலைப் போக்கும். பிள்ளைத்தாய்ச்சியின் வாந்தி நிற்கும்.

## இ. இலவங்கப்பட்டை

வே. பெ: கருவாப்பட்டை

Cinnamomum Zeylanicum
Eng : Cinnom—Bark of

கருவாப்பட்டைச் செடி இலங்கைக்கும் இந்தியாவுக்கு உரிய பயிர். ஆயினும், இலங்கையில்தான் மிகுதியாக வளர்கின்றது. நமக்குக் கடையில் கிடைப்பது ஜான்ஜிபார் என்னு



படம் 19. இலவங்கப் பட்டை

நாட்டிலிருந்து வருவதேயாகும். இது மற்றத் தேசத்தி உற்பத்தியிலும் மேம்பட்டது; கறிமசாலையில் சேரும். வா நாற்றத்தைப் போக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை — காரமும் இனிப்புமுடையது. தன்மை—தட்பம் (வெப்பவீரியமென்றும் கூறுவர்), பிரிவு—இனிப்பு (கார்ப்பென்றுங் கூறுவர்).

செய்கை : வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)
காமம்பெருக்கி—காமவர்த்தனி (Aphrodisiac)

குணம் : இது பாம்புக்கடி, சிலந்திப்பூச்சிக்கடி முதலியவை களின் நஞ்சைப் போக்கும். இஃது இரைப்பு, இருமல், வயிற்றுக்கடுப்பு, உள்முலப்புண் இவற்றைப் போக்கும். உடற்குக் குளிர்ச்சியை உண்டுபண்ணும்.

வ. கு : இதற்குச் சூல்பையைச் சுருங்கச் செய்கிற குண முண்டென்று பெரும்பாடு முதலியவற்றுக்குக் கொடுப்ப துண்டு.

அளவு : இப் பட்டையின் தூளை வேளைக்கு 65 மி. கி. முதல் 260. மி. கிராம் வரை கொடுக்கலாம். பெரும்பாலும் தனி யாகக் கொடுப்பது அரிது.

சீதக்கழிச்சலில் 650 மி.கிராம் பொடி பலனைத் தரும். இதன் செடியிலிருந்து 3 வகை எண்ணெய் எடுக்கப்படும்.

(1) பட்டையிலிருந்து எடுப்பது பொன்நிறச் சாயலா யிருக்கும்.

(2) இதன் இலையிலிருந்து எடுக்கும் எண்ணெயை, உடல் வலி, தலைவலி, பல்வலி முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு.

அளவு : 2—5 துளி

**இலவங்கப் பட்டைப்பொடி**

இலவங்கப்பட்டை, ஏலரிசி, சுக்கு இவற்றைப் பொடித்து, ஓர் அளவாகக் கலந்து 180 மி கிராம் முதல் 650 மி. கிராம் வரை கொடுக்க வாந்தி, வயிற்றுப்பொருமல், வலி, கழிச்சல், கடுப்புப் போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநாகப்பூ

வே. பெ : நாகம், நாகபுட்பம், நாகேசரம், கேசரம், சாம்பேயபம், கநகம், காஞ்சநம், ஏமம், ஆடகம்.

Mesua ferrea



படம் 20. சிறுநாகப்பூ

இஃது இமயம், கீழ்வங்காளம், அசாம், கீழ்த்தொடர்ச்சி, மேல்தொடர்ச்சி மலைகள், பர்மா முதலிய நாடுகளில் பயிராகின்றது.

ப. உ : இலை, மொக்கு, பூ, விதை, வேர், பட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை — சிறுகைப்பு, துவர்ப்பு, தன்மை—தட்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை :

பூ : துவர்ப்பி—வெய்கேசகனகாரி (Astringent)

அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)

காய் : மணமூட்டி (Aromatic)

கரறலுண்டாக்கி (Acrid)

நீர்மலம்போக்கி—விரேசனி (Purgative)

பட்டை: சிறுதுவர்ப்பி—லகுஸங்கோசனகாரி [Astringent-Mild]

வேர்ப்பட்டை : மணமூட்டி (Aromatic)

வியர்வை பெருக்கி—ஸ்வேதகாரி (Diaphoretic)

குணம் : இது வெள்ளை, இருமல், கழிச்சல் இவற்றைப் போக்கும். நீரடைப்பு, குருதிப்போக்கு, புண், கொப்புளம், காலெரிச்சல் ஆகியவற்றைப் போக்கும்.

இலை

வ. கு : இலையைப் புற்கை செய்து தலையில் வைத்துக் கட்டக் குளிர்ச்சி தரும்.

இலையை அரைத்துப் புண், கொப்புளம் இவற்றுக்குப் போடலாம்.

இலையைக் குடிநீர் செய்து கொடுக்க, விரல், காலடி இவற்றிலுண்டாகும் எரிச்சல் போம்.

மொட்டு

இதை மணப்பாகு செய்து சீதக்கழிச்சலுக்குக் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பூவை அரைத்து, வெண்ணெய், கற்கண்டுடன் கூட்டி உண்டுவர, குருதிப்போக்கை அடக்கும்.

பூ உலர்ந்தபிறகும் மணம் மாறாதிருப்பதால், பொடி, இளகம், தைலம் இவை மணம் பெற இதைச் சேர்க்கின்றனர். மனப்பூச்சுக் கலவைகளிலும் இது சேரும்.

உலர்ந்த பூவை நெய் விட்டரைத்து, கால்களில் காணும் எரிச்சலுக்குப் பூசி வரலாம்.

இப் பூவைச் சிறிது நெய்விட்டுக் காந்தாமல் வறுத்துப் பொடி செய்து, தக்க அளவு (½ கிராம்) எடுத்து நெய்விட்டுக் குழப்பியுண்ணக் குருதிப்போக்கு, நாவறட்சி, வயிற்றுளைச்சல், இருமல், செரியாமை, மிகுதியாக வியர்த்தல் என்னும் நோய்கள் யாவும் போம்.

**விதை**

இதன் விதை ஒரு பங்கு, சதாப்பிலை அரைப்பங்கு சேர்த் தரைத்துக் கழற்சியளவு, கொள்ள, முறைக்காய்ச்சல், வெள்ளை, இருமல் போம்.

**பட்டை**

இதை வறல் குடிநீர் செய்து உட்கொண்டுவர, உடல் வலுக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன மருத்துவம்

**காது அகுபங்சர் :**

சீன மருத்துவம் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்பதை உணர்ந்துள்ளது. இந்த உள் உறுப்புகளுக்கு உடலின் வெளியே ஒரு தானியங்கிக் கட்டுப்பாட்டு மையம் உள்ளது என்றும் நம்புகிறது.



இடுப்பு வலிக்கு காது அகுபங்சர் புள்ளியைத் தூண்டுதல் (படம்–42)

நுரையீரல், இதயம், ஈரல் போன்ற எந்தப் பகுதியில் நோய் ஏற்பட்டாலும் அந்தப் பகுதியில்தான் வலி வரவேண்டும் என்பதில்லை. ஆனால் அந்த உறுப்புக்களுடன் தொடர்புடைய தானியங்கிக் கட்டுப்பாட்டு மையத்தை (Remote Control) இயக்கினாலே நோய் குணமாகி விடுகிறது என்பது அதிசயமான அனுபவத்தில் பார்க்கும் உண்மை.

இப்படிப்பட்ட தொலை இயக்கிகளாக நமது காதுகள் விளங்குகின்றன. உடலில் நூற்றுக்கணக்கான அகுபங்சர் புள்ளிகள் இருப்பதைப் போலவே இரண்டு காதுகளின் இரு பக்கங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட அகுபங்சர் புள்ளிகள் இருப்பதை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனர்கள் அறிந்திருந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் 14 சக்தி நாளங்களைச் சார்ந்த உறுப்புகளும் அமையப் பெற்றுள்ளன. காதில் உள்ள சக்தி நாளங்களும், புள்ளிகளும் ஒவ்வொரு உடல் உறுப்புகளுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு உறுப்பில் நோய் ஏற்பட்டால் அந்த உறுப்பு தொடர்பாக, காதில் அமைந்துள்ள புள்ளியில் சிகிச்சை செய்தாலே அந்த பாதைகளில் உயிரோட்டம் ஏற்பட்டு உடலின் கேடுற்ற அமைப்பு சீராகி நோய் குணமாகிவிடும்.

அகுபங்சர் மருத்துவத் துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த மருத்துவர் நாக்கு, தழும்புப் பரிசோதனை மற்றும் நாடிப் பரிசோதனைகளுடன், காதில் உள்ள புள்ளிகளையும் ஆராய்ந்து (Ear Diagnosis), நோயாளி கூறும் நோய்க் குறிகளையும் கவனத்தில் கொண்டு எளிதாக நோயைக் கண்டுபிடித்து விடுவார். (படம்-42)


காதுகளில் முன்பக்கம் 96 புள்ளிகள் பின்பக்கம் சுமார் அறுபது புள்ளிகள் என இருந்தாலும், முக்கியமாக வழக்கத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் காது அகுபங்சர் புள்ளிகள் பத்து மட்டுமே. அவை ஷென்மன், சிம்பதெடிக், இருதயம், நுரையீரல், இரைப்பை, மண்ணீரல், வெப்பப் புள்ளி (ஹாட் பாயிண்ட்) முகம் மற்றும் தாடை எலும்பு பாகம், உள் காது பாகம், டிங்குசுவான் போன்றவையே. (படம்-43)

இந்தப் புள்ளிகளில் நீளமான ஊசிகளால் சிகிச்சை செய்வது கடினமாக இருக்கும் என்பதால் தற்போது ஒவ்வொருவிதமான நோய்க்கும் ஒவ்வொரு விதமான ஊசிகள் பயன்படுத்தப்படு கின்றன. இதுதவிர 'அகுபிரஷர்' எனப்படும் முறையில் காது அகுபங்சர் புள்ளிகளை விரலாலோ அல்லது கருவிகளாலோ அழுத்தி கடிகாரம் சுற்றுவதைப் போன்ற கோணத்தில் தேய்த்துக் கொடுப்பதன் மூலமும் மிகச்சிறிய உலோகக் குண்டுகள் பொருத்திய பிளாஸ்டர்களை காதுகளில் ஒட்டியும் நோய்களுக்குச் சிகிச்சையளிக்கலாம்!

காது அகுபங்சர் செய்வதினால், பெரும்பாலும் அனைத்து நோய்களையும் குணப்படுத்தலாம். உடனே நலமும் கிடைக்கிறது. காது அகுபங்சர் சிகிச்சையை எளிதாகவும், சிக்கனமாகவும் செய்ய முடியும். இச்சிகிச்சை மூலம் நோய்களை எளிதாகக் கட்டுப் படுத்தவும் நோயைக் குணப்படுத்தவும் முடியும் காது அகுபங்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காதில் அமைந்துள்ள
உடல் உறுப்புக்களின் அகுபங்சர் புள்ளிகள் (படம் 43)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகளுடன் உடலின் மற்ற அகுபங்சர் புள்ளிகளையும் இணைத்துச் சிகிச்சை செய்யலாம்.

இதைப் போலவே அகுபங்சர் முறையில் மயக்கத்தை உண்டாக்கும் புள்ளிகளும் காதில் உள்ளன. இவற்றைப் பயன் படுத்தித் தகுந்த சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

அதே நேரத்தில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட, சுத்தமான அகுபங்சர் ஊசிகளை காதில் குத்தும்போது ஆழமாகக் குத்தக் கூடாது. கைகளால் திருகவும் கூடாது. இவற்றின் மூலம் இரத்தப் போக்கு, தொற்று போன்றன தவிர்க்கப்படுகின்றன. குறைந்த அளவு மின்சாரத்தால் இயங்கும் தூண்டல் கருவியை பயன்படுத்தத் தகுந்த அளவு உணர்ச்சியேற்றலாம்.

உள்ளுறுப்புகளுக்குச் சிகிச்சை செய்ய காது புள்ளிகளே சிறந்தவை என்று பல அகுபங்சர் நிபுணர்கள் கருதுகிறார் கள். காரணம், கருவில் தலைகீழாக இருக்கும் குழந்தையை ஒத்து, காதின் அமைப்பு இருப்பதுடன், காது அகுபங்சர் புள்ளிகளும் அமைந்திருப்பதுதான்! (படம்-44) காதைப் பற்றி பல சுவையான தகவல்களை முன்னமே அகுபங்சர் ஓர் அறிமுகம் பகுதியில் படித்துள்ளோம்.



ஒரே தோற்றம் கொண்ட காது அமைப்பும் வயிற்றிலுள்ள குழந்தையும் (படம்-44)

**தலை அகுபங்சர் அல்லது மண்டைத் தோல் அகுபங்சர் (Scalp Acupuncture) :**

பாரம்பரிய மருத்துவ முறையையும், தற்காலத்து நரம்பு மண்டல ஆராய்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இந்தப் புதிய முறை சீனாவில் சமீபத்தில் 1966-71-ல் செய்து காட்டப்பட்டது. தலையில் ஏற்படும் அடி (Cerebral Stroke) மற்றும் அதனால் ஏற்படும் பக்கவாதம் போன்ற நோய்களை குணப்படுத்த முடியும்.

உடலில் இயங்கும் 'நரம்பு மண்டல ஓட்டம்' இறுதியாகத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் அதாவது தலையின் மேல் பாகத்தில் தோலில் அமைந்திருக்கிறது. தலையில் ஊசிகளைப் பொருத்தி நரம்பு நோய்கள், வாத நோய்களையும் குணமாக்கலாம். இதுதவிர நரம்புத் தளர்ச்சி, திக்குவாய், சிறுநீர் அடைப்பு, தலையில் அடிபட்டதன் விளைவாக ஏற்படும் நிகழ்வுகள், மண்டை ஓட்டினுள் ஏற்படும் வீக்கம், 'ஜன்னி' வகைகள், வலிப்பு, மூளைக் கோளாறு, ஆண்மைக் குறைவு, அனைத்து வகை வலிகள், அதிக இரத்த அழுத்தம், படபடப்பு, உடல் வீக்கம், ஆஸ்துமா போன்ற அனைத்து நோய்களுக்கும் சிகிச்சையளிக்கலாம்.

**தலையில் அகுபங்சர் செய்யும் இடங்கள் :**

தலையில் அழுக்கு, எண்ணெய்ப் பசை ஆகியவை இருப்பதால் ஊசிகளை முன்னரே சொன்னபடி கிருமி நீக்க முறைகளைப் பின்பற்றி அதன் பின்புதான் தேவையான இடங்களில் பயன்படுத்த வேண்டும்.

தலையில் செயல் பகுதி, உணர் பகுதி, 'கொரியா' (Chorea) நடுக்கத்தை நிறுத்தும் இடம், இரத்த நாளங்களை கட்டுப் படுத்தும் பகுதி, பாதம் மற்றும் மூளை தொடர்பான பகுதிகள், காது தொடர்பான பகுதி, பார்வை பகுதி, சம நிலைப் பகுதி, இரைப்பை மற்றும் மார்புக் கூடு பகுதி, இனப் பெருக்கப் பகுதி, கல்லீரல் பித்தப்பைப் பகுதி என பல பிரிவு இடங்கள் உள்ளன. இவை போன்று வெவ்வேறு வகையான நோய்களையும் குணப் படுத்தக்கூடிய அகுபங்சர் புள்ளிகள் தலையில் இருப் பதால் 'உயிர்ச் சக்தியைத்' தூண்டி அகுபங்சர் மருத்து




மூளையிலுள்ள உடல் பாகங்களைக் கட்டுப்படுத்தும் பகுதிகளுக்குத் தலையில் அகுபங்சர் செய்யலாம். (படம்–45)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் சிகிச்சையளித்து நோயை குணமாக்குவார். இதைப் பற்றியே மேலும் பல செய்திகள் உலக நல மையமும், அகுபங்சரும் தொடர் பகுதிகளில் காணலாம். (படம்–45)

**சூ-ஜாக் அகுபங்சர் (Su-jok Acupuncture) :**

'சூ–ஜாக்' அகுபங்சர் முறை கொரிய நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டது. 'சூ' என்றால் கை என்றும் 'ஜாக்' என்றால் பாதம் என்று அம்மொழியில் பொருள்படும். இதைக் கண்டுபிடித்து உலகம் முழுவதும் பிரபலப்படுத்தி வருபவர் டாக்டர் பார்க் ஜே அவர்கள்.

காதில் எப்படி அகுபங்சர் புள்ளிகள் பரவி உடல் உறுப்புக்கள் அத்தனையுடனும் தொடர்பு கொண்டுள்ளதோ, அதைப் போலவே நமது கைகளும், பாதங்களும் உடற்கூறு அமைப்பை ஒத்ததாக அமைந்துள்ளன. பெருவிரல், தலை மற்றும் கழுத்துப் பகுதி யையும், சுட்டு விரலும், சுண்டுவிரலும் கைகளையும், சுண்டுவிரல்– சுட்டு விரல்களிலுள்ள சிறிய முட்டுக்கள் மேலிருந்து கீழாக முறையே தோள் மூட்டு, மணிக்கட்டு மூட்டு ஆகியவற்றையும் பிரதிபலிக்கிறது. நடுவிரலும், மோதிர விரலும் கால்களையும் அவ்விரல்களில் உள்ள மூட்டுக்கள் முறையே இடுப்பு மூட்டு, முழங்கால் மூட்டு, கணுக்கால் மூட்டு ஆகியவற்றை





உடல் உறுப்புக்களை இயக்கும் உள்ளங்கை சூ ஜாக் புள்ளிகள் (படம்–46)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பிரதிபலிக்கிறது. பெருவிரலுக்குக் கீழே மேடாக உள்ள பகுதி நெஞ்சுப் பகுதியையும், உள்ளங்கையையும், அதை ஒட்டிய பகுதிகளும் வயிறு, கீழ் வயிற்றுப் பகுதிகளிலுள்ள உறுப்புக்களையும் தொடர்புப் படுத்துகின்றன. இவை போன்ற நமது அமைப்புக்களும் பாதத்திலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள அகுபங்சர் புள்ளிகளின் மீது சிகிச்சை அளித்து தொடர்பான உறுப்புக்களின் கேடுகளைச் சரி செய்யலாம். (படம்–46, 46A)




உடல் உறுப்புக்களை இயக்கும் உள்ளங்கால் சூஜாக் புள்ளிகள் (படம்-46A)


இதுபோன்று கை, பாதம், உடல் உருவ ஒற்றுமைகள் எதேச்சையாக அமைந்ததல்ல என்றும், இறைவனால் ஒவ்வொரு மனிதனுக்கும் எந்த மருத்துவரிடமும் செல்லாமல், தமக்குத் தாமே மருத்துவம் செய்து கொள்ளச் செய்த ஏற்பாடு என்றும், இச் சிகிச்சை முறையைக் கண்டுபிடித்த டாக்டர் பார்க் ஜே ஊ கூறுகிறார். மேலும், நமது கைகளும், கால்களும் உடலின் பாகங்களையும் உறுப்புக்களை மட்டுமல்லாது உடலில் உள்ள அகுபங்சர் சக்தி நாளங்களையும் பிரதிபலிக்கின்றன. எனவே அகுபங்சர் சக்தி நாளங்கள் மூலம் நாம் உடலில் செய்கின்ற சிகிச்சை முறையை, நமது கைகளிலும் கால்களிலும் மட்டுமே செய்து சிறப்பான முறையில் பல உடல், மன நோய்களை விரைந்து போக்க முடியும் என்றும் அவர் கருதுகிறார். இப்போது இச்சிகிச்சை முறையும் விரைவாக உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org